[illegible]

[illegible]

1875

O-,892 MPRC
M74
116837

௨

சிவமயம்.

# சித்திராங்கதைவிலாசம்

இஃது
பரதநாட்டியமுதலியசங்கீதசாஹித்ய
வித்வாம்ஸராகிய
குன்டையார்தண்டலம்-ம-ள-ள-ஸ்ரீ

## பரசுராமக்கவிராயரவர்கள்
## இயற்றியது.

திருவண்ணாமலை.

## அருணாசலஐயரால்

பார்வையிட்டு.

ஷ கவிராயரவர்கள்உத்திரவின்படி.
பெரியகாஞ்சீபுரம்.

## வேதகிரிமுதலியாரவர்கள்

கருத்துக்கிணங்க.

தஞ்சாவூர்.
கவி. பொ. ய. செட்டியாரவர்களால்
☞ - அதிகமானபடங்களுடன்
கொன்னூர்.
மாணிக்கமுதலியாரவர்களது
மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

பவ௵—வைகாசி௴ ௨௨.



உ

சிவமயம்.

மதுரைமீனாட்சியம்மன்றுணை.

# சித்திராங்கதைவிலாசம்.

விநாயகர்துதி.

காப்பு - வெண்பா.

சீரார்மதுரையில்வாழ் சித்திராங்கதையெனும்பெண் ... *
பாராளுஞ்சிறப்பைப் பாடவே - காரார் ... ... ... *
தந்திமுகத்தெந்தைமலர்த் தாமரைபொற்றாளிணையை ... *
அந்திபகலுந் துதி செய்வாம் ... ... ... *

இறவுமது - விருத்தம்.

பாண்டியன்றனக்குப்பின்பு பட்டமுந்தரித்துச்செங்கோல் ... *
வேண்டியிவ்வுலகையாளு மெல்லியைவிஜயன்வந்து ... *
தீண்டியேமாலையிட்ட சித்ராங்கதைவிலாசம்பாட .. *
ஆண்டருள்விநாயகன்சே வடியிணைப்போற்றிசெய்வாம் *

முருகர்துதி - விருத்தம்.

திசையிருநான்குமற்றத் தேவர்களிருக்கந்திர ... *
இசைபெறுமுலகமூன்று மிந்திரனெனப்பொல்லா ... *
வசையுறுமசுரர்வாழ்வு மலைகளுமொடுங்கச்சற்றே ... *
அசையும்வேல்முருகன்திவ்ய வடியிணைபோற்றிபோற்றி *

பரமசிவவணக்கம் - விருத்தம்.

நறையிடலவிழுங்கொன்றை நாகவெண்டலைபெருக்கு ... *
பிறையொடுதும்பைகங்கைப் பெருகுசெஞ்சடையாய்போற்றி *
மறைமுடிவினிற்கூத்தாடு மாதுமைபாகாபோற்றி ... *
கறையிடற்றண்ணலேநின் கழலிணைபோற்றிபோற்றி ... *

உமையவள்வணக்கம்-விருத்தம்.

அமையுமிவ்வுலகையெல்லா மளித்திடுமவளேபோற்றி ... *
இமயமால்வரைபயின்ற வீஸ்வரியேபோற்றி *
சமயமாதிருளிக்கரு சத்திசாம்பவியேபோற்றி ... *
உமையவளெனும்பேர்கொண்ட வுத்தமிபோற்றிபோற்றி *

திருமால்வணக்கம் - விருத்தம்.

ஞாலமேவுலகளந்த நளினபொற்பாதம்போற்றி ... *
நீலமேகம்போலெங்கு நிறைமணிவண்ணாபோற்றி ... *
ஓலமிட்டழைக்குஞான வும்பருக்குதவுமாதி ... *
மூலமேபோற்றியுன்றன் மூளரிபொற்பாதம்போற்றி ... *

காளிவணக்கம் விருத்தம்,

வாரியேபோற்றிதுட்ட மகிடசம்மாரிபோற்றி ... *
யாளிமூர்பவளேபோற்றி யரனொடுநடனமாடு . *
காளியேபோற்றிச்சொன்மா தங்கியேபோற்றிபத்த *
காளியேபோற்றியுன்றன்கமலபொற்பாதம்போற்றி *

சரஸ்வதிவணக்கம்-விருத்தம்.

சிரதாம்பிரமனாவிற் சென்றுவாழ்பவளேபோற்றி ... *
பாரதாதிபுராணங்கள் படித்தருள்பவளேபோற்றி ... *
வேதமூலகமெல்லாம் பெற்றமாதாவேபோற்றி ... *
சாரதாம்பாளேயெங்கள் சரஸ்வதிதாயேபோற்றி ... *

அவையடக்கம் - ஆசிரியவிருத்தம்.

மன்னவரும்பாண்டியன்றன் மகளாய்வந்து ... *
மணம்வேண்டாமென்றவள்தென் மதுரையாள் *
பொன்னவரத்தினமிழைத்த முடிதரித்த *
பூவைசித்ராங்கதைசரிதைப் புவியின்மேலோர் *
சொன்னவடநான்மொழியைப் புலவர்பாதத் ... *
துகளதிலுஞ்சிறியேன் செந்தமிழ்விலாசம் ... *
இன்னவகையெனவறிந்து மறியாச்சொன்ன ... *
ஏழையென்மேற்பிழைபொறுப்பீர் நித்தநல்லோரே *

விநாயகர்வருகிற - பொதுவிருத்தம்.

சராசரபுவனமியாவுந் தந்தளித்தழித்துண்டாக்கும் - *
பராபரப்பொருளேசெல்வப் பாலன்வேலவற்குமூத்தோன் *
மராமரந்துளைத்தசெங்கண் மால்திருமருகனென்னு - *
சுராசுரர்முநிவோரியாருந் துதிகணபதிவந்தாரே - *



வசனம்.

உலகமெல்லாந் துதிக்கும்படியான சாம்பசிவனருள் செல்வவிநாயகர் முதலில்வருகிற விதங்காண்க

விநாயகர்வருகிற தரு-இம்-தோடி தாளம்-மட்டியம்.

பல்லவி,

விநாயகர்வந்தார்-ரிதோ-செல்வவிநாயகர்வந்தார் *

அநுபல்லவி,

வில்வமணமிந்த - மேதினியெங்கும் - - *
விசுமனைசொக்கேசர்வாசல்தங்கும் - (செல்வ)

சரணங்கள்.

ஆங்கையற்கண்ணியாமங்கையுமைமாவட்
காணபிள்ளைகலி - தீர்த்தோன் - சொல்லும்
ஆமைமெய்ப்பொருளாகவிளங்குமோ
ராறுமுகவற்கு - மூத்தோன் - சிவ
கங்கையுமாமகன் வெங்கயமாமுகன்
காசினிமுழுதும் - சுத்தோன் - மலர்க்
கண்ணன்மருகன் மூக்கண்ணனடியவர்
கன்முன்னில்குடிய - கூத்தோன் - திவ்ய
மங்களஞ்சேரெழில்பெண்கள் - சிரோமணி
மாதுவல்லபைசமேதனாம் - - சிவ்வியி
தங்கச்சதங்கையிலங்குந் - - நன்னடையனி
தாளிணையாவரும்நாளும் - - வந்தபணி(செல்)

உம்பர்துதிக்குமோர் செம்பன்னடியவ
ருன்னெனுமாலய - வாசன் வரும்
ஊழ்வினையாமதவேழங்களைக்கழுந்
தோட்டுமெங்குச - - பாசன் - மரு
கும்பசெம்பிரணோம்பனெனும்பெயர்
கொண்டசூரியப்பிர - காசன் - இன்னம்
கூறுங்கஜமுகசூரனொடெசரர்.
குலத்தைவென்றக - நேசன் - நந்தி
நம்பனெனுந்திரியம்பக - - - சங்கரன்
நாதநருள்கணநாயக - - - - சேங்கரன்
அம்பிகைபுத்திரஸ்கம்பவி - - - - சித்திரன்
அடைதுக்ரக விகட - - - - சந்தா (செல்),

கட்டியக்காரன்வருகிற-பொது-விருத்தம்

கட்டியையிறுக்கிவெள்ளித் தடியுங்கைப்பிடித்துப்போர்க்குக் -*
கிட்டியேயெழும்பிமேலே கிளம்பியேபாயுஞ்சிங்கக் - - *
குட்டியைப்போலபாண்டியன் கொலுவலங்காரஞ்செய்யக் -*
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே - - *

வசனம்.

அகோதெப்படியென்றால் இராஜாதிராஜனெனுகின்ற பாண்டியராஜன் கொலுவலங்காரஞ்செய்யுங் கட்டியக்காரன் வந்து தோன்றினான் [ங்கா

கட்டியக்காரன்வருகிற தரு.

இராகம் சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாசற்கட்டியக்காரன்வந்தான் ராஜ வாசற்கட்டியக்காரன்வந்தான்.

அநுபல்லவி.

ராஜராஜன்பாண்டிய-மஹாராஜராஜன்கொலு. - (வாசற்கட்)

சரணங்கள்.

கேசரிபோற்கெர்ச்சித்து - ஆரவாரமெச்சரித்து
கிளம்பிக்குவாய்க்குதித்து - - - - - சேற்
கெண்டையைப்போற்பாய்ந்து-கண்டக்காயாராய்ந்து
இடுகிடெனவே - - - - - - - காய்ந்து
வாசலில்நின்றுறக்கி- - - - மீசைமுனைமுறுக்கி
வாருவல்லயமிறுக்கி - - - - - - - நல்ல
வரிசைச்சல்லடந்தட்டி - - சிரசிற்பாகையுங்கட்டி
மண்டலிகரையதட்டி - - - - - எங்கும்
பூரும்வெண்ணீறுநெற்றிப்-பொட்டுமிட்டெங்கும்வெற்றி
விசங்கையினிற்கத்தி - - -வெள்ளித்தடியும்பற்றி
விண்டலமெனகொலு - மண்டலமலங்கிருத
அண்டருமனைநக்கன் - - டிசையிக்கப்பின்
வெருபாக்குமெச்சரிக்கையென - பாண்டிய - *
மகாராஜன்கொலுவலங்காரஞ்செய்யவேண்டிய(வாசற்)

கட்டியக்காரன் - கட்டியங்கூறல்.

பேரிகைமுழங்கபலமேளதாளத்துடன்பெண்கள்நடனங்களாட*
பேசுமறைமுனிவோர்களாசிகூறச் சிலபேர்சோபனங்கள்பாட *



காரியமறிந்தோருமந்திரிகள்புடைசூழ கவிவாணர்புகழ்கூறவே*
கட்டியக்காரர்தடிதட்டியெச்சரிக்கையெனவரிசைமணியாறவே
மாரிபொழிவதுபோலதேவருங்கற்பக மலர்களும்மிகதூவவே *
மண்டலிகரெதிர்கொண்டுதெண்டமெனவேயிரு மருங்குநின்றடி
தாழவே, பாரில்நவரத்தின மிழைத்தசிம்மாசனப் பதியினிற்கொ
லுவிருக்கப், பசுருமெழில்பாண்டிய மகாராஜன்வருகிறார் படைம
ன்னரெச்சரிக்கை - - - - *

பாண்டியராஜன்வருகிற பொது-விருத்தம்

வெங்கயமுங்கனவேலணியித்த மேதினியெல்லையுந்தருஞ்சும் *
அங்கயற்கண்ணியரணிடமமர்ந்த வாலயமணிமதில்சூழும் - *
கங்கையிலுயர்ந்தகாவிரிநதியுங் கற்பகவனங்களுங்கமழும் - *
பங்கயத்திருமுகஞ்சூழ்மதுரையினிற் பாண்டியன் கொலுவில்வந்த [னனே.

கட்டியக்காரன்-வசனம்.

அகோதெப்படியென்றால் இராஜராஜேஸ்பரனாகிய பாண்டியமகாராஜன் தன்னுடைய கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

பாண்டியராஜன்வருகிற-தரு - இ-ம் மோகனம்-தாளந்-திரிபுடை.

பல்லவி

ராஜராஜர்பரவியகொலு மருவியபாண்டிய - மஹாராஜன்வந்தான்

அநுபல்லவி.

வாசத்தருமலர்வனஞ்சூழ்பொழில்தார்மதுராபுரிவாசன் - *
அதிபலமதில்மிகும்ஜெகதீசன்-மதிகுலபதியெனுமக(ராஜரா)

சரணங்கள்.

சிரசதனிலணிமகுடமுடியணி-இயங்கிட ... யெச-இரு
செவியிற்குண்டல-மிரவியிவெனவொளியென - செகமெங்கையும்வீச
உலாசெய்மகிலயெனுமுயர்ந்தபுஜகிர்த்தி-ஒளிரும்பொற்பிரகாச-இ
ருந்து, உலகிலோரைமும்வின்கொள்ளார்மணிரத்நமலர்... வாச-நல்ல
வரிகைபெறுதிலையக்கி - - குன்றிரமும்
வாங்கிவேந்திய மலர்க்கை யந்திரமும்
அரசராடிபணிந்-தாசைசெய் - தோத்திரமும்
அளகைநேர்மதுரைநகர்சேர் - சேத்திரமும்
பணிவளர்பிரதாபன்-இலங்குநவ-மணிவிளங்குமார்பன் - மிக
சூரபாரர்படை-வீரசூரர்புடை ... *
சாரநேர்வெண்குடை-சோகொப்பிரான் - *
துசமதிபுத்திபிமோகன-ராகப்புதுஞ்சித்திரவாகன (ராஜராஜ)

இராஜன்-கடவுளைப்போற்றிய-விருத்தம்.

ஆழிசூழுலகம்போற்றி அருமறையவர்கள்போற்றி - *
ஆழிமாலயனுங்காணு அரனடிகளையெய்தும் - *
ஊழியஞ்செய்யுமன்பர் உறுபயிர்குடிகள்போற்றி *
ஊழியவினையறக்கும் உமையொருபாகாபோற்றி *

கட்டியக்காரன்-இராஜனுக்குப்போற்றி கவி.

சட்டமுடனவரத்தினமிட்டசிம்மாசனத் தலைவனேயெச்சரிக்கை *
தாணிமேருமேர்குடைநிழலிலாசனுந் தயாபரா எச்சரிக்கை
திட்டமுடனெழில்மதுரை பட்டணந்தனில்வாழும்தீரனேயெச்சரி
க்கை, திங்கள்குல வீரனேமங்கைகுணவிசித்திர தேவனேயெச்சரிக்
கை,மட்டலருமலர்மாலையணிபுயபாலமன்னனேயெச்சரிக்கை *
மாதுமீனாட்சியிருபாதமலர் அதிசெயமடியனேயெச்சரிக்கை *
பட்டவர்த்தனர்கள்கைகட்டியெதிர்நின்று பணியாதனே எச்சரிக்
கை, படைமன்னர்குருகோடி புடைசூழவேவரும்பாண்டியராசெ
[ருபாக்கு

முதல்மந்திரி-இராஜனுக்குச்சொல்-மட்டுவிருத்தம்.

ஏதமில்லாச்சோழன்போற்றி ... ... *
நீதிவழுவாதிருபாபோற்றி ... ... *
ஆதரித்தெனையாள் அமுதேபோற்றி ... *
சோதிசேர்பாண்டியதுரையேபோற்றி ... *

இரண்டாமந்திரி-இராசனுக்குப் போற்றி-விருத்தம்

பொதியமலைவாரொருபால் பொற்பமுமத்தடமொருபால் *
பொங்குங்கைவை ... ... ... *
நதியொருபாலந்தருவினந்தவனங்களுமொருபால் *
நவில்சொக்கேசர் ... ... *
வதியுமொருகளைமொருபால்வாழ்மாடக்கூடமுங்கூழ் ... *
மதுரையென்றும் .. ... ... ... *
பதியிலிருந்தரசாளும்பாண்டியனேநின்கமலப், ... *
பாதம்போற்றி ... ... ... *

இராஜன் தேசவிசாரணையும்-மந்திரிவிடையும்.

சீர்பரவுமிவ்வுலகில்மாதமும்மாரியும் ... *
தேசமெங்கும்பெய்யுதா ... ... *

தெண்டனிட்டுரைசெய்வேன் கொண்டல்மும்மாரிபோர்
திங்களிற் பெய்யுதையா ... ... *



ஜெகதலந்தனில்மன்னர்மண்டலீகர்கப்பஞ் ... *
செலுத்திவருகின்றார்களா ... ... ... *

செல்லாமற்காசளவுபாக்கியில்லாமற் ... ... *
செலுத்துகின்றார்களையா... ... ... *

ஏர்பரவுதமுதலிலுழுவாயிர்செய்குடிக *
ளெல்லாருமிகக்ஷேமமா... ... ... *

ஏகசக்ரேஸ்வராயிர்செயுங்குடிகளுக் ... *
கிடரொன்றுமில்லையையா ... ... *

இன்பமிகுசெம்பொன்மணிகள்முதலாயன்னை ... *
மிட்டுண்டிருக்கிறாரா ... *

இயலாகமுப்பத்திரண்டுதருமங்களும்... ... *
ஈய்ந்துவருகின்றார்களோ ... *

பார்பரவுதேவாலயங்கள்பிர்மாலயப் ... ... *
படித்தரங்கள்நடக்குதா ... ... *

பவர்பிர்மோச்சவமுதல்நித்யோச்சவம்பஞ்ச ... *
பருவமும்நடக்குதையா ... ... *

பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர்களும்என்னைப் *
பணிந்துவருகின்றார்களா ... ... *

பகவனென்றுன்னைத்துதிசெய்துமனமொருமிக்க ... *
பக்கம்நிற்கின்றார்களோ ... ... *

நீர்பரவுமோர்துறையில்கோவும்புலியுஞ்சென்று ... *
நீராக்குடித்துவருதா ... ... *

நேமியாக்கினைகளிப்படியநகன்தப்பாது ... *
நிலைநீர்குடிக்குதையா ... ... ... *

நிலைமையாய்ப்பிராமணர்கள் ஆசாரநித்தியபத *
நெறியினிற்கின்றார்களா... ... ... *

நியமமதுதப்பாதல்நாதஜெபதபமதில் ... *
நிற்கிறார்மகாராஜனே ... ... ... *

இராஜன்-மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்.

மதிமந்திரிமாரேகேளீர் வளமிகுமதுரையென்னும் ... *
பதியரசாளவென்மின் பட்டத்துக்காளில்லாமல் ... *
கதையிருந்தென்னசெங்கோல் கனத்தனுஞ்செய்பலாமா *
விதிபதிந்தெனக்குதன்றாய் விளம்புவீர்விளம்புவீரே ... *

வசனம்.

கேளுங்கள் மதியிலிருந்த மந்திரிகளே இந்தமதுரைப்பட்டணம் இளவரசாளும்படியாய்ப் பிள்ளையில்லாமல் பெண்பிறந்திருக்குதே யெனக்குப்பின்பு பெண் அரசாட்சிசெய்வது இந்தப் பூலோகத்திலுண்டா அதற்கென்னசெய்யலாம் முன்னோர்வேதசாஸ்திரங்களில் மொழிந்திருப்பார்களே இதையறிந்து ஆலோசனை சொல்லுங்கள் மந்திரிகளே.

முதல்மந்திரிசொல் விருத்தம்.

வெண்ணெயிருக்கநெய்தான்வேண்டியதென்ன அந்தப் *
பெண்ணையோர்மன்னர்க்கீய்ந்துப்பிள்ளையைச்சிகாம்பெற்று
மன்னரசாட்சிசெய்ய மணிமுடிதரிக்கலாமென் ... *
றெண்ணியேவேதசாஸ்திரம் எடுத்துரைக்கின்றதையா *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரா வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கழவேண்டியதென்ன பட்டத்துக்குப் பிள்ளையில்லாமல் பெண்பிறந்திருந்தால் அந்தப்பெண்ணையொருஇராஜகுமாரனுக்கு விவாகம்பண்ணிவைத்து அவள்வயிற்றிற்பிறந்தபிள்ளையைப்புத்திரசிகாம்பெற்று இளவரசபட்டம் கட்டலாமென்று அனேக வேதசாஸ்திரங்களில் முறையிட்டிருக்கு ஆகையால் அப்படிக்கேசெய்வது சர்வோத்தமம் சுவாமி,

இரண்டாம்மந்திரிசொல்-விருத்தம்.

சர்க்கரைப்பானைக்கீக்கள் தாந்தேடவேண்டியதென்ன - *
அக்கரையாகமன்னர் அநந்தம்பேர்மதுரைவாழும் - *
சொக்கலிங்கரணவத்தன் சுதையைவேண்டுவர்கள் அதிட *
திக்கனாநொடிக்குள்நாமே ஜெயித்தரசாளலாமே - *

வசனம்.

கேளும்இராஜபரமேஸ்வரா சர்க்கரைப்பானைக்கு ஈக்களைப்பிடித்துவிடவேண்டுமாவேண்டியதில்லை அதுகள்தனக்குத்தானே வந்து மொய்த்துக்கொள்வதுபோல மதுரைசொக்கநாத சுவாமியைத் தெரிசிக்கும்பொருட்டாய் அனந்த இராசாதிபதிகள்வந்து நமது அம்மாளாகிய சித்திராங்கதையை விவாகம்பண்ணிக்கொள்ளவருவார்கள் அவர்களில் ஒருவருக்கு விவாகம்பண்ணிவைத்து அவள்வயிற்றிற்பிறந்தபிள்ளையை புத்திரசிகாம்பெற்று இளவரசபட்டங்கட்டினால் அதிட்டிக்கும்செயித்து அரசாளலாம்சுவாமி.

இராசன்மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்.

யோசனைசரிதான்சொன்ன தொன்றுக்கொன்றுயர்ந்தவார்த்தை *
வாசனைமலரெடுத்து மதுரைவாழ் சொக்கரொன்றும் ... *



ஈசனையங்கயற்கண் ணெனுமுமையவளைநாளும் ... *
பூசனைச்செய்துபெற்ற புத்திரியையழைத்துவாரீர் ... *

வசனம்.

வாருங்கள்மந்திரிகளே மதிமந்திரிமார்களென்பது உங்களுக்கேதகும், ஆ-ஆ-ஆ-நல்ல ஆலோசனையறிந்து சொன்னீர்கள் இதுவேசரி இந்த மதுரை சொக்கநாதசுவாமி மீனாட்சியம்மன் இவர்களது கிருபாகடாட்சத்தினாலே நான்பெற்றபுத்திரியாகிய சௌந்தர சவுபாக்கியவதி சித்திராங்கதை இந்தஆலோசனைக்குச் சம்மதிக்கவேண்டுமே ஆகையால் அவளை அதிசீக்கிரமாய் இச்சபைக்கு அழைத்துவரும்படிசெய்யுங்கள் மந்திரிமார்களே,

மந்திரி-கட்டியனுக்குச்சொல்-விருத்தம்.

கையினிற்றடியைக்கொண்ட கட்டியக்காரனேவாய் ... *
ஐயன்பாண்டியன்றன்முன்செய் அருந்தவமதனால்வந்த *
தையல்சித்திராங்கதையைத் தந்தையானழைத்தாரென்று *
வையகம்புகழ்சபைக்கு மகிழுடனழைத்துவாராய் ... *

வசனம்.

வாராய் கையிற்றடியுடைய கட்டியக்காரா - பாண்டியமகாராஜன் அழைத்துவரச்சொன்னாரென்று சித்திராங்கதை யம்மாளை அதிசீக்கிரமாய் இச்சபைக்கு அழைத்துவாரும்பிள்ளாய் (அப்படியே அழைத்துவருகிறேன்சுவாமி.)

கட்டியக்காரன் சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

உருவளரங்கயற்கண் ணுமையவளருளினாலே ... *
மருவளர்கமலமேவும் மாதெனவுனையளித்த ... *
தருவளர்மதுரையாளுந் தந்தைபோலைக்கிப்போது *
திருவுளமகிழ்ந்தெழுந்து சித்திராங்கதையேவாராய் ... *

கட்டியக்காரன்சொல்-வசனம்.

கேளுஞ்சித்திராங்கதைத்தாயே உன்னையுங்கள்தகப்பனார் சபைக்கழைத்துக்கொண்டுவரச்சொன்னார் அதிசீக்கிரமாய்வாரும்மா;

சித்திராங்கதை கட்டியக்காரனுக்குச்சொல்-மட்டுவிருத்தம்.

தந்தைசொல்லுக்குத்தாட்சியொன்றுண்டோ *
விந்தையாயிப்போ விரைந்துமேபோவோம் *

வசனம்

கேளும்கட்டியக்காரா எனதுபிதாவழைத்ததெங்கும்பேசி தற்கும் வாய்வருமா ஆகையால் இடனே போவோம்கட்டியக்கார

சித்திராங்கதை-சபைக்குவருகிற-பொது-விருத்தம்.

வலம்புரிதவழுஞ்செந்நெல் வயல்கள்சூழ்மதுரையென்னும்
நலம்பயில்சொக்கநாதர் தாளிணைபணிந்தென்றும் *
நலந்தருமங்கைபற்கண் ஞூபதிபாதம்போற்றி *
சிலம்பொலிகலகலென்னச் சித்திராங்கதைவந்தாளே *

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் இராஜராஜேஸ்பராகிய பாண்டியமகாராஜன் புத்திரியாகிய சித்திராங்கதையம்மன்கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

சித்திராங்கதைவருகிற தரு-இ-ம் பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மாரனிரதியேங்கி-தாரணியெழில்தாங்கி
மாதுசித்திராங்கதைவந்தாள்- வடிவழகி - மாதுசித்திராங்கதைவந் [தாள்

அநுபல்லவி.

பாரினிலிவட்கிணையாரொனஅா ... சாட்சி
பண்ணப்பாண்டியனொரு பெண்ணைவேண்டிமீனாட்சி
சிரினியுயர்பாதாம்போருகமலர் ... காட்சி
தினமுங்கண்டுதரிசிக்க ... உமையவள்தந்த
வனமிதென்றுவடி ... வழகதனில்மிகுந்த (மார)

சரணங்கள்.

கொண்டலளகபாரம்-கண்டலரிக்கவிரை
குவலயந்தனிற் ... ... றலிக்க இளங்
குழவிவெண்டிங்களுத-லெழில்கண்டுதனிமுதல்
கொன்றைவேணியி ... லொளிக்க - சேற்
செங்கைசனிருவிழிக்-கன்னடையிலனுகாமல்
கேணிநீரினிற் ... ... குளிக்க - நல்ல
கிளர்பூரணச்சந்திரன் ... ஒளிர்தனங்கண்டஸ்த
கிரியிற்சென்றுதத் ... தளிக்க - இந்த
மண்டலத்திற்செவ்வாம்பல்மலர்வாய்மொழிக்குப் பஞ்ச
வர்ணக்குயில்களுந்தே மாங்குயில்களுங் கொஞ்சத்
தண்டளமணிக்குத் தந்தங்களொழின் .. மிஞ்ச
நடமலைகளுந்தங்கக் குடமுலைகளுக் ... கஞ்ச
தாமலர்மலர்செங் ... கையும் - மாந்
தளிரொனவொளிர் ... மெய்யும் - வல்லி
சாதக்கொடியினு ... தையும் - இடை
தனில்மின்னலுந் தரி ... செய்யும்-அல்குல்



சர்ப்பபடத்தையும் ... பழிக்கும் - மணித்தண்டை
பொற்பின்வரையையிற் ... செழிக்கும் - கனக்கால்
கெற்பவிரால்களை ... நகைக்கும்-மென்னடை
கொப்பிலயனமென ... சொற்பதந்தனிலணி
தண்டைசதங்கை ... கலிலெனமனமகிழ்
கொண்டுவந்தவள்நினைக் ... கண்டுசேந்தரந்திகழ்
தந்தைசொற்றவறாமல்-சிந்தையில்மகிழ்ந்துகொண்டு
வந்தவள்தன்னோக்கண்டு ... பந்துவராளியின்டு (மார)

சித்திராங்கதை - தந்தையைப்போற்றுகிற - பத்தியம்.

இ-ம்-புன்னாகவராளி.

ஐயனேயெழில்மேருமெய்யனேயென்னையருள்
அப்பனேயுன்றனிணையடிகள்போற்றி
அரசனேமணிமகுடசிரசனேபாமசிவன்
அன்பனேயுன்றனிணையடிகள்போற்றி
அத்தனேதேசபரி சுத்தனேயென்னையாளும்
அன்னைலேயுன்றனிணை யடிகள்போற்றி
ஆதிவேபுகழிமதுந்திசெய்வடிவார்த்த
அம்புஜநிகர்த்தவுன் அடிகள்போற்றி
இந்துதமகிழ்வாய்ப்பாமசிவன்பதத்தை
சந்ததமுந்துதிசெய்தென்றனையளித்த
எந்தையேபோற்றியிணையடிகள்போற்றி
தந்தையேநின்கமல சரணம்போற்றி

இராஜன்-குமாரத்திக்குச்சொல் - விருத்தம்.

மந்திரமுனிவர்போற்றும் மதுராவாழ்சொக்கநாதர் ... *
சுந்தரியெனுமீனாட்சி அகத்தயங்கயப்பதிலை ... *
ஐந்தருமலர்களானல் லருச்சனைசெய்துநாளும் ... *
செந்திருவெனவுதித்த சித்திராங்கதையேவாழி ... *

வசனம்.

வாழிவாழி சித்திராங்கதைத்தாயே எழுந்திருமம்மா.

சித்திராங்கதை தந்தைக்குச்சொல் - கொச்சகம்.

மதிநதிபும்புன்சடையார் மதுராசொக்கநாதனாரும் ... *
சதிதருமீனாட்சியையும் கருதிநேமிக்காலமுநாய் ... *
அதிசெய்தென்றனையளித்த துரைகள்சிரோமணியே .. *
அதிசயமேதெனயழைத்த ததியுநாசெப்பீரே ... *

வசனம்.

சந்திரனையும்சூரியனையும்நிகர்த்தசபாபாத்தோடுகூடியமதுராசொக்கநாதனுவாமியையும் மீனாட்சியம்மனையும் தெரிசனம்

நினைத்து அரியதவஞ்செய்து என்னையளித்தஐயனே அடியாளை இச்சபைக்கு அழைத்ததென்ன அருளிச்செய்யும் என்றந்தையே,

இராஜன் சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

திருமகள்நிகராய்வந்த சித்திராங்கதையேயுன்னை ... ✻
மருமணஞ்செய்வித்தன்றன் மைந்தனைச்சிகாரம்பெற்று ✻
திருமகாஸ்த்திரப்படிக்குத் தங்கமாமகுடஞ்சூட்ட ... ✻
ஒருமையாய்மனதில்நல்ல யோசனைசெய்தேனம்மா ... ✻

வசனம்.

இவ்விபமங்களமாலிக்க மகாலட்சுமிக்கு நிகராய்வந்தவதரித்த சித்திராங்கதைஅம்மணி உன்னையொருஇராஜகுமாரனுக்கு விவாகம்பண்ணிவைத்து உன்வயிற்றிற்பிறந்தபிள்ளையை நான்புத்திரசிகாரம்பெற்று இளவரசுபட்டங்கட்ட எண்ணங்கொண்டிருக்கிறேன் அம்மணி,

சித்திராங்கதை-தந்தைக்குச்சொல்-விருத்தம்.

சிவசிவசொக்கநாதா தெய்வமேகதியென்றெண்ணி ... ✻
பவனிவாரணஞ்செய்நல்ல பதிவிரதங்கள்பூண்டு ... ✻
தவனிலதன்னில்யாரும் சங்கராவென்றிருக்க ... ✻
அவனியிற்றந்தைசொன்ன ஆக்ஞைக்கென்னசெய்வேன் ✻

வசனம்.

சிவசிவா சொக்கநாதசுவாமி மீனாட்சித்தாயே தெய்வமேகதியென்று பாபநிக்கிரகம் செய்யும் நல்லபதிவிருதத்தில் நானிருக்க என்றந்தையாகிய பாண்டியமகாராஜன்சொன்ன ஆக்ஞைக்கு நான் என்னசெய்வேன்தெய்வமே.

சித்திராங்கதைசொல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

தந்தைசொல்வார்த்தையைத்தள்ளி விந்தைவேறுரைக்குங்கள்ளி
தானவனாகுவேனோ சங்கரா - இந்தத்
தாரணியெங்கும்புகழும் - நிறவிக்கடவுளென்
சத்தியம்பொய்த்துப்போவதோ ... சங்கரா
என்றனையொருவர்க்கீந்தென் - மைந்தனைசிகாரம்பெற்று
இளவரசினைச்செலுத்த ... ... சங்கரா - தந்தை
என்னின ஆலோசனைக்குபுன்னைநிற்கோலிட்டாற்போலானேன்
எதிர்மொழியென்னசொல்லுவேன் சங்கரா
பதிவிரதங்கள்பூண்டு - மதனாயினவரசி
பட்டமுநாங்கட்டுவல்லேனோ ... ... சங்கரா - இந்த



பாரொலாமொருகுடைக்கீழ்-ஆளலாமென்றிருந்தேனே
பரமனேநின்செயலோ ... ... சங்கரா
மதியிசகோளென்றுல-விதிவசமோதந்தைசொல்
வார்த்தைக்குநானென்னசெய்வேன் சங்கராபெற்ற
மாதாபிதாவும்சொன்ன நாதாநீயிருக்க
மற்றுமனமென்றறுக்கேன் ... ... சங்கரா
நதிமதியணிவேணி-பதிபதியாய்க்காணி
நானரசாளவேனும் ... ... சங்கரா
ஞானத்தவிழியரும்-ஆனந்தபைரவி
ராகமருளச்செய்வாய் ... ... சங்கரா

சித்திராங்கதை-தந்தைக்குச்சொல்-விருத்தம்.

அப்பனேயென்னையீன்றஐயனேபொய்வாழ்வென்றும் ✻
இப்பிறப்பிறப்பொழிக்கவென்பொற்பாதந்தேடி ... ✻
தற்பெறும்விரதம்பூண்டேன்காமக்குரோதந்தையென்றன்
சொற்பனந்தனிலுமந்தச்சகத்தைநான்நினைக்கமாட்டேன் ✻

வசனம்.

கேளும் என்றந்தையே பூலோகமாய்கையென்றும்பொய் வாழ்வுக்குட்பட்டு இப்பிறப்பையொழிக்க பேரின்பத்துக்குரிய பரமசிவன் பாதாரவிந்தத்தைச்சேர பதிவிரதமென்றும் தவநிலையைக்கைக்கொண்டுபோராசாருவேயல்லாமல்-காமம்-குரோதம் லோபம்-மோகம்-மதம்-மாச்சரியமென்றுசொல்லப்பட்ட சிற்றின்பத்துக்குட்பட்டு ஒருவருக்கும் மணமாலைசூட்டமாட்டேன் என்றந்தையே.

இராஜன்கடவுளைநினைந்துசொல்-விருத்தம்.

அரகராசொக்கநாதா ஆட்சிமீனாட்சித்தாயே ... ✻
பெருமைசேருலகையாளப் பிள்ளையைத்தந்திடாமல் ... ✻
மருமணம்வேண்டாமென்றும்மகளையென்றனுக்களித்தாய் ✻
திருவுளந்தனிலிசைந்தச் செயலைநானறிகிலேனே ... ✻

வசனம்.

அரகரா சொக்கநாதசுவாமி மீனாட்சித்தாயே இந்தமதுராப்பட்டணம் இளவரசாளும்படியாய் ஆண்பிள்ளைவேண்டியதற்கு ஒருபெண்பிள்ளையை அருளிச்செய்தீர்களே திருவுளச்செயலிப்படியிருந்தால் நானென்னசெய்வேன் தெய்வமே.

இதுவும்-பாண்டியன்கடவுளைநினைந்து-விசனப்படுகிற-தரு-

இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்

கண்ணிகள்.

வெங்கயமுகனையருள் ... கங்கையொடுதிங்களணி
வேணியே-ஆல ... ... பாணியே-வடி
வேல்முருகனையுதவும் ... சேல்விழியுமைமருவும்
மெய்யனே-எல்லா ... ... ஐயனே
பங்கயனுமாலுமுலை ... கெங்குந்தேடரியபாமலர்ப்
பாதனே-சொக்க ... ... நாதனே-ஒரு
பாலனில்லாப்பாக்கியமினிமேலென்னதிலாக்யமென்றன்
பட்டமும்-செங்கோல் ... ... திட்டமும்
நிகரில்லாஎழில்மதுரை ... நகரில்பொன்முடிதரித்து
நிலத்திலே-சந்திர ... ... குலத்திலே
நீதிவழுவாமலிந்த ... மேதினியாள்வதென்னுடன்
நின்றதே-காலம் ... ... சென்றதே
பகருமென்வார்த்தையைக்கேளாய் மகவைப்பெற்றும்
பிள்ளையில்லாப்-பாவிநான்-படு ... பாவிநான்-இந்தப்
பாரினிலெனக்குப்பின்னிந் ... காரிணிராச்சியபாரம்
பண்ணுவார் பின்னை ... ... யெண்ணுவார்
சித்திராங்கதைக்குமணஞ் செய்யவும்அனேகவார்த்தை
செப்பியேயிருந்த ... ... தப்பினும்.அவள்
இவளிருபாதத்தைக்காணும் - நவநெறியைக்கண்டுமனந்
தேறினன்-வார்த்தை ... ... கூறினன்
மகள்வயிற்றினிற்பிறந்த ... மைந்தனைப்புத்திரிகாசம்
வாங்கவே-செப்பினேன் ... தாங்கவே-இந்த
மண்ணிளவரசுசெய்ய எண்ணினஎண்ணமும்பொய்யாய்
வாச்சதே-தப்பிப் ... ... போச்சதே
இகபரந்தனினும்இன்பம் சுகந்தருஞ்சதியைக்கண்ட
தெப்படி-முன்னோர் ... சொற்படி-யெயால்
என்னுந்தன்னிருவிழிக்கப் பிள்ளையில்லாப்பாவியானேன்
ஐஸ்வரா-ஜெக ... ... தீஸ்வரா
பாலனற்றபாவியென்று ... பாரிலென்னையேசகலம்
பழித்ததோ-மனது ... சலித்ததோ-விட
பன்னகாபரணனேநான் ... புன்னாகவராளிராகம்
பாடினேன்-மெத்த ... ... வாடினேன்



இராஜன் சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்,

சதிதரும்சொக்கநாதர்கழலடியிணையைக்காண ... *
பதிவிரதமிக்கள்பூண்ட பாவைசித்திராங்கிதாயே ... *
நதிபெறுநமதுசெங்கோல் அனைத்தனமழிந்ததாலும்
மதிபெறுமுன்னையாளும் மன்னர்கள்நகைத்திடாரோ

வசனம்.

பேரின்பத்துக்குரியசொற்கபதவியைக்கொண்டிருக்கும்சொக்கநாதசுவாமி திருவடியைக்காணத் திவ்விய பதிவிரதம்கொண்டிருக்கும் சித்திராங்கதை அம்மணி இந்த மதுரைப்பட்டணம் அரசாளும்நமது செங்கோலும் அனைத்தனமும் அழிந்துபோச்சுதால் நம்மைப் பூலோகத்திலிருக்கப்பட்ட இராசாதிபதிகள் நகைக்கமாட்டார்களா நானென்னசெய்வேன் அம்மணி

சித்திராங்கதை-தந்தைக்குச்சொல் விருத்தம்.

நகைத்துமுப்புரமெரித்த நாதர்தன்னருளால்நம்மை ... *
பகைத்தசத்துருவைவென்று பாரசாள்வேனல்லால் [சு
வகைதித்திடுமுலகிலிற்பொய்வாழ்வைமெய்யெனச்சிற்றின்ப
சுகத்திற்குட்பட்டுமாலைச் சூட்டவுமாட்டேனையா - *

வசனம்.

கேளும்என்றந்தையே நம்மைநகைக்கின்றவர்களும்பூலோகத்திலிருக்கின்றார்களா நானென்ற ஆணவங்கொண்ட முப்புராதிகளைச் சிரித்தெரித்த பரமசிவன்கிருபையினாலே நம்மைப்பகைத்த சத்துராதிகளைச்செயித்து இளவரசுபட்டங்கட்டிக்கொண்டுராச்சியபாரம்பண்ணுவேனல்லாமல் பூலோக மாய்கையென்னும் பொய்வாழ்வுக்குரிய சிற்றின்பசுகத்திற்குட்பட்டு ஒருவருக்குமாலைசூட்டமாட்டேன் என்னுடையதந்தையே,

சித்திராங்கதை தந்தையினருகில்விசனப்படுகிற-தரு

இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்

[கண்ணிகள்,]

சிவசிவாநானிந்தமொழிக்கேட்கவோ - தந்தையே-பெண்
சென்மமெடுத்துத்தெருவில்வந்தேனோ தந்தையே-இந்தப்
புவனத்தில்நானொருபுருஷனைத்தேடியே ... தந்தையே - நல்ல
பூமாலைசூட்டிப்புணரவுமாட்டேனே ... தந்தையே- காமக்
குரோதலோபமோகமதமாச்சரியமென்றுந்தந்தையே.பொல்லாச்
சத்துருவலையிலிற்கட்டுப்படுவலாமல் ... தந்தையே-சோம

சேகரனென்றுசொல்சொக்கநாதஸ்வாமி ... தந்தையே-மலர்த்
தாளையடிகண்டவர்க்கிணையுண்டோசொல்லுமென் - தந்தையே
மாயந்தேருமுலகவாழ்வினைமெய்யென்று... தந்தையே - நல்ல
மருமணஞ்செய்வதில்வருகுணமேதையா தந்தையே - ஒரு
சேலையப்பெறாவனும்செல்வத்தைப்பெறுவனுந்தந்தையே.வருஞ்
செனனமரணமென்றதிவினைக்கிடமல்லோ தந்தையே - நல்ல
பதிவிரதங்கொண்டிப்பாவத்தைப்போக்கிறல் தந்தையே - ஆதி
பரமசிவனாரல்லவரமெனக்குத்தருவார் ... தந்தையே - ஆதி
மதுரைமீனாட்சிபொற்பாதமலரைக்கண்டு ... தந்தையே - இந்த
மாநிலமுன்றன்பின்நானரசாளுவேன் ... தந்தையே - இர
மன்னர்க்குயிடாய்மணிமுடிசூட்டுமென்- தந்தையே-செங்கோல்
கவிச்செலுத்தபுன்றுகலாளிச்சொன்னேன்-தந்தையே

இராசன்-சித்திராங்கதைக்குச்சொல் விருத்தம்,

இளவரசாளுவேனென்றியம்புமென்மகளேநீநாயே ✻
உளமகிழ்ந்தாலகையாளும்டீன்றனுக்கனித்தியம்வந்து
களங்கறுத்தவருக்காளாங்காலத்திலுனக்குப்பின்பு - ✻
வளமிகுமதுரையென்னும் மாநகராள்வதாரோ .. ✻

வசனம்,

கேளாய் சித்திராங்கதை அம்மணி நல்ல பதிவிரதத்தி லிருந்து இந்தமதுரைப்பட்டணம் இளவரசாள்வேனென்று சொல்லுகிறாய் உனக்கு அனித்தியகாலஞ்சம்பவித்து கண்டங்கறுத்த பரமசிவன் ஆட்கொள்ளவருங்காலத்தில் இந்தமதுரைப்பட்டணம் அரசாள்வது ஆர் எனக்குத்தெரியச்சொல் அம்மணி.

சித்திராங்கதை தந்தைக்குச்சொல்விருத்தம்

பதிவிரதங்கள்கொண்டிப்பாராசாளுநாளில் - ✻
நதிமதியணியுஞ்சொக்கநாதர்மீனாட்சியம்மன் ... ✻
கதிதந்தென்றனையாட்கொள்ளுங்காலம்வந்துற்றபோது
மதிமந்திரிகுமாரர்கட்கு மணிமுடிசூட்டிவைப்பேன்

வசனம்,

கேளும் என்தந்தையே நான்கொண்டபதிவிரதா தபோபலத்தால் இந்தமதுரைப்பட்டணம் இளவரசாளும் எனக்கு அனித்தியத்தில் கங்கையையும் மூன்றாம்பிறைச்சந்திரனையுந்தரித்தகடவுளாகிய சொக்கநாதஸ்வாமி மீனாட்சியம்மனுமேதராய் எழுந்தருளிவந்து பாதசரிசனந்தந்து என்னையாட்கொள்ளவரும்போது நம்முடைய மந்திரிகுமாரர்களுக்கு இந்த மதுரையைப் பட்டங்கட்டிவைப்பேன் என்தந்தையே,



இராசனுக்கும் சித்திராங்கதைக்கும்-சம்வாதம்-முகாரி இ-ம்-அட
[தாளம்

மந்திரிகளிந்தமதுரையரசாள
மணிமுடிசூட்டுவே ... - னென்றாய்-நகன்
றாளையடிகாட்டுவே - - னென்றாய்-சொல்லும்
தந்திரமிகுந்தமகேந்திரசாலவித்தைத்
தானெங்கேகற்றாய் - - என்மகளே

சித்திராங்கதை-இராசனுக்குச்சொல்-தரு-டை-ராகம்-தாளம்.

கற்றசித்திரஜாலவித்தையென்றீர்முடி
காவிலையயாளுட் - - டேனோ-கொண்டு
வேவிகளாகமாட் - - டேனோ - என்னைப்
பெற்றதகப்பனுடன்கற்றவித்தைகளைநான்
பேசநெஞ்சவிதம் - தந்தையே

இராசன்-சொல்லல்,

பேசினதாலொன்றும்மோசமில்லையென்றன்
பெண்ணரசே - - நீயிப்போது-இந்த
மன்னரசாளத் - - - தகாது புகழ்
காசினிதன்னிலேராசகுமாரனைக்
கல்யாணஞ்செய்துகொள் - - - மகளே

சித்திராங்கதை-சொல்லல்

கல்யாணமென்றுநீசொல்லவேண்டாம்கரும்
மாட்டேன் - ஒரு
கணவனுக்குட்பட - - - சூட்டேன்-இந்த
மணவனுக்கேமாலை - -
எல்லையிற்பிறப்பென்றும்அல்லலதுநென்றெனமம்
தந்தையே
ஈடேறவேணுமென் -

இராசன்-சொல்லல்

செம்மைநடேறதற்கின்மையமாம்பொருள்
தேடவுமெய்த்தெறிக் - - கண்டாய்-முடி
சூடவும்பொய்யெறி - - கொண்டாய்-இனி
உன்மனதின்படிபொன்முடிசூட்டினால்
உலகரசாள்வாயோ - - - - மகளே

சித்திராங்கதை-சொல்லல்

உலகரசாளநான்பலகலைக்கியானங்கள்
ஒழிக்கவில்வ - - - ஞானத்தேன்-மது

நீதியெல்லாந் - - - தெரிந்தேன்-பதி
கொலைகளவுசெய்வோர்தலைகளைக்கொய்துசெங்
கோலுஞ்செலுத்துவன் - - - தந்தையே

இராசன் சொல்லல்,

செங்கோல்செலுத்தமுன்னே இங்கோர்மன்னவனுன்னைத்
தேடிவந்தாலென்ன - - செய்வம்-விதி
கூடிவந்தால்சொன்ன ... - தெய்வம்-ஒருவர்
பங்கோடுன்றனுக்கென்னபொங்கோமுகாரிராகம்
பாடிபழவேண்டா - - - மகளே

சித்திராங்கதை-சொல்லல்.

என்பங்கில்மீனாட்சிஅம்பிகையிருக்கத்தாட்சி
எளிதமோசம் - - - வாராது-வந்தால்
ஆளிதமாகும் - - - சோறு - பேர்
இன்பங்கிடைக்கும்நிரேகம் அன்பாய்முகாரிராகம்
இயம்புவன்கேளுமென் - - தந்தையே

இராசன்மந்திரிக்குச்சொல் விருத்தம்

காலமோர்மூன்றுமுள்ளங் கைநெல்லிக்கனிபோற்றேர்ந்து
ஞாலமாள்பவர்க்குரைக்கும் நல்லமைச்சர்களேகேளீர் *
சீலமாமெனதுபெண்ணாம் சித்திராங்கதைக்கிப்போது ... *
கோலமாமகுடஞ்சூட்டக் குறிப்பறிந்துரைசெய்வீரே *

வசனம்,

வருங்காலம்-நிகழ்காலம் செல்காலம் என்னுந்திரிகாலமும்உள்ளங்கை நெல்லிப்பழத்தைப்போலக்காண்பிக்கும்மந்திரிகளேவாருங்கள் எனதுபெண்ணாகிய சித்திராங்கதையைவிவாகம்பண்ணிக்கொள்ளச்சொல்லிஎத்தனைச்சொன்னாலும்கேளாமல் நம்முடைய இராச்சியம் நானேஆள்வேனென்றதே பிடிவாதமாய்ச்சொல்லுகிறாள் ஆகையால்கர்த்தருடையசெயல்இப்படியிருந்தால்நாமென்னசெய்வோம்நீங்கள் ஒருயோசனைசொல்லுங்கள்மந்திரிகளே,

மந்திரி-இராசனுக்குச்சொல்-விருத்தம்,

சொல்லியவார்த்தைதள்ளிச்சுடர்முடிசூட்டுமென்ற ... *
மெல்லியையென்னசெய்வோம் மேதினிமுழுதுமாள ... *
வல்லவள்போலேசொன்ன வார்த்தையால்தெரியாதிந்த *
சல்லியந்தமக்கேஷ்பாரந் தலையினிலிரக்குவோமே ... *



வசனம்.

கேளும் இராசபரமேஸ்பரா நாம் விவாகம்பண்ணிக்கொள்ளென்றுச் சொன்னவார்த்தையைத்தள்ளிப்போட்டு நானேஇராச்சியபாரம்பண்ணுகிறேனென்றுசொன்ன சித்திராங்கதையம்மாள் திராணியைச் சிலகாலம்பார்ப்போம் சுமை எடுத்தபிறகல்லவோ தெரியும் எடுக்காமற்போனால் சொல்லுக்குளளவுதான்அம்மாமகுடாபிஷேகஞ்சூட்டுவீர்களாயி.

இராசன்-சித்திராங்கதைக்குச்சொல்- விருத்தம்,

திருமகள்நிகராய்வந்த சித்திராங்கதையேநீயும் ... *
ஒருமகளாயெனக்கு உதித்ததால்உன்றனுக்கு ... *
அருமைசாஸ்திரப்படிக்குத்தக்கமாமகுடஞ்சூட்டி - *
பெருமைசேருலகமெல்லாம் பெண்ணரசாளவைப்பேன் *

வசனம்,

கேளாய் என்னம்மாசித்திராங்கதையே உன்மனதின்படியே மகுடாபிஷேகந்தரித்து இராச்சியபாரம்பண்ணும்படிசெய்விக்கிறேன் நீ ஒன்றுக்கும்அஞ்சவேண்டாம் அம்மணி;

சித்திராங்கதைசொல்-வசனம்,

அப்படியேசெய்வதனதுபாக்கியம்நுபாகவாயி

மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்,

வந்தனஞ்செய்அறிஞருமந்திரிமாரேகேளீர் - *
செந்திருநிகராய்வந்தசித்திராங்கதைக்கிப்போது ... *
சுந்தரமகுடஞ்சூட்ட சோதியம்பார்த்துச்சொல்லும்
அந்தணர்தம்மையிப்போஅழைப்பியீரமைச்சமாரே

வசனம்.

கேளுங்கள்மந்திரிமார்களேநமதுஅம்மாள் சித்திராங்கதைக்கு இந்தமதுரைப்பட்டணத்தை யரசாளும்படியாப் பட்டந்தரிக்கவேணும் ஆகையால்-திதி-வாரம் நட்சத்திரம்-யோகம்- கரணம் என்றுசொல்லாநின்ற பஞ்சாங்கப்பிராமணரை அதிசீக்கிரமாய் அழைப்பியுங்கோள்-மந்திரிகளே,

மந்திரிகள்சொல்-வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறோமகாராசனே

மந்திரிகள்-கட்டியக்காரனுக்குச்சொல்விருத்தம்

இட்டமாந்தனதுபுத்திரி யினியசித்திராங்கதைக்குப் - *
பட்டமுங்கட்டிவைத்தரம்பாரராளச்செய்ய - *

வட்டவாரிதிருழித்த வளமைசேர்மதுரைமன்னன் ... ※
பொட்டெனவழைத்தாரென் றபுரோகிதர்க்கறிவிப்பாயே ※

வசனம்,

ஆரடா அடா ஆசாரவாசற்காக்குங்கட்டியக்காரா நமதுஇராசகுமாரத்தியாகிய சித்திராங்கதையம்மாளுக்குத் திருமுடிசூட்டவேண்டுமென்றுசொல்லி நமதுபுரோகிதனை அதிசீக்கிரத்திலழைத்துக்கொண்டுவாடா,

கட்டியன்-மந்திரிக்குச்சொல்-வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேனையா.

கட்டியன்-வேதியருக்குச்சொல் விருத்தம்,

வண்மையாய்மதுரைநாட்டில் வாழ்புரோகிதரேபோற்றி ... ※
பெண்மயிலெனுஞ்சித்திராங்கதைபெருமாளவேண்டி ... ※
உண்மையாய்சாஸ்திரங்கள் ஓதபாண்டியன்றனக்கமை ... ※
திண்மையாயழைத்துக்கொண்டுகூடினமதில்வரச்சொன்னாரே ... ※

வசனம்.

தெண்டம் தெண்டம்சுவாமி புரோகிதரே பாண்டியமகாராசன் தன்மகளுக்குப் பட்டங்கட்ட நல்லநாள்பார்க்கவேண்டியிருப்பதினால் உம்மை அழைத்துவரச்சொன்னார்வாருமையாசுவாமி,

புரோகிதர்சொல்-வசனம்.

அப்படியே இதோவருகிறேன் கட்டியக்காரா.

புரோகிதர்வருகிற-பொது சந்தவிருத்தம்,

பூசியசந்தனவாசமுமார்பினிற்பொற்பூரிநூலொடுகை ... ※
வீசியபுத்தகநேசமுமொய்யில்விளங்கியவெண்டுகிலும் ... ※
சோசியமொடும்விவாகபிரகாசமும் சொற்பசாமுகனம்
ஆசையனேகமும்பேசியபுரோகிதஅந்தணர்வந்தனரே ... ※

புரோகிதர்வருகிற-தரு-இராகம்-கல்யாணி-சாப்புதாளம்,

பல்லவி,

புரோகிதர்நாங்களே-வேத-புரோகிதர்நாங்களே

அநுபல்லவி,

பிராமணகுலசிரோன்மணியென
பேரும்புகழ்ஓங்கவேசம்பஞ்சாங்க ... -(புரோகி)



சரணங்கள்.

ஆகத்தில்நினைத்தப்பொருளையின்னதென் ... ※
றறிந்துசொல்லுவோம்-இந்த- ... ※
ஜகத்திலெங்களைப்போலகற்ற அந்தணர் ... ※
இலையெனவெல்லுவோம் நாங்க ... ※
யுகத்திலுமணமுகூர்த்தம்பார்ப்போம் ... ※
உலகில்ஒருபிழைவாராமல்காப்போம் ... ※
சகத்தில்கர்மஞ்செய்தவத்தைத்தீர்ப்போம் ... ※
சுட்சத்திலேமுத்திமோட்சத்திற்சேர்ப்போம் ... (புரோ)

ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம் ... ※
நல்லவெள்ளிசனியை-மிக ... ※
நேயராகுகேதுக்களையுமிணங்கச் ... ※
சேரும்நெல்லிக்கனியைப்-போல ... ※
ஆயமேவிமுதல்ரிஷபமிதுனம் ... ※
ஆங்கக்கடகமுஞ்சிங்கங்கன்னியும் ... ※
சாயுந்துலாவிருச்சிகந்தனுசமகரம் ... ※
சம்பிரமமாகியகும்பமீனமெனும் ... (புரோ)

பட்சத்திலேசாரபதினைந்துதினமாகி ... ※
பன்னிரண்டுமதித்து வான ... ※
நட்சத்திரம்இருபத்தேழு ... ※
நாள்களையும்பிரித்து நல்ல ... ※
சொட்சேத்திரத்திற்சுபகிரகமேவ ... ※
அஷ்டகிரகங்கள் அஷ்டமூர்த்தாவ ... ※
லட்சத்தெண்பத்துநாலாயிரஞ்சீவ ... ※
ராசிபேதங்களைப்பேசுங்கல்யாணியிற் ... (புரோ)

இராசன்-புரோகிதருக்குச்சொல்-விருத்தம்.

ஐயரேபோற்றிபோற்றிஆயமெக்கடவேபோற்றி ... ※
பொய்புகாயாதவேதபுரோகிதநாதாபோற்றி ... ※
மையிருவிழிசித்திராங்கிமகுடாபிஷேகஞ்செய்ய ... ※
துய்யநாள்போர்வழிக்குச் சாஸ்திரம்பார்த்துச்சொல்வீர் ※

வசனம்.

தண்டம் தண்டம் சுவாமி,தண்டம் வாருங்கள் இந்தநேரமா சாத்திரிகளாருங்கள் எங்களாகியசித்திராங்கதைக்கு இளவரசப்பட்டந்தரிக்கவேணும் ஆதலால் அவள்பேர்வழிக்குப் பஞ்சாங்கம் பலன் பார்த்துச்சொல்லவேணும் சுவாமி.

புரோகிதர்வசனம்,

அப்படியேபார்த்துச்சொல்லுகிறேன்மகாராசனே

புரோகிதர்-இராசனுக்குச்சொல்-விருத்தம்,

பட்டமுத்தரிப்பேனென்றபாண்டியாஆசீர்வாதம் - *
மட்டவிழ்குழல்சித்திராங்கிமாதுபேர்வழிக்குப்பார்த்தால் *
அஷ்டமசுத்தியில்லை ஆதலால் அவள்தன் செங்கோல் ... *
முட்டமுந்தில்லாதென்றேமொழியுதாசோசியங்கள் - *

வசனம்.

ஆசீர்வாதம் பாண்டியமகாராசனேஉன்மகளாகியசித்திராங்கதைக்கு இளவரசுபட்டங்கட்டும்படியாய் அவள்பேர்வழிக்குப் பஞ்சாங்கப்பலனைப்பார்த்தால்அட்டமிடசுத்தியில்லை ஆதலால் அவள்பட்டம்முழுதிலும் நிற்கமாட்டாது அவள்வயிற்றிற்பிறந்த பிள்ளை இளவரசாளும்படியாயிருக்குது ஈஸ்வரயெத்தனம் எப்படிமுடியுமோதெரியாது ஆயினுங்குறைவில்லை பட்டங்கட்டலாம மகாராசனே

இராசன் வேதியருக்குச்சொல்-விருத்தம்.

குறைவில்லையென்றபிரம்ம குலசிரேஷ்டர்களே அந்த
இறைவனுக்கடிமையானஎன்மகள்சித்திராங்கிக்கு ... *
மறைமொழிப்படிக்குரத்தினமகுடாபிஷேகஞ்செய்ய
நறைமலர்விரியுமார்பாநல்லநாள்பாருமையா. ... *

வசனம்,

கேளும்சுவாமிபுரோகிதரே பரமசிவன்பாதாரவிந்தத்திற் சிந்தையானபதிவிரதத்திலிருக்கும் சித்திராங்கதைக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய நல்லநாள்பார்த்துச்சொல்லுமையையாவாமி

புரோகிதர்-வசனம்,

அப்படியேசொல்லுகிறேன்மகாராசனே.

புரோகிதர்-பட்டாபிஷேகத்திற்கு-நாள்பார்க்கிற தரு

இராகம்-மோகனம் தாளம்-மிசரம். [கேளாய்

பட்டாபிஷேகநாளைப்பஞ்சாங்கத்தைப்பார்த்துச்சொல்வேன்

அஷ்டாங்கயோகங்கண்டாகாதநாள்போக்கி ... ... *
மட்டாருங்குழல்மாதுசித்திராங்கதைக்குப் ... (பட்டாபி)



சித்திரையஸ்தமிருகசீரிஷம்ரோகணிசுவாதி ... ... *
உத்திரமாதிரையுந்திருவோணமவிட்டம்ரேவதி ... (பட்டாபி)

திதியிற்பஞ்சமியுடன்திரையோதசிதனைநாடி ... - *
விதித்திருதியைசத்தமிவியாழம்வெள்ளிவாரந்தேடி (பட்டா)

அஷ்டகோளாறம்பன்னொன்றாம்சொல்லுமூன்றிலுமதிக்க
இஷ்டகோளொன்பதும்பன்னொன்றேழுமோகனம்படிக்கப்(ப)

புரோகிதர் நாள்வைத்துச்சொல் ஆசிரியவிருத்தம்?

சித்திரைமாதந்திடத்தொருபத்தாந்தேதியின்மேதினியில் ... *
சீர்பெறுநற்குருவாரமுநற்றிரையோதசியாந்திதியில் ... *
உத்திரமெனும்நட்சத்திரமுஞ்சுபயோகமும் சொற்கரணம் *
ஊனமிலாமலேமானவதனில்வந்துதித்திடும்நாழிகைப் *
பற்றியிலக்கனம்வைத்தமுகூர்த்தமேமர்பதினெழுநாழிகைமேற் *
பார்புகழ்கடகவிலக்கினமெனமறைபகருமிச்சுபதினத்தில் - *
க்ஷத்திரியகுலக்கிணதித்திடும்பாண்டியன்றன்மகள் சித்திராங்கதை
சதுர்மறைசொற்படிமகுடாயில்மணிமுடிதாங்குவதின்றே

இதுவுமது,

சேறுநல்கிராகுகேதுசேய்சனியிரவிமூன்றும் ... ... *
ஆறும்பன்னொன்றிற்க அஷ்டமஞ்சுத்தியாக ... ... *
தேறுசந்திரன்வியாழந்திகழ்வெள்ளிபுதன்நாலேழும் ... *
கூறுமொன்பதும்பன்னொன்றும் கொள்ளலாமகுடத்தானே ... *

வசனம்.

கேளும்பாண்டியமகாராசனே-சித்திரைமாதம் பத்தாந்தேதிவியாழக்கிழமை திரயோதசிநாழிகை உகவஞு- உத்திரநட்சத்திரம்-கஉ-ஆம்-சுபயோகம்-உஅதெவு-கவுலவாகரணம்-உக-நாழிகை-இரா-இராத்திரி-மிருது-மேல்-தியாச்சியம் இராகுகாலம்பூமியம்-லக்கினத்திலேசுக்கிரனிற்க, அஞ்சாமிடத்தில்சந்திரனிற்க,ஏழாமிடத்திலே குருநிற்க ஒன்பதாமிடத்திலேபுதனிற்க,இப்படிச் சுபக்கிரகங்கணிற்க, பாபக்கிரகங்களாகிய-இராகு-கேது சனி-செவ்வாய் சூரியன் இவர்கள்மூன்றாமிடத்திலும் பாபக்கிரகங்களும் நிற்க இப்படிக்கிரகங்கள் பகைநீச்சமில்லாமல் உச்சத்தில்நிற்க எட்டாமிடம்சுத்தியாயிருக்க இச்சுபதினத்தில் உதித்தபதினேழுநாழிகைக்குமேல் கடகலக்கினத்தில் பட்டாபிஷேகத்திற்குநாள்பார்த்துவைத்திருக்கிறேன் இனிமேல்நடக்கவேண்டியகாரியம் பார்க்கலாம் பாண்டியமகாராசனே,

சமஸ்தமங்களாவிபவந்து-

இராசன்மந்திரிக்குச்சொல்-விருத்தம்

எழில்பெருமந்திரிமாரேயென்னிடமகட்டிப்போது ✻
அழகுளமுடிதரித்து அவனியையாளச்செய்ய ......✻
பொழிலயிருவேதங்கற்றபுரோகிதர்சொன்னதாலே ✻
இழிவுளதானைய்வாக்குமெல்லோர்க்குந்தெரிவிப்பாயே

வசனம்.

கேளும் என தடுத்திக்கிசைந்த உத்தமமந்திரி எனதுகுமாரத்தியாகிய சித்திராங்கதையம்மாளுக்குப் பட்டாபிஷேகஞ் செய்விக்கும்படியாய் சோதியப்பிராமணர் சொன்னபடியினாலே ஆளர்முதலாகிய அனைவரையும் இவ்விடம்வரும்படியாய்த்திட்டஞ்செய்வியுமந்திரி.

மந்திரி-இராசனுக்குச்சொல் வசனம்

அப்படியேமகாபாக்கியம் பாண்டியமகாராசனே

மந்திரிகட்டியனுக்குச்சொல்-விருத்தம்.

கட்டியக்காரகேளாய்கன்னிசித்திராங்கதைக்கும் ...✻
பட்டமுந்தரித்துவேண்டும் பரிசமுங்கொடுக்கவேண்டும் ✻
மட்டிலாப்பிச்சைக்காரர்மறையோரும்வருவீரென்றும் ✻
திட்டங்கள்செய்வதன்றிஜெயகண்டியமறைவிப்பாயே......✻

வசனம்.

ஆடாவாசற்கட்டியக்காரா நமதுசித்திராங்கதைஅம்மாளுக்குப்பட்டாபிஷேகஞ்செய்து அநேகதானதருமங்கள் கொடுக்கவேண்டும் ஆதலால்பூமியிலுள்ள பிராமணர்முதலாகிய பிச்சைக்காரர்கள் வரும்படியாய்த்திட்டஞ்செய்வது மன்றியிஜெயகண்டிபோட்டுவையும் பிள்ளாய்;

கட்டியன்சொல்-வசனம்.

அப்படியேசெய்துவைக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன்-யாவருக்குஞ்சொல்- விருத்தம்,

புகலமெங்கும்புகழும்பாண்டியன்றன் புத்திரிசித்திராங்கதைசொக்கநாதர்தன்னருளால்மணிமுடிதரித்துதவில்யலதானஞ்செய்கின்றார்; ஆதலாலிங்கில்வாழ்மறையோர்கள் அனைவரும்வருவதல்லாமல் மாதலாயன்னமளிக்கின்றேம்பிச்சைக்காரரும்வந்தருள்வீரே...✻



வசனம்,

பாண்டியமகாராசன்குமாரத்தியாகிய சித்திராங்கதை அம்மைக்குநாளையதினம்பட்டாபிஷேகமானபடியினாலே அநேகதானங்கள் கொடுக்கப்போகுறார்கள் ஆதலாலந்தத்தானங்கள்வாங்கிக்கொள்ளும்படியாய் பூமியிலுள்ள பிராமணகூட்டங்கள் வருவதல்லாமல் அநேகம்பிச்சைக்காரர்களும் வரக்கடவீர்கள்

பொருமட்டுவிருத்தம்,

பறையறைந்துரைத்த-உரையதுகேட்டு ... ✻
நிறையவேயெங்கும்-மறையவர்வந்தார் ... ✻

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோதெப்படியென்றால் சித்திராங்கதையம்மாளுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யப்போகிறபடியினாலே அதற்காகசர்வத்திராளும்வருகிற விதங்காண்க.

பிராமணர் இயாவரும்வருகிற-தரு இ-ம் மோகனம் அடதாளம்-

கண்ணிகள்.

சித்திராங்கதைபட்டாபிஷேகத்திற்கெல்...லோரும்
திரளாய்ப்போக ... ...வேணும் - நல்ல

சத்தியசம்பன்னரும்பாண்டியமகாராசன்
சற்புத்திரரும் ... ... காணும்

குருட்டுக்கண்ணுவாதா முறட்டுக்குப்பாகிருஷ்ண
கூடநடந்து ... ... வாரீர் -பொல்லாத

திருட்டுத்தனமுங்கெட்டப் புறட்டுத்தனமுஞ்செய்யும்
சேஷின்வாசாமே ... ... பாரீர்

நீண்டவழியெல்லாம்தாண்டிநடந்தொரு
திமிஷத்திற்போக - - வேணும்.தொம்பைக்

கூண்டுபோலசைக்கவேண்டாம்நடந்துநீர்
கூடவாரும் ... - காணும்

கொள்ளைகொள்ளையாகவெள்ளியுஞ்செம்பொன்னும்
கோடிகொடுப்பா - - ரும் - வந்த

கள்ளாயப்புறத்தள்ளிமுக்கோணத்தில்
கட்டியடிப்பா ... - - ரும்

கட்டுவர்க்கங்களில்பட்டஞ்சகோவத்தி
சட்டமாக - - - எடுப்பான்-இந்த

அஷ்டதிக்கும்புகழ்பாண்டியராசன்
அனைவருக்கும் - - கொடுப்பான்

தட்சணையென்னவோர்லட்சம்பொன்னைவாரித்
தட்டிலெடுப்பார் ... - - ரும்-எடுத்த

தட்சணம்பிராமணருள்பட்சமுடன்கொள்ளத்
தாராளமாய்க்கொடுப்பார் - - ரும்

தன்மைபதாய்க்கட்டிப்பொன்முதற்பல்லக்கை
தமக்களிக்கச்சொல் - - - ருல்-அதை

என்மகனுக்குமெனக்குமீந்தாற்குறை
எப்படிபோரு - - - லென்ன

ஆத்திரமென்னகனகரோத்திரியஅப்பண்ணை
ஐயங்காரே - - நீரும்-வைதில்,

முத்திபெறுப்பன்னை சாஸ்திரியையுடன்கூட்டி
முன்னம்நடந்து - - - வாரும்

விக்னமில்லாமல்தங்கப்பவுத்திரம்
விரதுக்கிடுவா - - - ரும்-ஜெய

மங்களம்பாடியமாதருக்குமுத்து
மாலைகள்போடுவா - - - ரும்

இத்தனைதானம்அளித்தும்மறையோரை
இன்னமுந்தேடுவா - - ரும்-கவி

கற்றபுலவர்க்குரத்தினக்குண்டலம்
காதிற்குப்போடுவா - - ரும்

பைம்பொன்அனேகமும்சம்பிரமதாயள்ளிப்
பாரித்துக்களிப்பா - - ரும்-தந்தி

நம்பனடியவர் செம்பொற்பதங்களை
நன்மோகனத்தாற்பாடி - - ருன்

கட்டியன்சொல்-பொது விருத்தம்.

ஜகதலமம்பத்தாறு தேசத்தில்வாழுமன்னர் ... *
சகலரும்வந்துசித்திர சபைதனிற்சேர்ந்தபின்பு ... *
நகரலங்காரஞ்செய்து ஞானசித்திராங்கதைக்கு ... *
புகருலகங்களாளப் பட்டமுந்தரிக்கின்றாரே... ... *



வசனம்.

இவ்விதமாக-அங்கம்-அருணம்-அவந்தி-ஆந்திரம்-இலாடம்-ஈவ ளம்-ஒட்டியம்-கருமம் கலிங்கம் கன்னடம் கன்னுடம்-காசம்-கா ஸ்மீரம்-காந்தாரம்-காம்போஜம்-கிராடம்-குருகு-குடகம்-குந்த ளம்-குரு-குளிந்து-கூற்சரம்-கேகயம்-கேரளம்-கொங்கணம்-கொல்லம்-கோசலம்-சாகம்-சவ்விரம்-சாளவம்-சிங்களம்-சிந்து-சி னம்-சூரசேனம்-சோனகம் சோவீம்-திராவடம்-துருவம்-தெங்க ணம்-புளிகதம்-போடம் மகதம்-மராடம்-மலையாளம்-மாளவம்-மச்சவம்-யுகந்தம் வங்கம்-வங்காளம் விதர்ப்பம்-பாண்டியதேசம்மு தலாகியஐம்பத்தாறுதேசத்தரசர்களும்அநேகபிராமணக்கூட்டங் களும் தேவரிஷிகள் முதலாகிய சமஸ்தமானபேரும் மதுராபுரி பட்டணத்தில்வந்து நிறைந்திருக்கப் பட்டணமெங்கும் அலங்கா ரஞ்செய்து சித்திராங்கதைக்குப் பட்டாபிஷேகஞ் செய்கின்றவி தங்காண்க.

இராஜன் சித்திராங்கதைக்குச்சொல் கவி,

கண்மணிச்சித்திராங்கதைபெறுமென்றன் ... *
அம்மணியிப்பெரியாசனந்தன்னில் ... *
பொன்மணியிருந்து பெருங்காலத் ... ... *
செம்மணிமகுடஞ் சிரமணிவாயே ... *

வாராய் என்கண்மணியாகிய சித்திராங்கதையே-நீ இந்தசி ம்மாசனத்திலிருந்து இந்த நிருபதனைய இராசாசன மகுடி லசெங்கோலும் சிரசிலே தங்க மகுடமும் தரித்துக்கொள்ளு அம்மணி.

சித்திராங்கதைசொல்-வசனம்.

அப்படியே மகாசந்தோஷம் என்றந்தையே.

நகரலங்காரஞ்செய்கிற-தரு-இம் தோடி-ஆதிதாளம்,

பல்லவி,

பட்டணம் அலங்கரித்தார்-சித்திராங்கதைக்குப் ... *
பட்டம் தரவித்தரித்தார் ... ... *

அநுபல்லவி.

அஷ்டலட்சுமிகளும் இஷ்டமுடனென்றும் ... *
அகமகிழ்பாண்டியன் மகளைத்தருமதனை ... *
செகமெங்கும் புகழ்செங்கோல் ... *
செலுத்தத் திருமதனை ... ... (பட்டணம்)

சரணங்கள்.

வேழமுகனைப்போற்றினார் திகழொளிதருநவமணி ... *
விளக்கனைத்தங்கவேற்றினார்-செழிக்குமிள ... *
வாழைக்கமுகுநாட்டி-மரகதப்பந்தல்பூட்டி ... *
காழகிற்புகையூட்டி-கமழ்பரிமளங்கூட்டி ... *
கற்பகப்பூமலர் - பொற்பதியெனவிலர் ... ... *
சொற்பகருமநேக-அற்புதமாக ... (பட்டணம்)

புண்ணியதீர்த்தங்கள் அமைத்தார்-வேதபூரணந்தம்பொற்
பூரணகும்பங்கள்சமைத்தார்-புரோகிதர்கள் ... *
நண்ணியதர்ப்பையைக்கொய்ய நவக்கிரகவோமஞ்செய்ய *
புண்ணியகுண்டத்திற்றுய்ய - பொற்பளவிற்றெய்யைப்
பரிசுறியிரத-பதமனந்தங்கள்சூழ ... [பெய்ய
வருமிலையேத்திவரும் மாதரசுந்தவாழ (பட்டணம்)

அந்தரதுந்துமிமுழங்க-திந்திமிதிமியென ... *
அழகியவாத்தியங்கள்வழங்க--விளங்குஞ்செங்கோல் ... *
தந்தைகொடுக்கவாங்கித்-தங்கமகுடந்தாங்கி ... *
மந்திரிகளானபாங்கி மார்களுடனேயோங்கி ... *
மண்டலமெங்கும்புகழ்-கொண்டரசாட்சிசெய்ய ... *
பண்டிதர்கோடிராகம்-பதமலர்மழைபெய்ய (பட்டணம்)

முதற்றோழி அரசிக்குப்போற்றி-விருத்தம்,

பார்புகழ்மதுரையாளப் பட்டாபிஷேகங்கொண்டு ... *
கார்குழல்தனைமறைத்து கதிர்மணிமகுடந்தாங்கி *
ஏர்பெறுமாசனத்தில் இருந்துசெங்கோலேந்தி *
சீர்பெறும்அரசுசெய்யுஞ் சித்திராங்கதையேபோற்றி ... *

இரண்டாவதுதாதி நாயகிக்குச்சொல்-விருத்தம்.

க்ஷேமத்தைத்தருஞ்சொக்கேசர் தேவிமீனாட்சியம்மன் *
நாமத்தையோதியிந்த நகரரசாள்வேனென்று ... ... *
நேமத்தைமறவாதிந்த நெஞ்சினில்நினைத்துப்பொல்லாக் *
காமத்தையொழித்தசித்ராங் கதையெனுந்தாயேபோற்றி *

சித்திராங்கதை-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்.

மந்திரிகளென்றுந்தாதிமார்களேசொல்லக்கேளீர் ... *
சுந்தரிபாகனான சொக்கேசருளாலென்றன் ... *
சிந்தையில்நினைத்தவெண்ணம் சீக்கிரமாய்முடிந்ததம்மா *
தந்தைதேடினபொன்னெல்லாந்தானங்களளிப்போம்வாரீர்



வசனம்.

வாருங்கள் என்மந்திரிகளாகிய தாதிப்பெண்களே மதுரைமீ
னாட்சியம்மன்சமேதராய் விளங்காநின்ற சொக்கநாதசுவாமி திரு
பாதகடாட்சத்தினாலே எனது எண்ணம்முடிந்து ஈடேறியது இனி
என்றந்தையாகிய பாண்டியமகாராசன் சம்பாதித்ததிரவியமெல்
லாம் பிராமணாளுக்கும் இன்னம் மற்றசனங்களுக்கும் பூரிகொடு
ப்போம் வாருங்களம்மா.

தோழிகள்சொல்-வசனம்.

அப்படியேகொடுப்போம்வாருமம்மணி.

சித்திராங்கதை-பூரிகொடுக்கிற-தரு-இராகம்-தோடி-தாளம் - ஆதி.

பல்லவி.

பூரிகொடுக்கிறோம் ... ... வாருங்கள்-வகையால்
வாரிக்கொடுக்கிறோம் ... பாருங்கள்

அநுபல்லவி.

பாரினில்வாழ்கின்ற பார்ப்பாருக்குமுன்னம் ... *
பட்சமுடனற்றதட்சணையோடின்னம் ... (பூரி)

சரணங்கள்,

பூதானமுதலான யோற்றுமனேகதானம் ... *
கோதானமும்அய்யாய்க் கொடுத்திடுவோம்நாம் (பூரி)

அன்னமும்சொர்ணமும் ஆடைகளும்பூணும் ... *
ஆபரணமும்திவ்ய பூஷணமும்வேணு ... (பூரி)

சந்தனந்தாம்பூலம் தாகத்தண்ணீருந்தேடி ... *
அந்தணர்க்கின்ன மளித்துந்தோடியைப்பாடி (பூரி)

சித்திராங்கதை-தோழிகளுக்குச்சொல்-விருத்தம்,

நீதிமந்திரிகளென்ன நெருங்கியெம்மருங்கினின்ற ... *
தாதிகளெல்லாம்வாரீர் தரணியின்மதுரைசெங்கோல் *
சேதிகள்யாவருக்கும் தெரிந்திடச்செய்வதல்லால் ... *
வீதிகளெல்லாங்கோலம் விளங்கவேவருவோம்வாரீர் *

வசனம்.

நீதிமந்திரிகளாக இரண்டுபக்கமும் நெருங்கி நிற்கின்றதாதி
ப்பெண்களே வாருங்கள் என்றந்தையாகிய பாண்டிய மகாராஜ
னுக்குப்பிறகு நாம்இளவரசாட்சிசெய்யும் செங்கோற்றிட்டம்யா
வருக்கும் தெரிவிப்பதுமல்லாமல்இந்தமதுரைப்பட்டணம்தெரு
வீதிக்கெல்லாம் சிங்காரகோலம் வருவோம் வாருங்கள்தாதிகளே.

சகியர்சொல்-வசனம்.

அப்படியேபோகலாம் வாரும்-அம்மணி
சித்திராங்கதை-திருவோலக்கம்வருகிற-தரு
இ-ம்-அடாணா-திரிபுடைதாளம்.

பல்லவி.

கோலங்கொண்டாடுவோம்வாரீர்-மகிழ்ந்து ... ☼
கூறத்தாதியென்னநாமினிவேறுந்தெருவீதியிலேசகே ...(கோல)

அநுபல்லவி.

ஞாலம்புகழ்விசாலமாமதுரை ... ... ☼
நகராள்மதிவெண்குடைசூழசெகராசர்களும்புடைசூழ (கோ)

சரணங்கள்.

பொன்மணிமகுடமிலங்க - மிக ... ☼
பொங்குந்திரைகடல்புடைசூழல ☼
செங்கும்ஒருகுடையதனிழல்பெற ☼
புரக்குஞ்செங்கோலுந் துலங்க-நாளும் - ☼
செம்மைப்பிணிதரும் மன்மதனுங்கிட்டத் - ☼
சோமனுஞ்சந்திரனுக்கோர்குறை - ☼
வாராமலும்பொற்பெனும்பொன்னிறை - (கோல)

செந்நெலையில்வளையல்மின்னவே கமழ் - ☼ ☼
தேப்பரிமளமலர்சொலிக்கவும் - - ☼
பாதப்பரிபுரமெனுந்தண்டை - - ☼
செம்புகழ்வெள்ளைவே - இனம் - ☼
கொங்கைக்குடங்களும்குலுங்கவுமிடையே - - ☼
சொல்லரும்மலைக்கவோபொன்னடைத்து - ☼
மென்னத்தெருவினில்கலைக்கடைந்து (கோல)

திகழ்வாளும்பிடித்து-மது - - - ☼
நீதியுடன்ரதகஜதுரகப - - - ☼
தாதிகளுங்குழவெண்செங்கோல் - ☼
நிலையபாவருக்கும்படித்து - எழில் - ☼
பகருந்தென்மதுரைநகராயசாசா - ☼
பட்டாபிஷேகம்மேகுடி - - ☼
அடாணாராகமேபாடி - - - (கோல)

சித்திராங்கதை-கடவுள்போற்றி-விருத்தம்,

மாதரும்மாரிபெய்ய மாநிலஞ்செழிக்கவேணும் ☼
மாதர்சாட்சிசெய்ய மனிதர்கள்வாழவேணும் - ☼



மாதவர்முனிவர்போற்றும்மதுரைமீனாட்சியென்னும்
மாதுமைபாகவுன்றன் மலரடிபோற்றிபோற்றி ☼

சித்திராங்கதை-தேசவிசாரணை,

மதிபரவுமென்மந்திரிமார்களாய்நிற்கின்ற
மாதரோசொல்லக்கேளீர்

மந்திரிகள் விடை.

மகாராசராசபரமேஸ்வரியுன்றனது
வாய்மலர்ந்தருளுமம்மா

சித்திராங்கதை சொல்லல்.

நிதிபரவுநமதுதிருமதுரையிலவரமேது
நீதியெங்குஞ்செல்லுதா

மந்திரிகள்-விடை.

நீடாழிசூழுலக-மோர்குடையின்நிழலில்
நின்றரசுசெல்லுதம்மா

சித்திராங்கதை-சொல்லல்.

கதிபரவுதேவாலயங்கள்பிரமாலயக்
கட்டளையெலாம்நடக்குதா

மந்திரிகள்-விடை.

கருணைநித்யோற்சவம் வருபூசையிருமூன்று
காலமுநடக்குதம்மா

சித்திராங்கதை-சொல்லல்.

நதிபரவுமெம்றன் நகரத்தைத்திருடர்கள்
சோரமொன்றுஞ் செய்வதுண்டா

மந்திரிகள்-விடை.

துஷ்டர்களைவெட்டிப்பலியிட்டுதலைபக்கட்டிநீ
அக்கிவிடுவோம் அம்மணி

சித்திராங்கதை-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

வருமழைநீதியென்றும் வழுவாமலாகசெய்ப ... ☼
வரமெனக்கருளுமந்த மதுரைசொக்கேசர்பாதம் .. ☼
பரிவுடன்நித்தப்பூசை பண்ணுவோம்நந்தவாழும் ☼
அரண்மனைக்கேகுவோம்பெண் ணழகியரெல்லாம்வாரீர் ; ☼

வசனம்.

கேளுங்கள் என்மந்திரிகளானதாதிகளே நாமித்மதுரைப்பட்டணம் இளவரசாளும்படியாய் வரப்பிரசாதந்தந்த சொக்கநாதசுவாமியையும் மீனாட்சியம்மனையும் நினைத்து பூசை பண்ணவேணும், ஆதலால் நமது தந்தையாகிய பாண்டியமகாராஜனிருக்கும் அரமனைக்குப்போகலாம்வாருங்களடியம்மா தாதிமார்களே.

மந்திரிகளாகிய பாங்கிகள்சொல்-வசனம்.

அப்படியேபோய்வருவோம்அம்மா.

அர்ச்சுனன்வருகிற பொதுவிருத்தம்

போற்றியதாதிமார்கள் புகழ்சித்ராங்கதையுமிப்போ ...✽
நாற்றிசையெங்குஞ்செங்கோல் நடாத்தியேவருநுங்காலை ✽
சாற்றியமறையோர்களுடன் சந்நியாசிவேஷங்கொண்டு ... ✽
யாத்திரைப்போகவேண்டி யர்ச்சுனராஜன்வந்தான் ... ✽

கட்டியன்சொல்-வசனம்.

அகோ தெப்படியென்றால் இவ்விதமாகச் சித்திராங்கதைதானுடனே மதுராபுரி பட்டணம் இளவரசாட்சி செய்துக்கொண்டிருக்கும்போது அஸ்தினாபுரத்திலிருக்கும் பாண்டுமகாராஜாவின் குமாரர்களாகிய பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனமகாராஜன் அநேகபிராமணக் கூட்டங்களுடனே தீர்த்தயாத்திரை செய்யவேண்டிய ஸ்தலங்கள் ஆலயங்கள் தோறும் தரிசனஞ்செய்துக்கொண்டு மதுரைக்குவருகிறவிதங்காண்க.

அர்ச்சுனன்வருகிற-தரு-இ-ம்-கலியாணி-தாளம்-மட்டயம்

பல்லவி.

அர்ச்சுனராஜன்வந்தான் - ஜெய
அர்ச்சுனராஜன்வந்தான்

அநுபல்லவி,

மெய்ச்சமறையவர் தம்மில்சந் நியாசி
வேஷங்கொண்டுமெய்யில்-வெண்பொடிபூசி (அர்ச்)

சரணங்கள்.

காசிஸ்தல்முதல்மாசிலாத்திருவாலங்
காடும்காளஸ்திரியும் - மறை
பேசும்விரிஞ்சிபுரமும் எங்கும்பெயர்
பெற்றகாஞ்சிப்புரியும்-நல்ல
வாசந்தருந்திரு வொற்றியூர்தனில்மேவி



மயிலாப்பூசரிநமலர்ப்பதந்தனைத்தாவி
தேசத்தஸ்திற்புண்யதீர்த்தமும்வாவி
சென்றுதிருக்கழுக்குன்றமுமேவி (அர்ச்)

திருவந்திப்புரம்பெருந்துறையாரூர்
தில்லைச்சிதம்பரமும்-நதி
பாவுமயூரங்கும்பகோணஞ்சேது
பதிராமேஸ்வரமும்-புகழ்
மருவுந்திருவாவடுதுறைதனைக்கண்டு
மன்னுமடிமுடியென்றுமொருபண்டு
அரியயனுமறிபாவநாற்குன்றம்
அண்ணாமலையென்றும்வெண்ணெய் நல்லூர்சென்று (

கங்கையமுனைநீர்மதைசிருவேணி
கன்னிசரஸ்வதியும்-இன்னம்
துங்கபத்திரிகோதாவரிதாமிராத்
துப்யநவதியும்-திவ்ய
பங்கயவாவிகளெங்குந்தாடி
பார்த்துநல்லதீர்த்தயாத்திரைகளாடி
மங்கைமீனாட்சியோர்பங்கனைத்தேடி
வாணிமகிழ்கலியாணிராகம்பாடி (அர்ச்)

அர்ச்சுனன்-பிராமணருக்குச்சொல்- விருத்தம்.

அருமறையவர்களேநாம்அநேகதூரங்கள்சென்றோம்
திருவளர்மதுரைபோலச்செகத்தினிற்கண்டதில்லை ✽
உருவமீதென்னசொல்வேன் உமையவளானமீனாட்சி ✽
மருவியசொக்கநாதர்மலரடிபணிவோம்வாரீர் ... ✽

வசனம்.

ஆ-ஆ-ஆ-வாருங்கள் என் அருமறையோராகிய பிராமணர்களே நாம் அநேகதூரஞ்சென்று அநேக புண்ணியதீர்த்தங்களிலேஸ்நானஞ்செய்து தேவஸ்தலமுதலானதரிசனஞ்செய்துவந்தோம்-ஆ-ஆ-ஆ-இந்தமதுராபுரிபட்டணத்தின் அழகே அழகு-அதோ பாரா சொக்கநாதசுவாமியார் திருக்கோபுரதரிசனமேதரிசனம் ஆ-ஆ-ஆ-இந்தப்புண்ணியதீர்த்தமாடி மதுரைசொக்கநாதசுவாமியையும் மீனாட்சியம்மனையும்தரிசனஞ்செய்து வருவோம் வாருங்கள் பிராமணர்களே,

பிராமணர்சொல்-வசனம்.

அப்படியேபோவோம்வாருங்களையா

அர்ச்சனன்-கடவுளைத்தரிசிக்கிற-தரு-இ-ம்-நீலாம்புரி-அடதாளம்

கண்ணிகள்

| | |
|---|---|
| ஆரணேதின்பாதமலர் | சரணம் இன்று |
| வாமெனக்கருளநீவரவிது | தருணம் |
| திரிபுரமெரிசெய்த | நாதா மத |
| னிபுரிந்தரிக்கயற்கண்ணி | மேதா |
| ஆலகாலவிஷமுண் | டாய்-திரு |
| ஆலவாயநிலை | ண்டா |
| அம்புலிக்கொன்றையுந்தரித் | தாய்-வரும் |
| வெம்புலியென்றசொல் வேங்கையையுரித்தாய் | |
| சங்கராசாம்ப | சிவனே-மகிழ் |
| ஒங்காராரதேவர்கடவுளென் | பவனே |
| பொங்கும்அரவ | பாரு மரு |
| தங்கும்அரவிந்தத்தங்கச்செந் | சாரு |
| மன்மதனையெரித் | தோனே-நல்ல |
| மானுமழுவும்வளர்கரத் | தோனே |
| சென்மவினைகளைத் | தீராய்உய்றன் |
| சேவடியைக்காணத்தெரிசனந் | தாராய் |
| சதுரனியைபடுசெய்த | வாதா-இந் |
| தானிலையெல்லாமாள்சொக்க | நாதா |
| மதுரையீருட்சியென் | றுபே-என்றன் |
| வல்வினைதீர்த்தவரந்தரு | வாயே |
| நாவாம்பதவிக்கு | நாதா-சொல்லும் |
| மேலாம்பதவியில் விளங்கும்வி | நோதா |
| பாலாம்பிகைமணாத் | தாயே - திவ்ய |
| நீலாம்புரிராகம்நீயருள் | வாயே |

இதுவும்-அர்ச்சனன்சொல்-சொச்சகம்.

மதுராசொக்கநாதனையும்மாதுமீனாட்சியையும்...... ...*
சதுரடனுயனைவோரும்தரிசனஞ்செய்தோமுலகில்... ...*



ஏதிரொருவரில்லைப்பெண்ணிளவரசெய்தவந்த... *
கதிர்முடிசேர்பாண்டியனைக்கண்டுவருவோம்வாரீர்;... ...*

வசனம்

வாருங்மறையவர்களாகிய பிராமணர்களே நாமிந்தமதுரைச்சொக்கநாதரையும் மீனாட்சியம்மனையும் தரிசனஞ்செய்துவந்தோம் இனிநாம்இங்கிருக்கவேண்டிப்தென்ன புண்ணியஸ்தலங்கள்தோறும்போகவேணும் ஆதலால் இந்தமதுராபுரியாளும்படித்தங்களுக்கு இளவரசுபட்டங்கட்டிவைத்த பாண்டியமகாராசன் இதோயிருக்கிறார் பார்த்தீர்களா-ஆ-ஆ-ஆ-இவருடைய தருமமேதருமம் இவனையுங் கண்டுபோகலாம் வாருங்கள் மறையவர்களே.

பிராமணருக்கு இராஜன்சொல்-விருத்தம்

வந்தமாதவரேயுங்கள் மலரடித்தெண்டஞ்சுவாமி ...*
எந்தத்தேசங்கள்நீங்கள் எங்கிருந்திங்குவந்தீர்... ... *
முந்தமாதவமெய்க்குமுடிந்ததோதேவரீர்கள் ... *
அந்தமாம்அடியேன்வாழும்அரண்மனைக்குவ்வேனவாரீர்

வசனம்,

தெண்டம் தெண்டம்சுவாமிகளே-தேவரீர்களெந்தத்தேசங்களிலிருந்து வந்தீர்களோ சுவாமிகள்வந்தபோதேஅடியேன் நம்மசாபல்யமாச்சுது அடியேனுடைய அரண்மனைக்கு எழுந்தருளவேணுங்சுவாமிகளே

அர்ச்சனன்-இராஜனுக்குச்சொல்விருத்தம்

தெண்டமென்றதுத்தமன்றுசிரஞ்சீவிஆசீர்வாதம்... ...*
அண்டர்கள்புகழுங்காசிபருமறையவர்கள்நாங்கள் ... ...*
தெண்டிசைதனின்தோறும்தீர்த்தங்களாடியிந்த ...... ...*
மண்டலமுழுதுஞ்சென்றும்மதுராமாநகர்க்குவந்தோம்*

வசனம்,

சிரஞ்சீவி சிரஞ்சீவி ஆசீர்வாதம்மகாராஜனே நாங்கெல்லாகஷேத்திரப்பிராமணர் இந்தப்-பூலோகமுழுதும் புண்ணியதீர்த்தம்ஆடி மதுரைசொக்கநாதசுவாமியையும்-மீனாட்சியம்மனையும் தெரிசனஞ்செய்யவந்தோம்மகாராசனே,

இராசன்-பிராமணருக்குச்சொல்-விருத்தம்,

சொற்பகாசிசுதம் அய்யமாதவரேநீங்கள் ... ...*
நற்பகவனங்கள்போல நடந்திறந்தாம்வந்தீர் ... *

தற்பரசொக்கநாதர்தரிசனஞ்செய்துநாயேன்......*
கற்பகக்காவில்கொஞ்சக்காலங்களிருக்கலாமே......*

வசனம்.

வாருங்கள் ஆசீர்வாதம் கூறும்அருமறையோர்களே-நீங்கள் காசிதேசம்விட்டு அநேகதூரம்திரிந்து தென்மதுரைக்கு வந்தீர்களே இவ்விடத்தில் சொக்கநாதசுவாமிதரிசனம் செய்துக்கொண்டு அடியேன்கற்பகப்பூங்காவில் சிலகாலமிருந்து தங்களுடைய ஆலயங்களுக்குப்போகலாம்சுவாமிகளே.

பிராமணர்சொல் வசனம்.

ஆனால்கற்பகப்பூங்காவுக்குப்போவோம்வாரும்பாண்டியமகாராசனே,

பிராமணர்-நந்தவனத்துக்குப்போகிற தரு

இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

கற்பகப்பூங்காவுக்கேகுவோம்-பிராமணரேநாம்
கற்பகப்பூங்காவுக்கேகுவோம்

அநுபல்லவி.

தற்பரனெனுஞ்சொக்கநாதனைநா றுய்ய
பற்பலமலர்களைப்பறித்துப்பூசை செய்ய(கற்பக)

சரணங்கள்.

சங்கரன்பூசையும் சம்பிரமாய்ப்பண்ண லாம்
மங்களமாகதிவ்ய வுபாசனைமுன்ன லாம் (கற்பக)

இளந்தென்றல்வந்துநமக்கிளைப்பாறும்படி வீச
குளிர்ந்தநிழலைமிகக்கொடுக்கும்பூஞ்செடி வாச(கற்பக)

அந்தணர்களெல்லோரும் அழகாய்வாரீர் மிகுந்த
சந்தனமரமெங்கும் தழைத்துவளர் சுகந்த(கற்பக)

கயிரவமலர்வாயார் கனவல்லியைக் கடந்து
பயிரவிராகத்தைப் பாடிக்கொண்டுந டந்து கற்பக)

இராஜன்மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்.

வருகுறையறிந்தவர்க்கும் மதிமந்திரிமாரேகேளீர்...*
அருமறையவர்களிங்கே யமுதுசெய்திருக்கநாளும்...*



திருமுறைசாமக்கிரிகள் தந்திங்ஙனம்வேணதெல்லாம் *
ஒருகுறைகளுமில்லாமல் புன்மையாயளித்திடுமே ......*

வசனம்.

கேளுங்கள் நானிவருகைதந்து சொல்லும் மந்திரிகளேவாருங்கள் காசியாத்திரைப்பிராமணர் நம்துகற்பகப்பூங்காவனத்திலிருக்கிறவர்க்கும் அவர்களுக்குவேண்டியஅமுதுசெய்யும்சாமான்கள்முதல் வஸ்திரதக்ஷிணைகளும் குறைவாராமல் வேண்டியவரையிலும் கொடுத்துவைத்திருங்கள் மதிமந்திரிகளே.

மந்திரிகள்சொல்-வசனம்.

அப்படியேமகாபாக்கியம்சுவாமி.

கட்டியன்சொல்-பொதுவிருத்தம்.

காசிவேதியரைப்போல காளையர்ச்சனையிருக்க......*
மாதிலாமுடிதரித்து வரிசிலைவாளுமேந்தி ... *
பேசியதாதிமாரும் பெண்சித்திராங்கதையும்வாசம் *
வீசியகற்பகக்காவிலாமலரெடுக்கவாரார் ... ....*

வசனம்.

அதோதெப்படியென்றால் இவ்விதமாக காசியாத்திரைப் பிராமணர் வடிவங்கொண்டுவந்த அர்ச்சுனமகாராஜன் அந்தக்கற்பகப்பூங்காவிலே அநேகம்பிராமணரும் தானும்ஜெபதபநேமநிஷ்டைகள் உபாசனைமுதலானதும் செய்துக்கொண்டிருக்க சித்திராங்கதையம்மன் தன்மந்திரிமார்களான தாதிமார்கள் சூழம்படியாய் மாணிக்கமகுடமும் வாளாயுதமுந் தரித்துக்கொண்டு அநேகதாதிகளுடனே புஷ்பவிளையாடக் கற்பகப்பூங்காவனத்திற்கு வருகிறவிதங்காண்க.

சித்திராங்கதை தன்மந்திரிகளுக்குச்சொல்-கலிப்பா

மந்திரிகளெனுந்தாதிமார்களேநாமெல்லோரும் ... ...*
சுந்தரமிகுங்கற்பகப்பூங்காவனத்திற்சென்றுமுந்து... ...*
பந்துவிளையாடிமலர்ப் பறித்துமீனாட்சியம்மன் ... *
சிந்தைமகிழர்ச்சனைநாம்செய்துவருவோம்வாரீர்... ...*

வசனம்.

வாருங்கள் என்மந்திரிகளான தாதிமார்களேநாமெல்லோரும் கற்பகப்பூங்காவனத்திற்குப்போய்ச் சற்றுநேரம் பந்துவிளையாடி பொற்றாமரைத்தடாகத்தில் குளித்து நந்தவனத்திற் குட்புகுந்து திவ்யபுஷ்பங்களைப்பறித்து உலகமாதாவாகிய மீனாட்சியம்மன் பாதத்தில் அர்ச்சனைசெய்து பின்பு நமதரண்மனைக்

றுப்போகலாம் வாருங்கள் தாதிமார்களே (அப்படியேபோகலா
ம்வாரும் அம்மணி)

சித்திராங்கதை-தாதிகளுக்குச்சொல்-தரு

இ-ம்-தோடி ஆதிதாளம்.

பல்லவி.

வனத்திற்குவாருமாதரே-பரிமள-சுகந்தமலர்களும்பலவுள -நந்த
வனத்திற்குவாருமாதரே

அநுபல்லவி.

இனத்தாருடன்கூடிக்கொண் டிருக்கும்பெண்களிற்சிலர்
தனித்துப்பந்தடிக்கலாம் புஷ்பகப்பூட்பங்கொய்யலாம் (வனத்)

சரணங்கள்.

வாசமல்லிகைமலரெடுக்க வாம் நல்ல
வண்ணமையுடனேசாந்தொடுக்க லாம்-வெரு
நேசமுடன்கிளிகள்பேசுமொழியைப்பார்க் காய்
நிண்றுகேட்கலாம்நாமிங்குவாருங்க்கள் பூங்கா(வனத்)

மங்கையரேபொய்கைக்குக்கூட வாம்-அங்கே
மணலின்படியேவிளையாட லாம் இனி
சங்கைவென்னடிபாதபங்கயமீ னுட்டி
திருவனம்பெறவாருங்கள்மருவுவாரிரு வாட்டி(வனத்)

பிச்சமுல்லைமலர்கொய்ய லாம்-மணி
மேடையிற்சிவபூசைசெய்ய லாம்-திரு
மெச்சுகளீசுவர்க்காரத்தி செய்வதற் குகந்த
மந்தாரகப்புஷ்பங்கள்பாடிக்கொய்யடி சுகந்த-(வனத்)

சித்திராங்கதை-மந்திரிகளுக்குச்சொல்-வொச்சகம்.

இம்மாநிலங்கள்புகழ் வர்பெறுங்கற்பகவனத்திலே ... ❋
நம்மால்நினைந்தசொக்க நாதரடியிணைப்பணிந்து ... ❋
அம்மையிராமலநூதேவதைபேயிப்பொழுது ... ❋
அம்மானையாடிப்பொற்பந் தாடலாம்வாரீர் ... ❋

வசனம்.

வாருங்கள் எம்மந்திரிகளெல் லாந்தாதிகளே நாமெல்லோரு
ம் இந்தக்கற்பகப்பூங்காவனத்திற்குவந்தாய்ச்சிருக்கப்போகா
து சற்றுநேரம் அம்மானையாடிப் பிறகு பொற்பந்தடிக்கலாம்வா
ரும் அம்மா.

மந்திரிகள்சிப் பாகியென்சொல்-வசனம்.

அப்படியே நல்லதுஅம்மணி



சித்திராங்கதை-அம்மானையாடுகிற-தரு

இ-ம்-புன்னாகவராளி ஆடதாளம்.

பல்லவி.

ஆடுவோம்வாரீர் அம்மானை
ஆடுவோம்வாரீர்

அநுபல்லவி.

நாடும்மனையாமிருக்கியுமையவளைப்
பாடும்பதங்கள்கொண் டாடும்பெண்களிளே (ஆடு)

சரணங்கள்.

பம்பரம்போல்சுழன் றம்பரிதிரு கவே
அம்பரந்தனிலிருந்திம்பரில்வரு கவே(ஆடு)

கொங்கைக்குடங்கள்குலுங்கமனந்தன் னில்
சங்கையில்லாமலிச்சண்பகவனத்தன் னில்(ஆடு)

பிள்ளையார்க்கென்றுநாம்பேசியதோராட் டம்
மென்னப்பத்தெடுத்திங்கேவிசியதாராட் டம்(ஆடு)

விசையாகநானிதோவீசியெடுத்ததெ ண்டை
அசையாமற்பிடித்துக்கொண் டாலதற்கென்ன ண்டை(ஆடு)

வள்ளல்சொக்கேசரை மருவுங்கபந்தங் ணிலை
உள்ளத்தனிலெண்ணும்உண்மையாயெண் ணிப்ப(ஆடு)

இந்நாயமாதிலங்கிருந்தினைவருங் கூடி
புன்னாகவராளியிற் புகழும்பதங்கள் பாடி(ஆடு)

சித்திராங்கதைசொல் கலிப்பா.

அந்தமுள்ளமாதர்களே அம்மானையாடிவந்தோம் ... ❋
இந்தவிளையாட்டெல்லாம் இருக்கட்டுமினிபொருக்கால்... ❋
சிந்தைமகிழ்ந்திருவருப்பாய்ச்சேர்ந்தநாமெல்லோரும் ❋
பந்துவிளையாடிமலர்ப் பறித்தினிதாய்நாம்வருவோம் ...❋

வசனம்.

வாருங்கள் அழகின்மிகுந்த தாதிமார்களே அம்மானையெ
து இருக்கட்டும் இனிமேல்நாம்அனைவரும் இருவருப்பாய் எதிர்
நின்று சற்றுநேரம் மூக்குப்பந்தடித்துப் பிறகுநிய்ய சுகந்தபரி
மளமான்புட்பத்தைப்பறிப்போம் வாருங்களடியம்மா.

தோழிகள்சொல்-வசனம்,

அப்படியேபோவோம்வாரும்-அம்மணி,

சித்திராங்கதைபந்தாடுகிற-தரு இ ம்-மத்தியமாவதி - அடதாளம்,

பல்லவி,

பந்தெடுத்தாடுவோம்வாரீர்- பொற்பதுமைகள்போலநம் - புதும
பந்தெடுத்தாடுவோம்வாரீர் [லர்ச்சாலையில்

அநுபல்லவி,

வந்தெடுத்தவர்க்குப்பொன்வழங்குங்கற்பகக்காவு
இந்திடங்களுக்குமேலெங்கிருக்குது தாவு (பந்)

சரணங்கள்.

பிள்ளையார்க்கென்றுநான்போடுகிறேனே நாட்டம்
பெண்களேயிதன்மேலேஉங்களுக்குமன நாட்டம்
வள்ளல்சொக்கேசர்மருவுங்கயற்கண் ணிமை
உள்ளந்தனிலென்றுமுண்மையாம்பெண் ணியே (பந்)

விசையாகநானிதோவிடுகிறேன்பார் பந்து
வித்தகிமார்களேயித்தனைபே ரிருந்தும்
அசையாமலெதிர்நின்றுபிடிக்கவு முங்களால்
ஆகாதாயிந்நாட்டம்போகாது பெண்களா (பந்)

இதுவும்சித்திராங்கதைசொல்-விருத்தம்,

ஆவியொன்றுடலிரண்டாய் அமர்ந்ததாதிகளேயிந்த ... *
காவிபங்களுஞ்செவ்வாம்பல் கமலமும்நிறைந்துநின்ற *
வாவியிற்குளித்துநந்த வனத்தினிற்புகுந்துதிவ்ய ... *
பூவினிலதிசுகந்த புஷ்பங்களெடுப்போம்வாரீர் ... *

வசனம்.

உயிரொன்று உடலிரண்டென்று சொல்வதுபோல என்உயிருக்குயிராயிருக்கிற சகிகளேவாருங்கள் நாம்பந்தடித்த இளைப்புதீரும்படி நீலோற்பலபுட்பங்களும் செவ்விபுட்பங்களும்- செந்தாமரைப்புட்பங்களும் செங்கழுநீர்புட்பங்களும் நிறைந்துகுளிர்ச்சிபொருந்திய இந்தத்தடாகத்திலே குளித்துநந்தவனம் புகுந்துகற்பகப் புட்பங்களெடுத்து சொக்கநாதசுவாமியையும் மீனாட்சியம்மனையும் பூசைபண்ணியபின்பு நமதரண்மனைக்குப் போகலாம் வாருங்கள்சகிகளே,



இதுவும் சித்திராங்கதைசொல்-தரு-இ-ம்-மோகனம்- அடதாளம்

பல்லவி.

கற்பகப்பூப்பறிப்போம்-அம்மா நாம்
கற்பகப்பூப்பறிப்போம்

அநுபல்லவி.

தற்பரனொருசொக்கசுவாமியங்கயற் கண்ணி
பொற்பதமலிநங்கள்பூசைசெய்யவு மெண்ணி (கற்பக)

சரணங்கள்,

மல்லிகைமுல்லைமருவுங்குரு வேரும்
மெல்லியரேபலவிதமாயெடுப்பம் வாரும் (கற்பக)

பாரிசாதமலர்பறித்தோடி வாருங்கள்
நாரிபாகன்பாதமலினத்திற் சேருங்கள் (கற்பக)

மந்தாரபுஷ்பங்கள்மடியிலிற் கட்டுங்கள்
சித்தாமலோரிடஞ்சேரவே கொட்டுங்கள் (கற்பக)

கோகநகமாதுகுலவுமிந்தத் தினத்தில்
மோகனராகத்தைமொழிந்துநந்த வனத்தில் (கற்பக)

பொது - வசனம்.

இவ்விதமாய் சித்திராங்கதை விளையாடிக்கொண்டிருக்கையில் அர்ச்சுனராஜன் வருகிறவிதங்காண்க.

அர்ச்சுனன் பிராமணனுக்குச்சொல் - விருத்தம்.

காசிவேதியரேயிந்தகற்பகவனத்தைக்கண் ... ... *
ஆசையால்முழுதும்பார்க்கஅகத்தினில்நினைக்குதென்றன் *
பூசையுமுடித்துப்பொற்பூம் பொய்கையில்மூழ்கிதிவ்ய *
வாசனைமலரெடுத்துவருகிறேனிருந்திடீரோ. *

வசனம்.

ஆ-ஆ-ஆ-வாருங்கள் காசிப்பிராமணனே- நானிந்தக்கற்பகவனத்திலிருக்கின்ற அற்புதங்களைக்கண்டு ஆசைமுழுதும் போய்ப் பார்க்கவாமென்று எம்மனம் என்னுது ஆசையால் இந்தப்பொற்றாமரைத்தடாகத்தில் தீர்த்தமாடி தேவதார்ச்சனைக்கு உகந்த விபரிமளமான புஷ்பங்களைக்கொண்டு வருகிறேன் நீங்களெல்லோரும் இவ்விடத்திலேதானே யிருங்கள் சுவாமிகளே,

பிராமணன்சொல் - வசனம்.

அப்படியேபோய்வாரும் பிராமணசத்தியாசியே.

அர்ச்சுனன்சொல் - வசனம்.

ஆ-ஆ-ஆ-இந்தவனம் இந்திரலோகத்தி லிருக்கின்ற நந்தவனமோ-ஆ-ஆ-ஆ-என்னசுந்தரமோ-ஆ-ஆ-ஆ- இந்தபுஷ்பவிருக்ஷங்களெல்லாம் கற்பகவிருக்ஷங்களோ-ஆ-ஆ-ஆ-ஆ- என்னலக்ஷணம்-ஆ-ஆ-ஆ-ஆ-பாரிசாத புஷ்பத்தின்பரிமளமேபரிமளம்- இதைவிடவேறொருவனமுண்டா ஒருவனம் ஆ-ஆ-ஆ-ஆ இந்தமந்தார மலரின்மணமேமணம்-ஆ-ஆ-ஆ-ஆ- இதுவேநல்லகுணம்-ஆ-ஆ-ஆ-ஆ- இந்தமுல்லைமலரின்முகையே முகை-இதுவேநல்லவகை ஆ-ஆ-ஆ-ஆ இந்தமல்லிகைமலரின்வாசமேவாசம், இதுவேநல்லபிரகாசம்-ஆ-ஆ-ஆ-ஆ இந்தவனத்திலிருக்கின்ற இருவாட்சியே இருவாட்சி,இதைவிடவேறுண்டாஒருசாட்சி, ஆ-ஆ-ஆ-ஆ - இந்தவனத்தின் மருவேமருவு, இதுவேநல்லதிருவு, ஆ-ஆ-ஆ-ஆ-இவ்வனத்திலிருக்கின்ற சித்திரப்பதுமையேபதுமை,ஆ-ஆ-ஆ-ஆ இதோவிச் சித்திரப்பதுமைபோல் தோற்றுதே இதென்ன ஆச்சரியம்.

கட்டியன்சொல்-பொதுவிருத்தம்.

சுற்றினிதுயர்ந்தசித்ராங்கதையுந்தாதிகளுங்கூடி ... ※
பற்பலவிதப்புட்பங்கள்பறித்துக்கொண்டிருக்கும்போது ※
வெற்பினுமுயர்ந்ததோளான்விஜயனுமிவளைக்கண்டு ※
அற்புதமென்னவென்றுஆசைகொண்டிருந்தானே. ... ※

வசனம்.

இந்தப்பிரகாரம் சித்திராங்கதையும் தன்தாதிகளும் கற்பகப்பூஞ்சோலையதனிலே புஷ்பமெடுத்து விளையாடிக்கொண் டிருக்கும்போது அவ்வனத்தில் யாத்திரையாய் வந்திருக்கின்ற அர்ச்சுனமகாராஜன் சித்திராங்கதையினுடைய அதிரூபசவுந்தரியங்களைக் கண்டு மோகிக்கிறவிதங்காண்க.

அர்ச்சுனன்சொல்-கொச்சகம்.

பார்மகளோவரிவைப்பசுங்கிளியோயாவதிவள் ... ... ※
நீர்மகளோரத்தினமோதிக்கிலமோவிளம்புசுரர் ... ※
ஊர்மகளோநல்லஉரகர்மகளோயிவளோ ... ... ... ※
ஆர்மகளோவென்றிங்கறியமொழிகூறுவனே. ... ... ※

வசனம்.

ஆ-ஆ-கா-இவள்பார்மகளோ, பார்மகளாகிய பூமிதேவியோ பச்சைப்பசுமைபொருந்தியகிளியோ,பாந்தநிலையதலேயோடுகூ-



டிய திருப்பாற்கடலிற் பிறந்தமகாலட்சுமியோ, அல்லது-மாணிக்கப்பிரதமையோ,ஆனிமுத்தோ,ஊர்மகளாகிய தேவகன்னியோ உரகர்மகளென்றுஞ் சொல்லப்பட்ட நாககன்னியோ, ஆ-ஆ - ஆ- இவளாரோ, இவளுடைய அதிரூபசவுந்தரியம் என்னென்றுசொல்லுவேன். ஆ-ஆ.

அர்ச்சுனன்-சித்திராங்கதையைக்கண்டுமோகிக்கின்ற-தரு

இ-ம்-அசாவேரி தாளம்- ஆதி.

பல்லவி.

அதிரூபசவுந்தர்ய-ரதிசிரோன்மணியிவள்
ஆரெனத்தெரியேனே-இனிநானிந்தப் - பாரினிற்றிரியேனே

அநுபல்லவி.

சதிருதயம்போல்முழு-மதிவதனமாகவும்
காவிற்பாவைபோலு-லாவிதன்சகிகளைக்
கூவிமேவியபூவைத் தாவிக்கொய்யுகின்ற (அதி)

சரணங்கள்.

பந்தணைமார்த்துத்தங்கத்தை பொருந்தெழிலிவளங்கத்தைப்
பார்க்கக்கண்கள் கூசுதே நல்ல
பாரிசாதமலரை வாரிமுடித்தகூந்தல்
பரிமளங்களும் வீசுதே
சித்திரப்பதுமையென்ன-உச்சிதலட்சணமாக
சேடியருடன்கூடிவிளையாடியிருக்குதுநான்
செய்தயாத்திரையில் எய்தியபலனுள்ளம்
தைதனில்தெய்வியம் கனியெனக்கண்டுகொள்ளும் (அதி)

துவளுங்கொடியிடை இவளுக்குண்டோயில்லையோ
துணையிளமுலைப் பாரம்-நாளும்
சுமந்தெத்தவிதமாக நிமிர்ந்துநடந்துவந்தாள்
தோளையிந்துணை ஆரம்-கருங்
குவளையக்களுஞ்செம் பவளவாயும் பல்லும்
கொத்தமுத்துக்களைப்போல் வாய்த்ததிவள்தன் சொல்லும்
குயில்போலமொழிகூறுகிறாள் மட
மயில்போலமிருமலரிலைஅன்ன நடை (அதி)

மொண்டையினமருஞ்சேற்பவன்னடைவிழிகளும் பொங்
குமிழைக்கடிந்த முக்கும்-நச்சத்

குடமுலைமாமிருதடமலைநு மீளவி
குயிலைப்பழிக்கும் வாக்கும்-பொற்
றண்டையுஞ்சதங்கையும்வெண்டயமும் ஒலிக்கும்
சரணியிவளல்லவிதாணிவெண்ணைப் பலிக்கும்
தாவதாராநாராயணைக்கிணைக்கு கந்த
அசாவேரிராகம்ஆலாபிக்க வந்த (அதி)

அர்ச்சுனன்சொல்-கலிப்பா.

மானேமரகதமோமடமயிலோமால்குயிலோ ... ... ❋
தேனோமதாமிகுஞ்செங்கரும்போசெண்பகமோ ... ❋
வானோர்க்கமுதோவளர்மதியோமதன்றதியோ ... ... ❋
ஏனோமலர்வனத்தில்இருக்கின்றுளேந்திழையே. ... ❋

இதுவும் அர்ச்சுனன்சொல்பத்தியம் இ-ம்-புத்ராகவராளி.

கொண்டைகருமேகமோகண்டரிளம்பூகமோ
குழைகளும்வள்ளையோகுறியிலட்டு
முண்டகக்கண்கள்சேற்கண்டையோயிவள்முகம்
முழுமதியென்னவேமொழியலாகும்

வெண்டாளமணிகளோதொண்டையிதழ்வாய்நகை
விற்புருவமோயித்தமெல்லியற்கு
செங்கேநேர்குரும்பையோஇரண்டுமாமலைகளோ
செங்கமலமோகரங்கள்சேயிழைக்கு-இந்த

மண்டலத்தனிலிவட்குமருக்கொன்றில்லை
உண்டெனவுமுண்மையாய்உரைக்கலாமோ
கண்டுபேசாதிருந்தாலென்காமம்விடுமோ
அண்டையிற்போய்நீயாருடியென்றறிகுவேனே.

இதுவும்-அர்ச்சுனன்சொல்- இரட்டை-சீசபத்தியம்.

கொண்டலைவண்டினைத்தண்டலைவென்றகார்
கூந்தலழகுக்கொருகோடிசரணம்
குழலிப்பிறைநெற்றியில்கலைழவிற்புருவத்தினில்
குலவுமழகுக்கொருகோடிசரணம்
கூடியிலைக்கயலைநேர்விழிகளுக்கும்பொன்
குமிழ்மூக்கழகிற்குமுக்கோடிசரணம்
குளிர்வள்ளைக்காதிற்கும்ஒளிர்மதிமுகத்திற்கும்
கோவையிதழ்வாய்க்கும்நாற்கோடிசரணம்



குயில்கள்கிள்ளைகள்நாணபயின்மொழிக்கும்வெண்
கோவைநகைக்கோரைந்துகோடிசரணம்
குன்றுகள்குமிழ்ந்திமிழைவென்றபம்பரம்பூண்ட
கும்பமலைக்கிருமூன்றுகோடிசரணம்
கோளரியுமின்னலைவெலுடம்பையும்வென்ற
கொடியிடைக்கோரேழுகோடிசரணம்
கொடிஞ்சித்தேருதட்டையும்அடஞ்செய்அரவப்பையை
கூறுமல்குலுக்கெண்கோடிசரணம்
சரணம்நவகோடிசெந்தாமரைப்பூம்
கரங்களழகிற்குஞ்செங்காந்தலவிரல்கட்கும்
சரணம்அன்னநடைக்குமயிலெனஞ்சாயலுக்கும்
சரணமொருகோடிசரணமீதே
கருணையினிபெண்மீதில்தயைசெய்யுமானே

இதுவும் அர்ச்சுனன்சொல்-தரு - இ-ம்-தோடி-தாளம்-மட்டியம்

பல்லவி.

நீயாரடி பெண்ணே - உன்றன்
நிலையைக் கூறடிகண்ணே.

அநுபல்லவி.

தாயார்தந்தையாரவர்கள்பெயர்
தானென்னமோனந்தவனந்தன்னில்வந்த (நீயாரடி)

சரணங்கள்.

உன்றன்பெய ரென்னமோ-எனக்
குரைப்பதுயல்லக் கின்னமோ-மிகச்
சுந்தரஞ்சேர் ரன்னமோ-நாணும்
சோதியைத்தருஞ் சொர்ன்னமோ-திவ்ய
நந்தவனத்தில்சுற்றப்பட் பங்கனே
நாடிப்பத்தினியாடிய பெண்களே
மந்திரிகளாய்க்கொண்டதந்திர விதங்களே
மங்கையேநீர்சொல்லும்அங்கனே வெல்லும் (நீயாரடி)

செங்கையினில்வில் லேது-சரிசெய்
தேவனாயும்வெல் லாது-இந்தத்
தங்கமகுடம் நில்லாது-அடி
தையலேசெங்கோற் செல்லாது
மங்களமிருபங்கோன் கண்டு

வாழ்வுலகிலினிமாதருக் — குண்டு
சம்மதமென்றுடனுன்சொற்கேட்க — விரும்பித்
தானிங்குமிதுசக்கிரவாளத்தொழிற் — சொல்லு (நீயாரடி)

செம்பவளவா — யாரா-மொழி
செப்புங்காமப்பசி — தீர-நான்
அம்பணைவிக்குஉனைத் — சேர-மையல்
கொண்டுதவிக் — காசந்திர
விம்பவதனதரிசனந் — தாடி
மேதினியெங்குந்திரிந்துங்கண்டு — தேடி
நம்பவந்தேன்புஷ்பசொம்பனேயைத் — தோடி
ராகம்பசுருமிவேகமுடன் — வாடி (நீயாரடி)

இதுவும்-அர்ச்சுனன்சொல்-கலிப்பா.

அன்னமேதேனேயமுதேசொல்லாணிமுத்தே... ... *
சொர்ணமொழியிருந்தநுனைப்பெண்கிளோர்மணியே *
வர்ணமேபுஷ்பவனவாய்திறந்துபேசாமல் ... ... *
இன்னமேன்சும்மாயிருக்கின்றுபேதநிலையே. ... ... *

வசனம்.

நீயாரடி-அன்னமே தேனே-அமிர்தமே- தெள்ளமுதே-பசுங்கிளியே சொர்ணமே-ஸ்திரீப்பெண்களுக்கெல்லாம் சிரோரத்தினமே நீ இந்தக்கற்பகப்பூங்காவனத்திலேனென்னுடன் கலந்துபேசியென்மாயத்தைத்தீரடிபெண்ணே, என்கண்ணே, என்கண்மணியே என்காமரமே.

சித்திராங்கதை-தன்தோழிகளுக்குச்சொல்-கலிப்பா.

கன்னியரோதாயிந்தக் கற்பகப்பூங்காவனத்தில் ... ... *
மன்னியசுகந்தமருமலர் பொறிக்கவந்திடத்தே ... ... *
அன்னிதயிதென்னமோ அந்நனைப்பரலிங்கிருந்த ... *
சன்னியாசியிவனோ சமர்த்தெல்லாம்பேசுகின்றான் ... *

வசனம்.

வாருங்கள் என்சகிகளே நாம்பூலோகமாய்கையையொழித்து அபேரின்பத்திற்குரியதாகிய மதுரைசொக்கநாத சுவாமியையும் மீனாட்சியம்மனையும் பாதமேகதியென்று சுகந்தபுஷ்பங்கொண்டு அர்ச்சனைசெய்யநாம்நந்தவனத்திற்குவந்தயிடத்திலே இவனோ ஓர்பிராமணசந்நியாசியைப்போல்காணுது நம்மைப்பெண்ணேயென்றும்கண்ணேயென்றும் சற்றேபேசடியென்றும்மெத்தமோசடியாய்ப்பேசுகிறான் இவன் ஆரடிசகிகளே.



சித்திராங்கதை-தோழிகளுக்குச்சொல்- தரு-ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

சகிகளேயிங்கிவ — னாரடி-சற்று
சமர்த்தெல்லாம்பேசுகிறான் — பாரடி.

அநுபல்லவி,

மகிதலந்தனிற்பெண்கள் ஆள்கூடுமோ — வென்றான்
மையலைத்தீர்க்க அடிமையலோ — வென்றான் (சகி)

சரணங்கள்.

நங்கமுடியுனக்குத்தகாதடி — யென்றும்
தாரணியாளவுக்குவாகாதடி — யென்றும்
செங்கோற்செல்வாதென்றுமுன் கையில்லேதென்றும்
செப்புகிறான்கல்வியப்புறம்போகச் சொல்வீர் (சகி)

தந்தைதாய்பெயருமென்றன்பெய — ரிவனோ
தனித்துக்கேழுக்கின்றவன்சந்நியாசி — யெவனோ
இந்திடத்திலிவனையிருக்கவொட்டாமற் — கையை
இழுத்துப்பிடித்துக்கொள்வீர் கழுத்தைமடக்கித்தள்ளுவீர்.

குத்திடிக்கன்னமில்லாமல்முஷ்டியெடுத்தெற் — றானும்
குவலயமெங்குந்திரிந்திவனிங்கேவந்தான்கேளும்
பிட்சைக்குவந்தவன்பெண்டுக்கழைத்தா — னென்ற
பேச்சிதுபோல்ஸ்ரீராகம்வாச்சகிங்கிருக் — கின்ற (சகி)

இதுவும்-சித்திராங்கதைசொல் - கலிப்பா.

மெல்லியரோநமக்கிந்த மேதினியிலிடொருவர் ... ... *
இல்லையெனச்செங்கோ லொன்றேற்றிமணிமுடிதரித்து *
மல்லிகையுமுல்லை மலரெடுக்கவந்திடத்தே ... ... ... *
சல்லியமிதென்னமோ நானறிந்துவரீரோ, ... ... *

வசனம்.

வாருங்கள் மந்திரிகளானசகிகளே நமக்கிந்தபூலோகத்திலெவரும் எதிரில்லையென்று இளவரசபட்டமும் தங்கமகுடமுஞ் செங்கோலுமேந்திக்கொண்டு மதுரைப்பட்டணம் ஆண்டு இந்தநந்தவனத்திற்குவந்த நம்மைக்கண்டு சற்றும்பயமில்லாமல் பெண்ணேயென்றும் கண்ணேயென்றும் சற்றேபேசடியென்றும் மெத்தமோசடியாய்ப்பேசுகிறான் இந்தபிராமணசந்நியாசியை நீயாரென்றுகேட்போம் வாருங்கள் என்சகிமார்களே;

சகிகள் சொல்-வசனம்.

அப்படியே கேட்போம் வாரும் அம்மணி.

சித்திராங்கதை-சந்நியாசிக்குச்சொல்-கலிப்பா.

மாதாசசெய்யுமிந்த மதுரையெனுந்தலத்திற்சொக்க ... *
நாதரையுமங்கயற்கண் நாயகியையுந்தரிசிக்கும் *
காதலிருமெய்களிநீ கண்டுமையல்கொண்டுநின்ற ... *
ஆதென்னமௌனியரே சொல்லும்பிராமணரே ... *

வசனம்.

பெண்ணரசாட்சிசெய்யும் இந்த மதுராபுரி பட்டணமென்னும் ஸ்தலத்தில்வாழ்கின்ற சொக்கநாதசுவாமியையும் மீனாட்சியம்மனையும் தரிசிக்கும்பொருட்டாய் வந்த நந்தவனத்தில் எங்களைக்கண்டு மையல்கொண்டேனென்றும் வம்புவார்த்தைப்பேசிய பிராமணா நீயார் எங்கிருந்தயிங்குவந்தாய்சொல்லுஞ்சந்நியாசி.

சித்திராங்கதைக்கும் - அர்ச்சுனனுக்கும் - வாது-தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

அந்தணன்போலிந்த நந்தவனத்தில்வந்த
திருள்நின்றாதன் காசியோ-உன்றன்
பெரும்பிராமணசந்தி யாசியோ - இங்கே
வந்திடத்திலுனக் கிந்தக்கேடுமதி
வந்ததென்னடாசொல்லும்பிராமணா

அர்ச்சுனன்சொல்-தரு-இ-ம்டை

சொல்லுவதென்னடி மெல்லியேகேள்வெகு
தூரமென்னூர்துகாசி நான்-என்றன்
பெரும்பிராமணசந்நியாசி நான் - இந்த
எல்லையில்யாத்திரை நல்லதீர்த்தமாடி
இங்குவந்தேனடி பெண்ணே

சித்திராங்கதைசொல்லல்.

அடிப்பெண்ணேயென்றுங்கள்குடிபெண்ணைப்போலென்னி
அழைக்கிறாயென்னடா வேதியா-தப்பிப்
பிழைக்கமாட்டாய்மரியாதை யாய் ஒரு
நொடிப்போதிலுன்றுயிர் மடிப்பார்கள்முப்புரி
நூலோனென்றுஞ்சொல்லும் பிராமணா

அர்ச்சுனன்-சொல்லல்.

முப்புரிநூலோனென்றிப்படியெங்கும்
மொழிவதும்நிஜந் தானடி-உன்னைத்



தழுவியணையவந் தேனடி இந்தக்
கற்பகவனத்தில் சப்பிரமஞ்சத்திலிற்
கலந்தணைவோம்வாடிகண்ணே

சித்திராங்கதை- சொல்லல்,

கண்ணேயென்றம்அடிபெண்ணேயென்றுங்கற்ற
கல்வியெல்லாமிங்கேன் கழட்டோய்-வித்தை
சொல்லியேகண்ணே கழட்டோய்-நீ
பெண்ணிவந்தபெண்ணைநண்ணியிந்தமண்ணில்
இறப்பாயிருபிறப்பாளாய்

அர்ச்சுனன் சொல்லல்,

இருபிறப்பாளாவுமுருவிறப்பாயெய்திய
இகழ்ச்சியாய்ப்பேசாதப் பாதா உன்றன்
மகிழ்ச்சியழிப்பேனிப் போதா ஐக்
தருமமறப்பாயிருவருஞ்சிறப்பாயிங்கே
தழுவியணைகுவோம்வாடி

சித்திராங்கதை- சொல்லல்,

அழுவுங்கைகளுக்கிழித்தொழுவும்விழுமடா
தப்பிலாப்பார்ப்பானென்றும் மாதவா-உன்னைத்
திப்பாகிப்பவென்ன மோதவா காலுக்
கழுவிலகிட்டுயிர்கழுவில்மாட்டியுன்றன்
ஆண்மையையழிப்பேனுன் அந்தணா

அர்ச்சுனன்- சொல்லல்,

அந்தணனென்றென்னைவந்தனஞ்செய்யாமல்
ஆண்மைக்குலைப்பேனென்று, நொடிக்கிறாய் அம்மா
விண்மலப்பேனிக்கே யடிக்கிறாய்-இந்த
நந்தவனத்தினில்தந்தனன்மோகமே
நாதநாமக்கிரியை ராகமே

சித்திராங்கதை- அர்ச்சுனனுக்குச்சொல் விருத்தம்,

இவ்விடம்விட்டுப்போகா திருந்தாலுன்வாயின்மண்ணில் *
கவ்விடத்தள்ளியுன்றன்காலுக்குவிலங்கைப்பூட்டி ... *
எவ்விதத்தாலிவ்வாறுக் கிரையிடுவார்கள்பெண்கள் ... *
அவ்விடம்விட்டுநீங்கி யறிவுகெட்டவனேபோடா ... *

வசனம்.

ஆரடா அறிவுகெட்டபிராமணா நீ இந்தக்கற்பகவனத்தில் இன்னஞ்சற்றுநேரம் வம்புவார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தாயே

யானால் உன்னால் உன்வாய் இந்தமண்ணிற் கவ்விக்கொள்ளும்படி க்கழுத்தைமடக்கித்தள்ளிக் காலுக்கு அழுவிலக்குப்பூட்டி எவ்விதத் தாலும் என்னு தாதிமார்கள் உன்னை இவ்வாறுக் கொயிடுவார்கள் ஆகையால் இப்பொழுதே ஓடிப்போடாபிராமணா

அர்ச்சுனன் சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்,

ஓடிப்போவென்றாலின்னம் ஒருதொடிதனிலேயுன்னைக் *
கூடிப்போகாமற்போனால் குவலயந்தனிலெலன்றாவி ... *
வாடிப்போகத்தோபாவி மன்மதபாணம்பட்டுத் ... *
தேடிப்பூங்காவனத்திற் சேர்ந்தனைத்திடுவமொராய் ... *

வசனம்,

வாடிபெண்ணே - என்கண்ணே - என்கண்மணியே - இன்னம் என்னை ஓடிப்போவென்றுசொல்லுவது உனக்குத்தர்மமா; உன்னைக்கூடிப்போகிக்காமற்போனால் மனதாயில்லாதபயிர்போல் என துஉயிர்வாடிப்போகாதா, இனியாகிலும் என்பேரில்தயவுசெய் து இந்தக்கற்பகவனத்தில் என்னை நீ மருவியணையாமற்போனால் என்மையல்மட்டுப்படாதடி என்கண்மணியே,

இருவரும்-அர்ச்சுனன்சொல-வாது-தரு

இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்

மட்டுப்படாதென்றன் மையலே-என்னை
மருவியணைபடி தையலே-இனி
கட்டியணைந்து முத்தமிட்டுக்கொள்ளடி சற்றே
கட்டிச்சுட்டாற்போற்கைவிட்டுவிடாதே முத்தே (மட்டுப்)

சித்திராங்கதைசொல்-த-ரு-இ-ம்-டை

தத்தித்தலைகீழாய் விழுகிறாய்-காம
சமுத்திரத்திலேண்டா முழுகிறாய் என்னைச்
சுற்றிவருகின்றமாதர்கண்டால் மேலே
அக்கிமன்னுக்கிணையாக்குவரோருக்காலே (தத்தி)

அர்ச்சுனன்-சொல்லல்,

ஒன்றிரண்டாகப் பேசுறாய்-இன்னம்
ஒளனவடிமெத்த வீசுறாய்-இந்த
மன்னுக்கிணையாக்கள் மணியிருந்ததெல்லாம்
மாதரசேயுன்றன் ஆதரவில்லாமல் (மட்டுப்)

சித்திராங்கதை-சொல்லல்,

ஆதரவென்னடா வேதியா-சும்மா
அப்புறம்போமினி யாதையாய் எம



காதலனென்றுருதிகண்டால் என்னம்
கலங்க அடிப்பாருன்னைமலங்கப்பிடிப்பார்சொன்னேன் (ஆதர)

அர்ச்சுனன்-சொல்லல்.

கன்னங்கலக்க அடி பாரோ-பெண்கள்
கையால்மலங்கப்பிடிப்பா ரோ-மட
அன்னமேநீயென்னைச்சொன்னதெல்லாஞ் சொல்லு
அங்கஜன்கையிலும்மங்கையே நீவெல்லும் (மட்டுப்)

சித்திராங்கதை சொல்லல்,

என்கையில்லானுன்னைக் கொல்லுவேன்-இன்னம்
எதிர்த்தவனாக்கூட வெல்லுவேன்-இந்த
தங்கமுடமுஞ்செய்கோலுங்குறியாமல்
தாரணியாளுவதாரென்றறியாமல் (ஆதர)

அர்ச்சுனன்-சொல்லல்,

மாதராசாளுவ தேஜ-தாதி
மந்திரிகளென்னதீ தகாது இந்தப்
பூதலமாதர்கள்ளாதினிற்கேழ்க்கவும்
புத்திகெட்டவனென்றுருத்தாவர்தவடையில் (மட்டுப்)

சித்திராங்கதை-சொல்லல்,

தவடையில்குத்துவ பாரடா-இன்னம்
சற்றுநேரமிருந்து பாரடா-நீ
இவடத்திலென்னமோகவடந்தனஞ்செய்ய
என்னிமத்தியமாவதியைநன்னிருயறைநீமெய்யை (தத்தி)

சித்திராங்கதை-தோழிக்குச்சொல்-விருத்தம்.

சகிகளேகேட்டீரோ விச்சந்தியாகிசொன்னசொல்லை ... *
மகிதலந்தனையாளும் மந்திரிகள்நீங்களாக ... ... *
விகிதமிதெல்லாஞ்சும்மா வீணென்றுனினைக்கொல்ல *
வகையதுவென்னநீங்கள் வார்த்தையொன்றுரைசெய்வீரே,

வசனம்.

வாருங்கள்என்சகிகளே, இந்தப்பிராமண சந்நியாசிசொன்ன வம்புவார்த்தைகளைக்கேட்டீர்களா, நாமிந்தமகாராசபட்டணம் ஆளக்கூடாதென்றும் நீங்களெனக்கு மந்திரிகளாகத்தகாதென்று ம், தன்னைமருவியணையவாடியென்றும்-போடியென்றும்- இன்ன ம் வம்புவார்த்தைகளைப் பேசுகிறதைப்பார்த்தால் நமதுபட்டண ம் என்னமோ கபடமாய் மோசஞ்செய்யவந்தவனைப்போ லிருக்கு

ல்லாதம்மா, ஆகையால் இவனைக்கொல்லவேணும் இதற்கொரு உபாயஞ் சொல்லுங்கள் சகிகளாகியமந்திரிகளே.

சித்திராங்கதைக்கு- முதல்தாதிசொல்-விருத்தம்.

சிசுவைவேதியனையின்னுஞ் சேர்த்திருந்தையலாரையும் ... *
பசுவையுங்கொன்றாற்பஞ்ச பாதகமென்பார்முன்னோர் *
அசைவிலாநமதுசெங்கோற் கனித்தியம்வாராதம்மா ... *
இசையவேயிவனைத்திட்டி யிவிடம்விட்டோட்டுவோமே *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி குழந்தையை-பிராமணனை தாய் தந்தையை-பசுவை-இவ்வைந்தையுங் கொல்வதுமகாபஞ்ச பாதகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள் ஆகையால் நாம் இவனைக்கொல்லலாகாது நமதுபட்டணத்திலிருந்து ஒருகாலும் வாராது இவனைத்திட்டிமிரட்டி இந்தநந்தவனத்தை விட்டோட்டிவிடுவோமம்மணி,

சித்திராங்கதைசொல்-வசனம்,

ஆனால் உங்கள்மனதிற்றுச்சம்மதியெப்படியோ அப்படியே செய்யுங்கள் சகிகளே.

இரண்டாவதுதோழி-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்,

அஞ்சமாதரசேசித்திராங்கதை யெனுந்தாயேசொன்ன ... *
பஞ்சமாபாதகத்திற் பார்ப்பானைக்கொல்வதென்ன ... *
கொஞ்சமாங்கொலையொன்றல்லால் கோள்பொய்க்கட்களவும்
வஞ்சமாம்பாவமெல்லாம் வரும்நமக்கிதுநன்றல்ல [பொல்லா

வசனம்.

கேளாய் செந்தாமரைக்கமலத்தில் வாசஞ்செய்யும் ஸ்ரீமகாலட்சுமியைப்போலும் விளங்காநின்ற சித்திராங்கதையம்மணி-குழந்தை-பிராமணன்-தாய்-தந்தை-பசு-இவ்வைந்தையுங் கொல்லப்போகாதென்று இவள்சொன்னவார்த்தை சரிதான் இதனினும் பிர்ம்மத்திசெய்வதென்னகொஞ்சமா, மேலும்-கோள்-பொய்-கள்-களவு-என்றுசொல்லும் பஞ்சபாதகம் வருவதுமன்றியில் பொல்லாத வஞ்சனைதுரோகஞ்செய்த பாதகமும் வருமாகையால் பிர்ம்மஹத்திசெய்வது தர்மமல்லதாயே,

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

போசனைபலவுமெண்ணி யுனதுதாதிகளோடின்னம் ... *
பேசினிதிருந்தாற்காமம் பிராணனைவாட்டுதென்றன் ... *



ஆசைதீர்க்கவெண்ணி அகமகிழ்ந்தணையவாராய் ... *
காசினிபுகழுஞ்சித்திராங் கதையெனுமயிலென்கண்ணே *

வசனம்.

வாராய்பெண்ணே நீயுனதுதாதிகளுடனே பலபல ஆலோசனைபண்ணிக்கொண்டிருந்தால் என்னுயிர்பிழைக்குமா, இனிமேலாகிலும் என்காமவிகாரத்தைத்தீர்த்து என்னுயிர்பிழைக்கச் செய்கின்றவளானால் நாமிருவரும் மருவியணைவோம் வாராய்பெண்ணே என்கண்ணே,

அர்ச்சுனனுக்கும்-சித்திராங்கதைக்கும்- வாது- தரு-

இராகம்-தந்நியாசி- அடதாளம்.

ஏதுக்கோபோசனை பண்ணுராய் பெண்ணேயின்னம்
என்னடிமோசங்க ளெண்ணுராய்
மாதர்க்கரசியேயுன்மணவாளனு னல்லவோ
மையலாலின்னமுமடிமையலேயென்னைக்கொல்லவோ (ஏது)

சித்திராங்கதைசொல் - தரு-இ-ம் ஷ

வாதுக்கிடமு மாச்சதே-ஐயபோவென்றன்
மதியுங்கலந்து போச்சதே
சூதுக்காரனென்றுன்னைத் - தொழுவிலங்கிற்போடாமல்
காதுமூக்கையுங்கொய்துக்கடக்கவோட்டிவிடாமல் (வாது)

அர்ச்சுனன்- சொல்லல்,

ஓட்டிவிட்டாலும் போவனோ உன்னைக்கூடாமல்
உயிரைக்கொன்றாலுஞ் சாவனோ
நாட்டிலுன்னோரறியநல்லமணம் நடத்த
கூட்டியுன்னையுங்கூடக்கொண்டுபோகாமற் கடக்க(ஓட்டி)

சித்திராங்கதை- சொல்லல்.

இதற்கோவுனைவைத் திருந்தார்-என்றன்றந்தை
என்னதுன்மதி யீனந்தார்
சதிகாரநீயென்றுந்தன்மனதிற் சற்றும்
மதிக்காமலிவனொரோமரையவனென் றறைந்து (இதற்)

அர்ச்சுனன்- சொல்லல்.

வைத்திருந்ததற் கென்னமோ-பெண்ணேநானுன்றன்
மணவாளனெனப்பதாற்சின்னமோ
உற்றதுசொல்கிறேன்உண்மையாயிதுபா ரடி
க்ஷத்திரியக்குலத்தில்வந்தநந்தன னடி (வை)

சித்திராங்கதை சொல்லல்.

கனஞ்செயப்பெருமா னுக்கு-நீயோஅவர்
தாமரைப்பாதத் தானிற்கு

தினஞ்செய்வோனுதயம்போல் திரேகத்தழகுள்ளவனை
மனஞ்சலிக்குமேகன்கள் மாதர்க்கனேகம்வேணும் (தனஞ்)

அர்ச்சுனன் சொல்லல்,

நடவனே நான் ஞானடி-பிராமணவேஷம்
எடுத்தாத்திரைவந் தேனடி
தேடவுங்கிடைக்குமோசேயிழையே நானே
கூடவருவாய்நல்லக்குணத்திலிருந்த மானே (நட)

சித்திராங்கதை- சொல்லல்.

கொண்டவன்போலழைக்கி றாய்-பொல்லாதபண்டா
குலப்பெண்ணழைப்பெண் விலமைக்கிறாய்
கண்டவிட்டிடத்தெல்லாருங்கொண்டகஞ்செய்ய நாடி
சண்டைசெய்யவேவந்தாய்தந்திபாசிரகம் பாடி (கொ)

அர்ச்சுனன் சொல்-விருத்தம்.

மறையவனென்றுசந்து மனதினிலெண்ணவேண்டாம் *
குறைபொன்றில்லாமல்வாழும் குருகுலத்தரசர்தம்மில் *
பொறையினின்மிகுந்ததர்மபுத்ரன்பின் னுதித்தோன்தம்பி *
அறைபுமென்பேரெல்லோரும் அர்ச்சுனனென்பார்பெண்ணே

வசனம்.

கேளடிபெண்ணே சித்திராங்கதைநான்பிராமணனென்று எண்ணவேண்டாம் எங்கள் பூர்வோத்திரஞ்சொல்லுகிறேன்கேள் எங்கள்குலம் குருகுலம், என்தகப்பன் தேவேந்திரமகாராஜன் என் தாய் குந்திபோஜராஜன் குமாரத்தி-என்றமையன் தர்மபுத்திரமகாராஜன்-வீமசேனன் என்றம்பிமார்கள்-நகுலன் சகாதேவன்-எங்கள்பட்டணம் இந்திராபுரி-என்பெயர்-அர்ச்சுனமகாராஜன்- என்று சொல்லுவார்கள் நான்பிராமண சந்நியாசிவேஷங்கொண்டு பூலோகத்தில் புண்ணியதீர்த்தயாத்திரைக்கு வந்தேன் ஆகையால் என்னை முக்கியபெயற்கிறபிராமணனென்றெண்ணிச் சந்தேகப்படவேண்டாம் இனிமறுவார்த்தைப்பேசாமல் என்னைமருவியணையவாடிபெண்ணே.

சித்திராங்கதை-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்.

மறையவனென்றுவந்தான் மகிழ்வுடன்அன்னபானம் *
குறைபறக்கொண்டபின்னும் குருகுலமன்னனென்றான் *
முறையிலதம்மைக்கூடி மோகமுந்தீர்த்தாற்பின்பு *
பறையனென்றாலப்பாவித்தப்பாவியை யென்னசெய்வோம்

வசனம்.

கேளுங்கள்என தாதிகளே இவனைக்கொண்டுபோய்ங்களென்றுசொன்னால் பிரமஹத்திசெய்யப் போகாதென்று சொன்னீர்



களே இப்போது இவன்சொன்ன சொல்லைக் கேட்டீர்களா முன்னேவரும்போது, பிராமணசந்நியாசி வேஷங்கொண்டுவந்தான் வந்தவனுக்கு என்றந்தையாகிய பாண்டியமகாராஜன் சாயக்கினி கைகள் வஸ்திரபூஷணமுதலானதும் கொடுத்து நமதுசந்நிதானத்தில் வனபோசனஞ்செய்துக்கொண்டு இங்காலமிருந்தாப் போலமென்று சொன்னார் அப்படியிராமல் அடிமடியிற்கையைப் போட்டதுபோல் நாம் பூசிக்கவந்தயிடத்தில் என்னைக்கண்டு மோகித்து நான்பிராமணனல்ல குருகுலவம்சசிகாமணியாகிய அர்ச்சுனமகாராஜனென்று சொல்லுகிறான் அதைக்கேட்டு பூலோகமாயைக்குள் அகப்பட்டு இவன்பேச்சை நம்பிச் சம்மதித்தால் பின்பு தாதிகளெல்லாரையும் விட்டுநீங்கும்பொருட்டு நான் பறையனுக்கேயென்று சொல்லுவான் பேதைகளுக்கு இந்தப்பாவியை யென்னசெய்யலாம் சகிகளே.

முதல்தோழி நாயகிக்குச்சொல்-விருத்தம்.

கொக்கினுந்தோலிக்கொக்கும் கூட்டத்தைக்கெடுத்ததென்று
இக்கிலவாழ்பார்ப்பார் தம்மில்இருட்டின்போலிவன்பிறந்து *
அக்குலந்தனையனைத்தும் அழிக்கவந்ததிருவின்னம் ... *
சக்கிலியென்றுசொல்வான் சந்தேகமில்லையம்மா ... *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி கொக்குக்கூட்டத்தில் ஒருதோஷிகொக்கிருந்து அக்குலத்தனைத்தையும் கெடுத்ததென்றுசொல்லுவார்கள் அதற்குச்சரியாய் தான் இவன்நல்லபிராமணகுலத்தில் பிறந்தவனைப்போலே காணுது அப்படிக்கிருந்தும்நானவெதிரியனென்றுசொல்லுகிறபடியிருல் இவனை நம்பக்கூடாதுஇவ்வளவு சக்கிலியென்றுஞ்சொல்லுவான் இதற்குச்சந்தேகமில்லை அம்மணி.

இரண்டாந்தோழி- அரசிக்குச்சொல்-விருத்தம்.

சைவசொக்கேசர்நாட்டில் சாதியிலுயர்ந்தோரென்றும் *
ஐவர்சோதரனென்றும்பேர் அர்ச்சுனனென்றும்உன்னைக் *
கைவசப்படுத்தவேண்டிக் காரணமென்னவிப்பார்த்தால் *
சைவியனென்றும்சொல்லு வாயென்றுதோணுதம்மா *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி திவ்யசைவசிவசொக்கநாதசுவாமிவாசஞ்செய்யும் திருமதுரையென்னும் புண்ணியக்ஷேத்திரத்தில் தீர்த்தயாத்திரை பிராமணசந்நியாசியாய் வந்தவன் இத்தகற்பத்தில் உன்னைக்கண்ட தட்சணமே க்ஷத்திரியகுலமென்றும் தர்மபுத்திரமகாராஜனுக்குத் தம்பியென்றும் அழகில்மிகுந்த அர்ச்சுனமகாராஜனென்றும் உறவின்முறைகொண்டுவந்துவலைமோச

ஞ்செய்ப நினைத்தவன் க்ஷத்திரியகுலமென்றுமாத்திரமா சொல்லு
வான்போலேதோணுது அம்மணி.

முதல்தோழி-நாயகிக்குச்சொல்-விருத்தம்,

சாஸ்திரமறையோனென்றும் சந்நியாசியென்றுமின்னம் *
கோத்திரமுனாக்கின்றான் குருகுலத்தரசர்தம்மில் ... *
பாத்திலாப்போகவந்த அர்ச்சுனனென்றவன்றான் ... *
சூத்திரனென்றும் நாளைச் சொல்லுவானம்மா *

வசனம்.

கேளும்இராசபரமேஸ்வரி இவன்பிராமணசந்நியாசியாய்வந்தவன் இப்போது க்ஷத்திரியகுலமென்றும் தர்மபுத்திரமகாராசனுக்குத்தம்பியென்றும் அர்ச்சுனமகாராசனென்றும் சொல்லத்துணிந்தவன் வைசியகுலமாத்திரமா சொல்லுவான் சூத்திரகுலமென்றும் சொன்னாலுஞ்சொல்லுவான் அம்மணி.

இரண்டாவதுதோழி- அரசிக்குச்சொல்-விருத்தம்.

வானச்சந்திரன்போல்வந்து வளர்சித்திராங்கதைபெறல்ல *
ஞானசங்கரர்சொக்கேசர் நகரில்அந்தணனைப்போல்வந் *
தானசக்கிலியல்லாமல் தனஞ்செயனென்றுமின்னம் ... *
ஈனசக்கிலியென்பானை யிவனைநம்பொன்னுதம்மா ... *

வசனம்.

கேளும்பரமேஸ்வரி தினப்பிரகாசசந்திரனைப்போல்தினமொருமேனியாய்வளர்ந்த சித்திராங்கதையம்மணி நல்லசிவஞானசொக்கநாதசுவாமி வாசஞ்செய்யுந்திருமதுரைப் பட்டணத்தில் இவன்பிராமணனைப்போலே வந்து நம்மைக்கண் டச்சமென்கிற பயமுங் கிலியும் இல்லாமல் க்ஷத்திரியகுலஅர்ச்சுனனென்றுசொன்னவன் சக்கிலியென்றுஞ்சொல்லுவான்இன்னஞ்சற்றுநேரமிருந்தால் ஈனச்சக்கிலியென்றுஞ் சொல்லுவான் இவன்பேச்சை எவ்வளவும் நம்பப்போகாதம்மணி.

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

மலைக்கும்பாரியக்கன்மேலே விழுதலைக்காய்க்குமோவென்றால் *
கொலைக்குமோராயிரங்காய்க் கொத்துக்கிராயிரங்காய் ... *
இலைக்குமூவாயிரங்காய் எனச்சொலிக்குடித்தனத்தைக் ... *
கலைக்குமாதர்கள்தன்பேச்சைக் காதிலுங்கேட்கலாமோ *

வசனம்.

கேளடிபெண்ணே சித்திராங்கதை மலைக்கும்பெரிதாயுயர்ந்த கல்லின்மேலே விழுதலைக்காய்க்குமோவென்றால் கொலைக்காயிரங்காய் கொத்துக்கிரண்டாயிரங்காய் இலைக்கு மூவாயிரங்காய் இப்படிக்கெல்லாங்காய்க்குமென்று சொல்வதுபோல்பிராமணகுலத்திற்பிறந்து க்ஷத்திரியகுலமென்று சொல்கிறேனென்று நீசொன்ன வார்த்தையைக்கேட்டதாதிப்பெண்கள் க்ஷத்திரியகுலமென்றுமாத்திரமாசொல்லுவான் வைசியனென்றுஞ் சொல்லுவானென்றுஞ் சூத்திரனென்றுஞ் சொல்லுவானென்றுஞ் சொல்லிக் குடுமியைக்கெடுத்து ஒருகுடியை ஒன்பதுகுடியாக்கும் பெண் பெண்சாதிகளுடைய பேச்சைக்காதிலுங்கேட்கலாமா உன்னுடையதாதிப்பெண்களுக்கும் உனக்குந்தெரிந்தது இவ்வளவுதானோ இனிநானுமேற்கொண்ட ஆசையைத்தீரடிபெண்ணே



சித்திராங்கதை-புலம்பல்-தரு-இ-ம்நீலாம்புரி-ஆதிதாளம்.

ஆகாசசிவனேயென் விரதத்தைப்பிழுவித்த
அலிலம்நகைத்திடாதே தெய்வமே-இனி
ஆதரவுன்றனின் பாதமலரல்லால்வேறில்
லாரெனக்குத்துணை தெய்வமே
புரமெரியச்சிரித்த பரமசிவனேயுன்றன்
பொற்பாதந்தனைநானுந் தெய்வமே-சிவ
பூசைசெய்யவுமெண்ணி வாசமிகுங்கற்பகப்
பூபறிக்கவந்தேனே தெய்வமே
காமக்குரோதலோப மதமோகமாச்சரிய
கர்மவலையிற்சிக்கித் தெய்வமே-என்
கற்பழிந்துபோகாமல் தற்பரசொக்கநாதா
சரணமென்னைக்காரும் தெய்வமே
மாமலர்ச்சோலையுஞ்செந் தாமரைவாவியுஞ்சூழ்
மதுரைமீனாட்சியென்றுந் தெய்வமே
வாலாம்பிகைபொற்பாக நீலாம்புரியிராக
மறைபோதியவிவேக தெய்வமே

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

மங்கைபங்காளனென்றும் மதுரைவாழ்சொக்கநாதர் *
அங்கயற்கண்ணியென்னும் அம்மையுமருகிருக்க ... *
கங்கையைச்சடையில்வைத்த கதையைநீகேட்டிருந்தாம் *
சங்கையென்னடியுனக்குத் தழுவநாம்அணைவோம்வாடி *

வசனம்.

கேளடிபெண்ணே சித்திராங்கதை அந்த மங்கைபங்காளனுடைய மதுராசொக்கநாதசுவாமியை நினைந்து அழுகிறாயென்னடி

அடர் இடப்பாகத்திலெந்நாளும் பிரியாமலிருக்கின்ற மீனாட்சியம்மனை அறியாமல் கள்ளத்தனமாகக் கங்காபவானியைச் சடாபாரத்தில் ஒளித்து வைத்திருக்கின்றதை நீ கேட்டிருந்தும் இன்னமேன் சந்தேகப்படுகிறாய் என்னைத் தழுவியணையடி பெண்ணே,

சித்திராங்கதைக்கும் அர்ச்சுனனுக்கும் - வர்ண தரு
இ-ம் கேதாரகௌளம் - ஆதிதாளம்.

மாதவா உனக்கென்ன வேடா - நந்த
வனத்தை விட்டப்புறம் போடா
பாதகா உன் முகம் பார்க்கவும் போகாது
பார்ப்பானுக்கு வழி கூப்பவும் போகாது (மாதவா)

அர்ச்சுனன் சொல் - தரு - இ-ம் - ஷை,

பெண்ணே உன்னை விடு வேனோ - மற்றப்
பெண்ணையு நான் தொடு வேனோ - எந்தன்
கண்ணே உன்னைத் திருக் கலியாணஞ் செய் யாமல்
மண்ணுள நீ பெற்ற மைத்துனனை வை யாமல் (பெண்)

சித்திராங்கதை - சொல்லல்,

கலியாணஞ் செய்யவோ வந் தாய் - இந்தக்
கற்பகக் காவிலிருந் தாய்
அல்லி அரசாணியாரென்று நீ பார்த் தாய்
அறியாயோ சதிவெறியா யிங்கே பார்த் தாய் (மாதவா)

அர்ச்சுனன் சொல்லல்,

அல்லியரசாணி நீயே - பூமி
ஆளவந்தோ பெண் பேயே
வில்லிலுயர்ந்தவன் வீமற்கிளை யவன்
விஜயனல்லவோ நிசமாகச் சொல்ல வோ (அல்லி)

சித்திராங்கதை - சொல்லல்,

விசயனென்றுவிற்குச் செல்லவை யோ - மாய
வேஷங்கொண்டோயால் வெல்லவை யோ - நன்றாய்
இசையப்பிச்சை பெற்றாலும் இரப்பவர்க்கே கொடுக்கும்
திங்கபெங்கும் திரித்திடினும் வசமாய்ப் புஷ்டியெடுக்கும் (வி)

அர்ச்சுனன் - சொல்லல்,

புஷ்டியெடுப்பேனென்றெண் ணாதே - என்னை
முழுதாய்ப் பரியாசம் பண் ணாதே - பார்க்கும்



இஷ்டிக்குப் பிராமணன் திரோகர்தாரதன் சொல்லால்
தீர்த்தமாடவுலகில் யாத்திரையாவந்தேனல் லால் (புஷ்டி)

சித்திராங்கதை - சொல்லல்,

தீர்த்தமாடவந்த பேச்சை உன்றன்
திருட்டுத்தனம் வெளி யாச்சே - சொல்லும்
வார்த்தை நிசமென்றால் மயனுக்கே தடா
வம்புக்காருமுன்னை நம்பக்கூடா தடா (தீர்த்த)

அர்ச்சுனன் - சொல்லல்,

வம்புத்தனமீதல்ல மானே - என்றன்
வார்த்தையதைக் கேளடி தேனே - உன்றன்
குரும்பைக் குறியின் மேல் கூடமிக மோகம்
கூரச்செய்யுதிந்த கேதாரகௌள ராகம் (வம்)

சித்திராங்கதை - அர்ச்சுனனுக்குச் சொல் விருத்தம்,

விடவேணுமென்றுமற்றோர் மெல்லியர் தம்மைக்கையால் *
தொடவேணுமென்றுமெத்தத் துன்றுருபென்ன நீதான் *
கெடுவானென்றொருவருக்குக் கேடுசெய்வானெனப் பார்கள்
படுவானிங்குனைப் பிடித்துப் பயித்யமே தானா செய்வாயே *

வசனம்.

அடடா அறிவுகெட்ட பிராமணா என்னடா உன்னை விடுவேனென்றும் மற்றொரு பெண்ணைத் தொடுவேனென்றும் சரிப்போனமட்டும் பிதற்றுகிறாய் என்னடா கெடுவான் கேடுநினைப்பானென்பதற்குச் சரியாய் நீ தீர்த்தயாத்திரை வந்தவனுக்கு எனிநற்கேடு அடாபடுவாய் உனக்கென்ன பயித்தியம் பிடித்ததோ - ஆ-ஆ ஆ ஆ நன்றாயிருக்குது,

அர்ச்சுனன் சித்திராங்கதைக்குச் சொல் - விருத்தம்,

பயித்தியமீதல்ல மானே பாவிமன்மதனென்றொருவன்மேல் *
உயித்திடிய செய்வதால் ஆவி உருக்கியகாமத்தீயை ... *
சயித்திடிய சாகுசெய்யத் தரணியில் உன்னையல்லால் *
வயித்தியம் வேறில்லை நீயே மருந்தென்னை மருவுவாயே, *

வசனம்.

கேளடி பெண்ணே சித்திராங்கதை எனக்குப் பிடித்தது பயித்தியமல்ல உன்னைக் கண்டவுடனே பிடித்தது காமப்பயித்தியமது இவியிதற்கு உந்தன் குரும்பைக் குறியைச் சேர்த்தணைவதே

யம் சோலைக்கனியிதழ் தேனூறலைக்குடிக்கின்றதே மருந்து இதைவிட வேறே வயித்தியமில்லை என்னைமருவி அணையவாடிபெண் கண்ணே கண்மணியே,

சித்திராங்கதைக்கும்- அர்ச்சுனனுக்கும்-வாது-தரு

இ-ம்-தோடி - அடதாளம்,

வாடிபெண்றென்னை மதியாதழைக்க　　கிருய்
வம்புகள்பேசியுன் வாயென்புழுக்　　கிருய்
சேடியாளுன்றன் சென்மம் ஒழிக　　கிருய்
திருடன்போலேண்டாநீ தெம்பிமுழிக்　　கிருய்
செற்றவனேஉவம் அற்றவனே　　மத
முற்றவனேபேச்சைக் கற்றவனே　　கூ
போடாபோடாபிராமணா வுன்றனுக்கென்ன　　*
போக்காலமோபிராமணா　　*

அர்ச்சுனன்சொல்-தரு-இ-ம் டை

சீச்சிப்போவென்றென்னைச் செப்பினாய்　　முன்றன்
சேடியாலென்னைத்தெரிந்திருந்தும்　　இந்தப்
பூச்சிக்குநானோடிப் போவமாட்டேன்　　சொந்தப்
புருஷனாகியுன்னைப் புணரவும்நான்　　வந்தேன்
பூவினிலற்புத வாவிருந்　　கற்பகக்
காவிலிருவோருங் கூடிமேவியதோடியைப்　　பாடி
வாரும்வாரும்அன்னமே மருவிமையல்　　*
தீரும்தீரும் சொர்ணமே　　*

சித்திராங்கதை புலம்பல்-தரு இ-ம்-ஆனந்தபைரவி - அடதாளம்.

புருஷன்வேண்டாமென்று பெண்ணரசாட்சிசெய்து
பூரிப்பாயிருந்தேனே　　தெய்வமே-ஒரு

பூரான்இவனோ புணருவோம்வாடிபெண்ணு
பூங்காவிலழைக்கிறான்　　தெய்வமே

ஒருட்சணப்போதிவன் உயிரைக்கொல்லாமற்கம்மா
ஓட்டிவிட்டேனேயானும்　　தெய்வமே இது

உள்ளப்படியிவட்குகள்ளப்புருஷனென்றில்
லச்செங்கும்பழியாதோ　　தெய்வமே

செங்கோலுந்தண்டுமையும் இங்கேபெலக்கெத்தானும்
செல்லுமென்றிருந்தேனே　　தெய்வமே-இந்த



சகலமன்னரெல்லா நகைக்கவுடம்பெடுக்கத்
தீவினையென்செய்தேனோ　　தெய்வமே

மங்களமாகத்தாதிப் பெண்களுடனேமன
மகிழ்ச்சியாயிருந்தேனே　　தெய்வமே

மதுரைமீனாட்சித்தாயே சதிசெய்யலாமோநீயே
வந்தெனைக்காக்கவேணும்　　தெய்வமே

மாநிலமெங்கும்புகழ் ஆனந்தபைரவி
ராகமருளவேணும்　　தெய்வமே

அர்ச்சுனன்சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

மதுரைமீனாட்சியம்மன் மகேசரர்பிரிந்தாரென்றே ... *
கதிதருதவஞ்செய்தந்தக் கடவுள்தன்னிடப்பாகத்தில் *
சதிருடன்கலந்துவாழும் சங்கதிகேட்டிருந்தும் ... *
எதிர்மறைபேசவேண்டாம் இருவரும்அணைவம்வாடி *

வசனம்.

கேளடிபெண்ணே சித்திராங்கதை இந்த மதுரைமீனாட்சியம்மனாகிய மகேஸ்வரிக்குத் தகப்பனென்று சொல்லப்பட்டதக்கன் ஆகங்கொண்டுசெய்த மகாவேள்வியில் அவன்றலைபாட்டுத் தக்கியானபடியினாலே அப்பேர்ப்பட்டவன் மகள்நமக்காகாதென்று சுவாமிதன்னிடப்பாகத்திலேயிருக்கின்ற நல்பரியைப்பிரித்தபோது அம்மனானவள் இமோர்க்கிரிபர்வதராசன்வயிற்றிற்பிறந்து பார்வதியென்னும் பேர்பெற்றுபரமேஸ்வரனைநோக்கி அநேககாலந் தவஞ்செய்து பிறகு சுவாமியிடப்பாகத்தில் எப்பொழுதும்போலே ஏகத்திரமாய்க் கூடிக்கலந்திருக்கிறதும் அறிந்திருந்துமெதிர்மொழி பேசவேண்டாம் நாம் இருவரும் கூடியணைவோம்வாடிபெண்ணே.

சித்திராங்கதைக்கும்-அர்ச்சுனனுக்கும்வாது தரு

இ-ம்-தோடி-அடதாளம்

எதிர்மொழிபேசா திருக்கவுன்றன்　　குயம்
வல்லாத்தெரிந்ததே பொல்லாதபிரா　　மணா
பதரேயுன்னைப்போலே பட்டுவிழுப்　　பிணம்
பாரினிற்சொல்லவும் ஆருமில்லபோடே　　ணட்
பாதகனேபம வாதகனே　　துஷ்ட
சாதகனெகெட்ட மாதவனே　　சேசி

போடாபோடாபிராமணா உனக்கென்ன *
போங்காலமோபிராமணா *

அர்ச்சுனன்சொல்-தரு-இ-ம்-ஷை

சித்திராங்கதையெனும்பேர் சொன்னாயோ · உரும்
செப்புமொழியென்றும் தப்பல்லவே பாரும்
க்ஷத்திரியகுலத்தினிற் றனஞ்செயனென் பேரும்
சங்கையென்னடியுனக் கிங்கே மாம்
காட்டிவைப்பேன்மாலை சூட்டிவைப்பேன் கோலம்
காட்டிவைப்பேன்கிலப் பூட்டிவைப்பேன் இனி
வாரும்வாரும்அன்னமே விலைசெய்து *
பாரும்பாருஞ்சொர்ணமே *

சித்திராங்கதைபுலம்பல்-தரு-இ-ம் முகாரி-ஆதிதாளம்

அரிகரிகோவிந்தா முரா அரிலவகுந்தா
அச்சுதானந்தமுகுந்தா ரகுநாதா-சொல்லும்

ஆதிமூலமேயுன்றன் பாதமலர்நம்பினேன்
ஆபத்தைக்காருமையா ரகுநாதா

திருமகளுறைமார்பா மருவளர்பத்மநாபா
ஜெகம்புகழும்பிரதாபா, ரகுநாதா

தேவதேவமகானுபாவ தேவகிநந்த .
செயாமாயா சகாய ரகுநாதா-மணி

வல்லவாசமலர்க்கண்ணா கேசவகிருஷ்ணா .
மச்சக்கூர்மாவதாரா ரகுநாதா

ஸ்ரீதராதாமோதராசொல் லாதரவுன்பாதமல்லாமல்
சகத்திலெனக்கார் ஐயா ரகுநாதா-வெகு

சென்மவிகாரமோகம் வன்மங்கள்தீர்வாகம் .
செய்யுமுகாரிராகம் ரகுநாதா

அர்ச்சுனன் - சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

இரகுநாதவம்மிசத்த நந்தகோபாலன்வீட்டில் ...... *
பரகுமிகார்த்திருள்ள மாதுளமருவிக்கூடி ... *
பெருமைச்சம்படிநீருப்பால்மோர் வெண்ணெயுந்திருடியுண்டு
செகமீதினிச்சாக்கெசய்த சேதிநீயறிவாயோ ... *



வசனம்.

கேளடிபெண்ணே இரகுநாதசுவாமியை மிகவும் நம்பிக்கூ
க்கொசெய்கிறாய் என்னடி அவர்தானே ராதாருக்குமணி - சத்தியபா
மாமுதலாகிய அஷ்டபட்டஸ்ரீகள் இருக்க அதுவுமல்லாமல்நம்மா
ர்பில் எந்நாளும்பிரியாமல் மகாலட்சுமியிருக்க அறியாதாமல்
அனந்தகோபாலனென்றும் சொல்லப்பட்ட இடையர்வீட்டில்
பிள்ளையாய்ப்பிறந்து பால் மோர்-தயிர் வெண்ணெய் முதலாகி
யதும் திருடித்தின்பதுமல்லாமல் பதினாயிரங்கோடஸ்ரீகளை வகை
மோசஞ்செய்து மருவியனைத்தும் இன்னம் பூலோகத்திலே அவ
ர்செய்தபடவஞ்சனைகள் உனக்குத்தெரியாதா அப்பேர்ப்பட்ட
வரை நம்பியழுகிறாய் என்னடி நான்பிச்சையெடுக்கிறபிராமணன்
அல்ல என்னைமருவிஅணையவாடிபெண்ணே மைதிராண்டகண்ணே

சித்திராங்கதைக்கும் - அர்ச்சுனனுக்கும்-வாது-தரு

இ-ம்-தோடி- அடதாளம்,

பிச்சையெடுப்பாய் பிணத்தையுந்தின்னு வாய்
பெருகுசமுத்திரத்தைப் பேய்போலேயுண்ணு வாய்
நட்சத்திரங்களை நன்றாகஎண்ணு வாய்
நமனையுங்கூட்டிப்பலகாரம்பண்ணு வாய்
நம்புவேனோசொல்லியம்புவேனோ மெத்த
வம்பனல்லால்சத்திய சம்பன்னனோ இச்சி
போடாபோடாபிராமணா உனக்கென்ன *
போங்காலமோபிராமணா *

அர்ச்சுனன்-சொல்லல்,

மருந்துமரியாதையையாமறந்திட்டு ரூய்
மாதரேசொல்மழையெனக்கொட்டு ரூய்
குரங்குபோலென்றனைக் கூத்தாட்டமாட்டு ரூய்
கொல்லுவேனென்றுநீ சொல்லிமிரட்டு ரூய்
கொம்பன்னையேசத்திய சம்பன்னியே சந்திர
பிம்பவதனியே நம்பினேன் உன்னையே
வாரும்வாரும்அன்னமே மருவியென் *
மையல்தீருஞ் சொர்ணமே *

சித்திராங்கதைசொல்-தரு-இ-ம் ஆனந்தபைரவி ஆதிதாளம்.

வேதியனென்னவிரதம் பாதியிற்போகத்தலையில்
விதித்ததிதிதானோ பிரம்மதேவா-நல்ல

வெற்றியுமெனது செங்கோல் சத்தியமும் இவ்வுலகில்
விளையப்போகுமையோ பிரம்மதேவா
ஆதியிலென தந்தை ஓதியவாசகமும்பொய்
ஆச்சதென்செய்வேனய்யா பிரம்மதேவா-சொல்லும்
அன்னவாகனவென்னுகம் நன்னயமிகும்விவேகம்
ஆனந்தபயிரவிராகம் பிரம்மதேவா

அர்ச்சனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

சதுமுகப்பிரமாவுந்தான் சரஸ்வதிதேவியைப்பிரிந்து ... ※
தானிருந்திடத்த ... ... ... ※
மதிமுகமார்திலோத்தமையை மகளென்றுபாராமல் ※
மையல்கொண்ட ... ... ... ※
புதுமைகள்நீயறிந்திருந்தும்புத்தியில்லாப்பேதையைப்போல்
புலம்புகின்றாய் ... ... ... ※
விதிதேசமெல்லாம்படைத்த விதிதனையுந்தூறாதும் ※
விடுமோபெண்ணே ... ... ... ※

வசனம்.

கேளடிபெண்ணேசித்திராங்கதை என்னடி நீயின்னம்பிரம
தேவனைநினைத்து அழுகிறாய் அந்தபிரமதேவன்தானே தன்னாவில்
என்றென்றும் பிரியாமலிருக்கின்ற சரஸ்வதிதேவியைப்பிரிந்து தே
வேந்திரன்சொற்படிக் கொருகாரணமாய்த்திலோத்தமை யென்
றொருபெண்ணைச்சிருஷ்டித்துத் தன்மகளென்றும்பாராமல் அவ
ள்பேரில் ஆசைமையல்கொண்டு என்னைமருவி யணையச்சொல்லி
அநேகநாள் வாதுசெய்த கதையை நீ கேட்டிருந்தும் இன்னம்
என் அந்தபிரமதேவனைநொந்தழுகிறாய் விதிப்பயனுகப்பட்டது
இந்தஈரேழுபதினாலு புவனத்தையும் அதிலுண்டாகிய எண்பத்து
நான்குலட்சஞ் சீவராசிகளையுஞ் சிருஷ்டிக்கும் பிரம்மதேவனைக்
கூட காமவிகாரம் விடமாட்டாது சும்மா என்னைமருவியணையவா
டி பெண்ணே என்மையல்தீரடி என்கண்ணே என்கண்மணியே,

சித்திராங்கதைக்கும்-அர்ச்சனனுக்கும்-வாது-தரு

இம் தோடி- அடதாளம்.

வார்த்தைக்கனேகம் வகைசொல்கிறாய் சரி
மன்மதனும்அல்லாதே மாட்டிற்கிடே மடி
பார்த்திபனென்றுன்னைப் பகரலாமோ சோறி
பார்ப்பானுக்கேனித்தப் பாரிஷமும் பாவி



பட்டவனே-வீடு விட்டவனே கேடி
கெட்டவனே-காடு கட்டவனே சீச்சீ (போ)

அர்ச்சனன் சொல்லல்,

ஒன்றிற்சிரண்டாய் உதாசினம்பேச ஞாய்
ஓ ஓ ஓ என்ன ஒருக்கலேவசி ஞாய்
என்னைப்பாராமல்நீ ஏதேதோபேச ஞாய்
எரிநெருப்பில்நெய் இட்டாற்போற்காச்ச ஞாய்
எப்படியுமுன்றன்-சொற்படியுன் மனை
தொட்டிடச்செய்துன்றன் கைப்பிடிப்பேன் இனி (வாரு)

சித்திராங்கதை-புலம்பல்-தரு இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

காசிதேசப்பிரமணைசன்னி யாசிவேஷங்கொண்டிருந்து
காவினில்வரச்செய்தாயோ தெய்வமே-என்றன்
தப்புக்கநீபேசி தப்பசெய்தாயிதென்ன
காரணமோ ஐயோபாவி தெய்வமே
வேசியைப்போலென்னையிவன் பேசியவார்த்தைக்குன்மனம்
மிகமகிழ்ந்திருந்தாயோ தெய்வமே-இந்த
மேதினியிற்பெண்கள்காம் போதியைப்பாடிநகைக்க
விதித்தாயோ ஐயோபாவி தெய்வமே

அர்ச்சனன் சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

தெய்வமேல்செய்யும்பெண்ணே தேசத்திலில்லாவாழ்க்கை
கையிலிற்செங்கோலேற்றி கணவனில்லாமலின்றாய் ... ※
வையகத்தன்னையாள மணிமுடிதரித்துக்கொண்டாய் ... ※
தையலேயிதுவுனக்குத் தகுமோசொல்லடிபெண்கண்ணே

வசனம்,

கேளடிபெண்ணேசித்திராங்கதை என்னடி இன்னம் தெய்
வம் தெய்வமென்று தெய்வத்தைநொந்தழுகிறாய் ஆதியில் நீயொ
ருத்திராகுமாரனை விவாகம்பண்ணுகிறதை அந்தத்தெய்வம் வேண்
டாமென்றுசொல்லிற்றோதான் ஆகிலும் பெண்ணாய்ப்பிறந்த
வள்புருஷனில்லாமல் பூலோகம் ஆளத்தகுமா சொல்லடிபெண்
ணே என்விரகதாபத்தை வெல்லடி கண்ணே,

சித்திராங்கதைக்கும்-அர்ச்சனனுக்கும்-வாது-தரு

இ-ம் புன்னாகவராளி- அடதாளம்

போ+சீசீ
பிராமணனென்னவாம்
பிலத்தாதேநீநந்தவனத்தைவிட்டப்புறம் போ (பிரா)

காமமென்னும்இட — ரோக-அந்தக்
காமமெனத்தொட — ராக-நானே
கர்ப்பழிபாமட — மாக-என்றன்
கனவிலும்இதமட — வாக-நல்ல
பூமலர்கொண்டெங்கள் சொக்கநாதர் — கிஷ்ட
பூசைசெய்யுமுன்மேல் ஆசைகொண்ட — துஷ்ட (ராம)

அர்ச்சுனன்சொல்-தரு-௬

ஆசைகொண்டேனடி — மாதே உன்றன்
அம்பொன்முகச்சந்திர பிம்பங்கண்ட — போதே-ஆசை
ஈசனைக்கண்டவள் — நானே-என்றாய்
எனமுன்அவனைமுந் — தானே-ஆகில்
இருவருங்காணுமெய் — கோனே-நீ
எப்படிகண்டாய்வா — மானே-நல்ல
வாசமிகுந்தமலர்வனந்தன் — னிலே
வந்தவளேமோகந் தந்தவளேஉன் — மேல் (ஆசை)

சித்திராங்கதை-சொல்லல்,

ஆசைகொண்டீரிலேன்கொண் — டாய்-உன்றன்
ஆண்மையறிப்பெறுங்கண் — டாய்-என்ன
யாளவோவந்தாய்நீபெண் — டாய்-வாளால்
அறப்பெறுவென்றுதண்டிரண் — டாய்-இன்னம்
வேசியைத்தப்பேர் பேசிப்படுப்பார் — கள்
வீட்டிற்குப்போய்ப்பெண்ணை கூட்டிக்கொடுப்பார்கள் (ஆ

அர்ச்சுனன்-சொல்லல்

வேசியர்வீட்டிற் — யேனே-வேறொர்
மெல்லியலைநாடி — யேனே-உன்னை
விட்டுப்பிரிவேனோ — நானே-ஆசை
வெட்கமறியுமோ — மானே-பணம்
காசமில்லையென்றன் கையின்மையறுத் — தேத்த
கட்டழகிசொந்த பொட்டழகி — மெத்த (ஆசை)

சித்திராங்கதை-சொல்லல்,

பணமேதென்றெனக்கென்றுசொல் — கிறாய்-என்னைப்
பார்த்துப்பார்த்துவாயைமெல் — கிறாய்-இந்த
பாரின்மேலையுஞ் செல் — கிறாய்-படு
பாவிபெண்டாளயால் வெந் — கிறாய் சேத்துப்



பிணமேயுன்றனுக்கென்றும் ராமலையசாதி — யில்
பெண்ணில்லாமற்சொந்த மன்னனில்லாமல்வந்த (பண)

அர்ச்சுனன்-சொல்லல்

பெண்ணுமன்னையல்லாமல் வே — றில்லை-உன்னைப்
பிரியவென்றால்என்மனம் — வல்லை-அடி
பேதையேயென்றன் — சொல்லை-இந்த
பேருலகிலெங்கள் — எல்லை-சொந்த
மன்னவித்திராபுரி வாசவன்மைந்த — னும்
மைத்துனன்மாலென்பார் அர்ச்சுனனென்றன்பேர் (ஆசை)

சித்திராங்கதை-சொல்லல்

அர்ச்சுனராசனில் — வேஷம் கொண்டு
யாத்திரைவந்தாஇப்பெண் — தோஷம்-இந்த
ஆண்பிள்ளைக்கேனில்லை — ரோஷம்-தந்திரம
அறிந்தால்வரும்மெத்த — நிமோஷம்
அற்சனமாமனா — இருப்பதோ
ஆனைச்செல்லெறியாதா வீணிற்சொற்செரியாதா (ராம)

அர்ச்சுனன்-சொல்லல்

சிறுநாயன்றுசொல் — லாதே உன்றன்
சித்தமுபாயம்செல் — லாதே-என்றன்
விரகத்தின்மாயம்பொல் — லாதே-உன்னை
விட்டாலெங்காயம்நில் — லாதே-அடி
நாருமேலிருவரும் நந்தவனத்தில் — நல்ல
நாணிப்புன்னகை நாளிற்நாகத் — சொல்ல (ஆசை)

சித்திராங்கதை - விசனப்படுகிற தரு-இ-ம்-கௌரி-ஆதிதாளம்,

கற்பகப்பூங்காவனத்தில் எப்படியிவ்வேசமிதை
காலமிருக்கச்சொன்னீரோ — தந்தையே-நல்ல
காசிவேதியன்போல்மாய வேஷங்கொண்டுவாச்சொல்லிக்
கட்டலையிட்டிருந்தீரோ — தந்தையே
சொற்படிகேளாதபெண்ணென் றிப்படியென்னைக்கொண்டுசி
சோபனஞ்செய்யச்சொன்னீரோ — தந்தையே-பொல்லாத
துறவொப்பமேனக்கும் வாருசெய்தேகித்திரிவாகம்
சொல்லிருக்கிலாகிராகம் — தந்தையே

அர்ச்சுனன் சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்,

தந்தையெண்செய்வார்இந்தக் காளியைப்பார்த்தவேலையென்னா
சித்திரவிலென்னிச்சேட்டை [illegible]

விந்தையிதெல்லாஞ்சும்மா வீணல்லோமோருக்குப்போய் ... *
மொந்தையையொளிக்கவேண்டாமோசத்தைத்தீராய்பெண்ணே

வசனம்.

கேளடிபெண்ணே சித்திராங்கதை இஃதல்லோ உன்றந்தையைநினைந்தழுகி ஒழுகிப்போகிறாய் அன்று உன்றந்தையாகிய பாண்டியமகாராஜன் உன்னை ஒருஇராஜகுமாரனுக்குவிவாகம்பண்ணிவைத்து உன்வயிற்றிற்பிறந்தபிள்ளையைப் புத்திர சிகாரம்பெற்று இளவரசுபட்டங் கட்டிவைக்கிறேனென்று அநேக விதந்திநுத்துசொன்னவார்த்தையைத்தள்ளிப்போட்டு நானே யித்தமதுரைப் பட்டணம் அரசாளுவேனென்று சிறுபிள்ளைவிளையாட்டாய் மருடாபிலேதீதத்தரித்துக்கொண்டுவிட்டாய்மோருக்குப்போய்மொந்தையையொளிக்கவேண்டாம் ஏஃமோசத்தைத்தீராடிபெண்ணே

சித்திராங்கதைசொல்-கந்தார்த்தம்-இ-ட்-மோசனம்.

மோகேந்திரன்மொழியும் நின்வாய்களைகிழிக்க ... ... *
நிரேசுந்தனைச்சில்லாயின்னைக்கனாய்க்கிழிக்க ... ... *
காகம்போய்பெருங்கழுகுடல்நாய்நரியிழுக்க ... ... *
வேகாமயுன்னைவெளியிற்கொடுபோய்தலைகளை ... ... *
வெட்டிப்பலியிடச்சொல்ல இனியெனக்கொ *
ரட்டியில்லையுனைக்கொல்ல ... ... ... *
மட்டியித்தனைநாளாய்வாழ்ந்திருந்ததிலையை - *
விட்டிவ்விடத்தில்வந்திவ்வேதியாவுன்றந்தலையை (வெட்)

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்-மோசனம்.

தலையைவெட்டவுன்றாமல்லவேளடிமானே ... ... ... *
நிலையைக்கூறவனின்வில்த்தரசனின்றானே ... ... *
மலைக்கை அர்ச்சுனன்தீர்த்தயாத்திரைக்குவந்து ... ... *
கொலைசெய்வானிருவெல்லினைசொல்லுவேனென்றுயடி ... *
கொன்றுலென்றுயிர்ச்சாகுமோ-அப்படிஅல்ல ... *
வென்றுனுக்குலையாகுமோ ... ... ... *
குன்றைப்பார்த்தறாப்புலைக்கிறுப்போல்நீட்டி ... *
நன்றுப்சொன்றுப்த்தலையைநாயக்கேளாமல்வெட்டி - ()

சித்திராங்கதைசொல்-கந்தார்த்தம்.

ஞாயமென்னடாவுனைச்சந்தையெல்லாந்தெரிநடத்ததை ... *
யாயவேலிமோர்மறையவனுமியிவ்விடத்தில் ... ... *



நீயவஞ்சனைசெய்ய வந்தென்மனதிடத்தை ... ... *
நீயறிந்திடநினைந்தத்திறனுன்றன் ... ... ... *
நெஞ்சந்திறக்கவடிப்பேன்-சாற்றிவில்லம் ... - *
பஞ்சாய்ப்பறக்கவடிப்பேன் ... ... *
மிஞ்சிப்பேசும்உன்றுக்கைவிழஅறுப்பதுமல்லாமல் *
நஞ்சுநஞ்சாயுன்றலைநறுக்கிப்பிழிபக்கல்லால் ... (நெஞ்ச)

அர்ச்சுனன்-சொல்லல்.

தழுக்கிநீயெனைப்பிடிந்தாஇந்தாணுன்மேற்கொண்ட ... *
வெறிக்குஇன்னமிவ்வுலகினில்மருந்துவேறுண்டோ ... *
முறுக்கிப்பிடித்திருப்பிமோடிசெய்கின்ற ... *
சிறுக்கியுன்னிடசேவகத்திறமையையறிவேனென்னைச் ... *
சோரதிருப்பதென்னடி-திருப்பிமுகம் ... ... *
பாராதிருப்பதென்னடி ... ... ... *
பேராற்றமறுசொந்தப் பிள்ளைக்குப்பட்டங்கட்ட -*
பாராய்மோசனாகம் பாடியனையக்கிட்டச் ... ...(சோர)

சித்திராங்கதை - அர்ச்சுனனுக்குச்சொல் விருத்தம்,

திரும்பியுன்முகத்தைப்பார்த்துச் சேர்ந்தணைந்திடுவேனென்று
விரும்பிவந்தெதிரேநின்ற வேதியாவுனைக்கிப்போது ... ... *
வருங்கதியபிந்திடாமல் வாயினுல்வதறவேண்டாம் ... ... *
அரும்பேயுன்றலையைவெட்டித் தூக்கிடச்சொல்லுவேனே-

வசனம்,

கேளாய் அறிவுகெட்டபிராமணுநானுன்முகத்தைப்பார்த்து அப்பேசி உன்னைமருவி யணைவேனென்று ஆசைகொண்டிருப்பதாய் இன்னம் ஆசைப்படுகிறேவே வருங்கதியைத்தெரியாமல் மதியபடித்து வெட்டுப்படவேண்டாம் ஏனதாறிகளைவிட்டு உன்றலையைவெட்டிக்கட்டித்தூக்கிப்போடச்சொல்கிறேன்பாரடா.

அர்ச்சுனன் சித்திராங்கதைக்குச்சொல் விருத்தம்,

வெட்டியென்றலையைத்தூக்கி விடச்சொல்வேனென்றுயினாய் *
அட்டியென்னடியதற்கும் அருகினிலிருக்கமாட்டேன் ... ... *
செட்டிக்காரியன்றானென்றுங் கேள்வியுண்டெனக்குமானே- *
வெட்டிக்கொண்டனைந்துபொல்லாக் காதலைத்தீராய்பெண்ணே *

வசனம்,

கேளடிபெண்ணே சித்திராங்கதைஎன்றலையைவெட்டிக்கட்டித்தூக்கிப்போடச்சொல்லுகிறாய் இன்னம் பொட்டசி

பிரட்டுபிரட்டுகிறாய் அதற்கென்னடிநாமபுரம் உன்னண்டையிலி ருக்கிற நாழிப்பெண்கள் உன்னைப்பார்க்கிறாய் பெட்டிக்காரியென ன்று எனக்குக்கேள்வியுண்டு நல்லதப்படியே ஆகட்டும் உனைக்கட் டிபனைத்து நான்கொண்டாதவீதிரிப்பாயடி பெண்ணே.

சித்திராங்கதை-தோழிக்குச்சொல்-விருத்தம்.

அறிசெய்தென்னருகில்நிற்க தோழியர்கேளிர்மன்றல் ... ...*
விரிசெய்புஷ்பவாருழுந்து விதவைபோலத்தனைப்போலவந்த ...*
சுறிசெய்நாவலையவெட்டித் துயிந்துக்கச்சொல்லவேனென்ன .*
அரிசயத்தன்னைக்கட்டி பண்ணிடச்சொல்லுவம்மா ... *

வசனம்.

கேளும்சுமித்திரியானபெண்ணாளே என்றவிதியோ அல்லது நான்முன்செய்தவினையோ என்னுடைய பதிவிரதத்தையழிக்கவாரிப்பிராமணன்போல் மாயவேஷங்கொண்டுவந்தென்னைச் சதிசெய்ததினத்துவாரடிபெண்ணும் போடிபெண்ணும் என்புருத்தத்தைப்பேசிவலை பிரட்டி அப்புறத்தைப்போட்டுவிட்டு நிதிநியம் தலையைவெட்டித்தூக்கிப்போடுவேனென்று நான்சொன்ன சுருக்குதன்னைத்தருவிப்பதைச்சொன்ன அதிசயத்தைக் கேட்டீர்களா.

தாதி-நாயகிக்குச்சொல்-வெண்பா ராகம்-சங்கராபரணம்.

பத்தினிதேவிகண்டாமைப்பாவில பூத்தாமெபோவெள்ளையும்...*
இத்தனைப்பொத்த வெளிபெயச்சொல் - வித்தைமுதலே *
சித்திரைநிலபத்தாய் வத்திரைமேயின்னமெய்ன ... ...*
குத்தரபிராமணன்தன் சொல் .......................... ... ...*

வசனம்.

கேளும்இராஜபரமேஸ்வரி நல்லதர்ச்சனியமிது சாப்பிட்டுபத்தினியே உட்காரவேண்டாமென்று சுழுத்தைமடக்கியப்புறத்தே தள்ளிக்கேட்டுப்பொத்தம் இவ்விபாதர் சொல்லி வேண்டித்தகொண்டுவாவென்று சாமர்த்தியமாய் தலையைவெட்டித்தூக்கிப்போடச்சொல்லுகிறது நன்றேநருபி பண்ணுமென்றுசொன்னபிராமணனுடையசாமர்த்தியமே சாமர்த்தியம் இன்னமே யாரோடுருபடைப்போருது அதிபவேணுமம்மா.

இரண்டாவது-தோழிசொல்-வெண்பா ராகம்-சங்கராபரணம்.

குறிசெய்தென்னைசெய்தங்கதையென்ன சத்தியமாய்க்கொண்டு ... ...*
மாதரோதுநாவிகள் மறித்தின்றோம் பாதகனை ... ...*



மெய்யிலேநீயிடுத்து மேனிபெண்கள்கைவெட்டுதலாய் ...*
கோலமிகேராமபார் தலையைக் கொய்து... ... ........*

வசனம்.

கேளும்இராஜபரமேஸ்வரி இவளுக்கு நாதன்மைச்செய்யவேண்டியதென்ன நாங்களிவளுக்குஇவளைச்சத்தியமாக்கொண்டுபோய் நிமென்னாடித்துரைகளெல்லாருக்கும் செய்யப்போறோம் ஒருவனைப்போதில் இவளைச்சிரச்சேதம் செய்யப்போகிறோம் எங்கள் நிரவனியைப்பாரும் அம்மா நாயே

அர்ச்சனன்-சித்திராங்கதைக்குச்சொல்-வெண்பா.

சொக்கின்றமயிலில்வெண்ணெய்க்கொண்டுபோய்நாங்கள்பெண்ணை,
வைக்கிறோம்நீயிடுத்தவாலென்ன - பக்குவஞ்சொல் ... ...*
மாதின் நீயும்நல்ல சாமர்த்தியமென்றுசொன்ன ... *
தேசிகரும்போகவே தெரிந்து........................................*

வசனம்.

கேளும்பெண்ணே சித்திராங்கதை சொக்கின்றமயிலில்கொண்டுபோய் தாராய் பேசலாம் அந்தவெண்ணெய்யுருகி அதன்கண்ணில்விழுந்ததட்சணம் பிடித்துக்கொள்ளலாமென்று கொக்குப்பிடிக்கிறமந்திரஞ்சொல்லுகிறாய் அதற்குச்சரியாய் உன்னுடைய சொன்னசாமர்த்தியமும் உன்னுடையசாமர்த்தியம் நிரோடு ட்டவெளியாய் எல்லாந்தெரிந்தபோச்சு இனிமேலாகிலும் என் னைச்சேர்ந்துசுகியடிபெண்ணே.

சித்திராங்கதைக்குப் பார்த்தனானகுரும்-வசனம் நரு ராகம்-சங்கராபரணம்-அடதாளம்.

எல்லாந்தெரிந்ததென் றால்லாமையிமெத்த
இதற்கிமேயேப்போருள் — உன்கபோ-ப்பரம்
இகழ்ச்சியாலோசாக் — பெண்கவே-இதனால்
சொல்லாமலிருப்பது பொல்லாதகாரியம்
குடிகெட்டுப்போகுமே — நாயவோ

அர்ச்சனன்சொல்லல். நரு-ராகம்-மு

குடிகெட்டுப்போருமெய்நடிக்கவேசொல்கிறாய்
கோதையரடிப்பதும் — நாருமோ-செப்பு
மாதேவெல்லாயிரம் — சாருமோ
அடிக்கிறேனெனக்கவி நெருடிக்காதேநான்கொல்ல
ஜெயமாயிந்திரபிரா — கன்னே

சித்திராங்கதை-சொல்லல்,

மையலிற்றீர்க்கவே தையலர்கள்காசி
வாங்கிக்கொண்டுவருவார் போடா-என்றன்
பாங்கியர்களுக்குநீ பீடா அவர்கள்
கையினிலகப்பட்டு ஐயையோவுனக்குப்போங்
காலம்வந்ததடா பிராமணா

அர்ச்சுனன் சொல்லல்,

போங்காலம்வந்ததென் றாங்காரத்தால்மனம்
பொங்கிநீயேசுழி யாதே போடி
தங்கிவாயாலழி யாதே-நின்னும்
மாங்காய்ப்புளித்ததோவாய்ப்புளித்ததோவென்னும்
வார்த்தைபடிக்கடி பெண்ணே

சித்திராங்கதை- சொல்லல்,

வார்த்தைகளின்னம்வளர்த்திபுன்னையுயித்த
வாருக்கினாகெடுப் பேனே-தலை
மூளைச்சிதறஅடிப் பேனே நீர்த்த
யாத்திரைவந்தாலிம் மாத்திரத்தோடின்றனை
யனுப்புகிறேன் ஓடிப்போ வேதியா

அர்ச்சுனன்- சொல்லல்,

வேதியனல்ல சாதியிற்குருகுல
வேந்தனின்றந்தைக்கிப் போது-கிட்ட
சேர்ந்தவுறவிதுதப் பாது-உள்ள
சேதியையுன்னுடன் செப்பினேனென்றனைச்
சேர்த்தணைந்திடுவாயென் கண்ணே

சித்திராங்கதை-சொல்லல்

சேர்ந்தணைந்திடநல்ல வேந்தர்க்குலமென்றும்
செப்பினவார்த்தைகள் மெய்யோ-என்றன்
கற்பழியாதோ ஐயையோ-புகழ்
சார்ந்தகுருகுல வேந்தர்களின்பெயர்
தானென்னமோசொல்லும் பார்ப்போம்

அர்ச்சுனன்-சொல்லல்.

பார்ப்பதென்னபரி பாசகமோர்பஞ்ச
பாண்டவர்தனில்சொல்லு மென்பேர் - புகழ்
நீண்டவில்அர்ச்சுன னென்பேர்-மோசம்



பார்ப்பதும்அன்பனைக் காப்பதும்சங்கரா
பரணாகமென்றன் கண்ணே

சித்திராங்கதை அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்,

விசையனென் றுரைத்தாய்மாய வேஷங்கொண்டெவனேயிந்த *
திசையெங்குந்திரிந்து புண்ய தீர்த்தங்கள்ஆடவந்தாய் .. ...*
நிசமல்லவுன்றன் வார்த்தை நிகரிலா அர்ச்சுனன்றன் ... ... ...*
இசைபுஜபலமும்சீரும் எழிலும்நீயியம்புவாயே ... ... ...*

வசனம்.

வாராய்பிராமணசந்நியாசி நல்லகுருகுலவங்கிஷ சிகாமணி யாகிய அர்ச்சுனமகாராஜனென்று சொல்லுகிறாய் நல்லது நீயந்த அர்ச்சுனமகாராஜனென்பது மெய்யானால் பிராமணசந்நியாசிவேஷங்கொண்டுதீர்த்தயாத்திரைக்குவந்தகாரணமென்ன இப்போது உன்வார்த்தையைநிசமென்று நம்பமாட்டேன் ஆகிலும் அந்த அர்ச்சுனமகாராஜன்அழகையும்கீர்த்திப்பிரதாபத்தையும் அவர்குணநிசயத்தையும்சொல்லும்பார்ப்போம்.

அர்ச்சுனன்-தன்வரலாறு-சித்திராங்கதைக்குச்சொல்-தரு.

இராகம்-சாவேரி- ஆதிதாளம்.

கேளும்பெண்ணேசித்திராங் கதையே-மதுரை
யாளும்பாண்டியன்பெற்ற கதையே
நாளும்உலகைவெல்ல நறுமலர்க்கணை வெல்ல
வேளுநீ இங்கிணையல்லவிசையனழகைச்சொல்ல (கேளும்)

வாரணபுரிஇந்திரப்பிரஸ்தமே பிரஸ்தம்
மைவந்தி அஸ்தினாபுரி க்ஷேத்திரம் நல்ல
வளமிருந்த அளகேசன்றனையும் வென்றுஞ்
வழங்கும்பொருளருள்சத் பாத்திரன்-கலை
பூரணச்சந்திரனேநேரொன எவராலும்
புகரொளுத்திருமுக குலஸ்திரன்-விற்
புருவமும்பிறைநுதலுருவமு மிலகிய
புண்டரீகமலர் நேத்திரன்-கலை
ஆரணமுறைக்கல்வி அறிந்தனைக்கும்நல்லேனயன்
அபயமென்றடைந்தவர் அனைவர்க்குஞ்சகாயன்
நாரணன்மலர்ப்பாதம்நம்புநினைவு பாயன்
நாவில்நட்சத்திரம் மேவுஞ்செங்கனி வாயன்
நவமணியாரவி நேசதன்-செய்யும்
நவமுமயிலுமியப்பிர சாதன்-எழில்

நலமதற்கிணையிந்த நலமதி யெனவரும்
  புலவர்கள் துதிசெய்யும் பலவித அதிசயம் (கேளும்)

குருமாபிணிற்றோன்றிவரும் அரசரென்றெங்கும்
  கொண்டாடும்பாண்டு குமாரன்-சொல்லும்
குந்தமாதேவிதன் மைந்தர்க ளாவரில்
  கூறும்அழகிய செம்பிரன்-உயர்
தருமராசனுக்கும்வீமசேன னுக்கும்
  தம்பிகுணசம்பிரம நிரன் இன்னம்
சகாதேவனுக்கும்நகுலனென்பவ னுக்கும்
  தமயனர்ச்சுனனென்னும் பேரன்-செந்
திருமருமார்பன் மைத்துனன்நல்லஅனுகூலன்
  தேவேந்திரமகாராசன் சிந்தித்தருளும்பாலன்
அருமறைமுனிவர்கள் ஆசீர்பெறும்விசாலன்
  ஆதிசிவன்றனையும் அன்பாய்பூசைசெய்சீலன்
அழகியமன்மத ரூபன்-ருசி
  பழகியஇன்சொற்பிர தாபன்-நல்ல
அற்புதவிற்பனசற்புரு ஷோத்த
  பொற்புதமையிதெனும் நற்புதமையினம் (கேளும்)

போருக்குமுலகினில் யாருக்கும்அடங்காத
  புஜபலத்தின்மிகுந்த காளை-செய்த
புண்ணியவசத்தால்நின்கண்ணிற்காணக்கிடைத்தான்
  போகவொட்டாய் இந்த ஆளை
பாருக்குள்இனியிருவோருக்கும் அயன்விதிப்
  பயன்கூட்டிவைத்ததேயிவ் வேளை-இளம்
பருவத்திற்பயிர்செய்யென்றனவயுரைத்தமொழி
  பழுதுவராப்போகாது நாளை-இன்னம்
தேருக்குளனந்தம் விசித்திரங்களுண்டு
  சிறுபிள்ளைவிளையாட்டாய்ச செய்காரியமிரண்டு
நீருக்குள்ளாழத்தை அறிபலாங்கோல்கொண்டு
  நெஞ்சாழமறிவது கொஞ்சமோதிலகண்டு
நிகரிலாமதுரைச்செங் கோலை-உன்றன்
  மகள்ஆளுவான்இனி மேலே-இது
நிச்சயம்முதாவினில்மட்சரேசை பெறும்
  அர்ச்சுனன்வைபோகம் சொற்சில்சாவேரிராகம் (கேளும்)

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

கற்பினிலுயர்ந்தசித்திராங் கதையெனுமயிலேகேளாய் ... *
வெற்பினிலுயர்ந்ததோளாய் விசயனென்பவனும்நானே *



பொற்பிலுக்குவமையிந்தப் புவியில்வேறில்லைநல்ல ...... *
அற்புதமாகக்கூடி யணைகுவோம்வாராய்பெண்ணே ... *

வசனம்.

கேளாய் பதிவிரதத்தில்யிருந்த சித்திராங்கதையென்னும் மயிலே மலையைப்போலுயர்ந்தபுசபலத்தில்யிருந்தஅழகினையுடைய அர்ச்சுனமகாராசனென்பவனும் நானே இன்னம்யாதொரு சந்தேகப்படவேண்டாம் இனி நாமிருவருங்கூடி யணையலாம்வாடிபெண்ணே.

சித்திராங்கதை தோழிகளுக்குச்சொல்-விருத்தம்.

ஆணையிளமுலையீரென்றன் தோழியர்கேளீர்இந்த - ... *
கணைமதன்றனைவென்ற காளையர்ச்சுனன்றன்பேரும் ... *
இணையிலாஅழகுஞ்சொல்ல எங்கையோகேட்டுவந்தேன் ... *
அணைகுவோம்வாடியென்று அந்தனுரைத்தான்பாரீர் ... *

வசனம்.

கேளுங்கள் இளமைபொருந்திய இரண்டு ஸ்தனத்தோடுங் கூடிய தோழிகளே ஐந்துபுஷ்பபாணத்தையுடைய மன்மதனைக் கைவென்ற அர்ச்சுனன்பெயரையும் அழகையும் புஜபலபராக்கிரமத்தையும் பூலோகத்திலே யாரோசொல்லக்கேட்டிருந்தோம் நானும் அந்த அர்ச்சுனன் என்னைமருவியணையடியென்று இந்தப்பிராமணன் சொன்னவார்த்தையைக்கேட்டீர்களா இதற்கென்னசெய்யலாம் பெண்களே.

தாதிகள்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

சந்நியாசியைப்போல்வேஷம் தான்கொண்டுவருவனுண்டு *
அந்நியானல்லவென்றிக் காளையிட்டொப்பதன்றே ... *
கன்னியர்பார்த்துக்கூடிக் கலியாணஞ்செய்தபின்பு ... ... *
உன்னையாள்கண்டதென்ன துலகிலிவனைச்சம்மா ... ... *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி பூலோகத்திலே சந்நியாசியைப்போல் மாயவேஷங்கொண்டுவருவதுமுண்டு வந்து உங்கள்குலத்திலேபிறந்த பிள்ளையேயொழிய நான்வேறல்லவென்று ஆணையிட்டவனுமுண்டு அவாள்வீட்டிலிருக்கிற கன்னிகையாகிய பெண்ணைப்பார்த்து கலியாணஞ்செய்து அந்தப்பெண்ணைச்சேர்ந்து தன்னாசைதீர்ந்தபின்பு உன்னையாரென்டார்களென்று வேறேவேஷமெடுத்துக்கொண்டு ஓடிப்போவது இந்தஉலகத்தில் வழக்கம் ஆகையால் இவனை நம்பக்கூடாதம்மணி

அர்ச்சுனன்-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்,

நம்பவுங்கூடாதெல்லா ஞாயங்கொண் டுரைப்பார்போல்வீண்
சம்பங்களாய்த்தடுக்குந் தள்ளியிக்கிருந் தமெத்த- ... *
கும்பலுங்கூடிக்கொண்டு குடிகளைக்கெடுக்கவாயால் ... *
வம்புகள்பேசுந்தாதி மார்களுங்களைப்போலுண்டோ ... *

வசனம்.

கேளுங்களடி தாதிப்பெண்களே இந்த சித்திராங்கதை உங்களுடனே சொல்லிக்கொண்டவார்த்தைக்கு நல்லஞாயங்கொண்டு சொன்னீர்களல்லவா இதற்குத்தானு வீண்ஜம்பங்கள் அடித்துத் தடுக்குத்தள்ளிக்கொண்டு மெத்தக்கும்பல்கூடி குடியைக்கெடுக்க நாள்தோறும் வம்புவார்த்தைபேசுந்தாதிகள் உங்களைப்போலித்த பூலோகத்திலுண்டா-ஆ-ஆ-ஆ-நன்றாயிருக்குது.

தாதிகளுக்கும்-அர்ச்சுனனுக்கும்-வாது-தரு

இ-ம்-மோகனம்-அடதாளம்.

உண்டோவென்றுரைத்தெங்கள் உத்தமிதன்னோடீ ... *
பெண்டாளவந்தாயே பிராமணாபோபோ ... ... *

அர்ச்சுனன்சொல்-தரு-இ-ட்டை.

பெண்டாளவந்தது பிழையோவுங்களைக்கூட ... ... *
கொண்டாளவும்வந்த சொற்றவன்றானே............ *

தோழிகள்-சொல்லல்

சொற்றவன்றானென்று கூறிக்கைநீட்டியே ... ... *
மெத்தவும்பேசாதே வேதியாபோபோ ... ... *

அர்ச்சுனன்-சொல்லல்.

வேதியாபோவென்று விளம்பவேண்டாஞ்சொன்னேன்
ஆதியாங்குருகுல அர்ச்சுனன்றானே ... ... ... *

தோழிகள்-சொல்லல்,

அர்ச்சுனன்நீயானால் யாத்திரைபுறப்பட்டு ... ... *
தற்குலம்விட்டுச் சந்நியாசியானாய் ... ... ... *

அர்ச்சுனன்-சொல்லல்

சந்நியாசியாய்நடி தாரணிதன்னிலே ... ... ... *
கன்னியாதீர்த்தங்கள் கண்டாடவல்லவோ ... ... *

தோழிகள்-சொல்லல்,

கன்னியாதீர்த்தங்கள் கண்டாடினதுண்டு ... ... *
சென்னபல்லவரும் இயம்புவாய்பார்ப்போம்... ... *



அர்ச்சுனன் சொல்லல்,

பலனெனுமதுரையில் பாண்டியன்றனக்குப்பின் *
குலம்விளங்கப்பாலன் கொடுக்கவந்தேனே ... ... *

தாதிகள்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்,

பாலன்போலுருவெடுத்துப் பதிவிரதங்களென்னும் ... ... *
சீலங்கொண்டிருக்குமெங்கள் சித்திராங்கதைத்தாயிந்த ... *
ஞாலங்கள் ஆள்வேலன்றுநவமணிமகுடஞ்சூட்டி ... [யே
கோலங்கொண்டவட்குவேறோர் குழந்தையேன்வரைசெய்வா

வசனம்.

கேளாய்பிராமணசந்நியாசியே புருஷிவேஷிக்கொண்டு பதிவிரதமென்றுஞ்சீலத்தை நிலைநிறுத்தவேண்டியிருக்கும் எங்கள் சித்திராங்கதைஅம்மையே இந்தபூலோகமுழுதும் அரசாள்வேனென்றுமகுடாபிஷேகஞ் செய்துக்கொண்டு உலகையாளும் அழகைக்கண்டு மகிழ்ச்சியடைந்திருக்கின்ற பாண்டியமகாராஜனுக்கு வேறுகுழந்தைவேண்டியதென்ன வீண்பேச்சுப் பேசவேண்டாம் அப்புறம்போம் பிராமணசந்நியாசியே

அர்ச்சுனன்-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்.

குழந்தையேனென்றீர்மென்னைக் குந்திறல்முழுவிகாரப்பற்றி
எழுந்திருக்கின்றபெண்கள் விவ்வலகாளவாமா ... ... *
தழைத்தபுத்திரர்களில்லைச் சம்பத்தேனென்றுரைப்போர் *
மொழிந்தவசனத்தைக்கேளாதீர் மூடிகளீர்கள்தாமே ... *

வசனம்.

கேளுங்களடி பாண்டியன்குடியை மாளவைக்கவந்த மந்திரிகளான தாதிப்பெண்களே உட்கார்ந்தால் குழந்தைப்பிடித்துக்கொண்டு எழுந்திருக்கும் பெண்ணாய்ப்பிறந்தவள் இந்த பூலோகத்தையாளத்தகுமா மேலும் மக்களில்லாவாழ்வு எவ்வளவாழ்வென்று பெரியோர்கள் சொல்லுவார்த்தையைக் காதிலேயுங் கேட்டறியாத நீர்மூடிகளென்பதும் நீங்களே இதற்குச்சந்தேகமில்லை பேய்களடி பயித்தியக்காரிகளே.

சித்திராங்கதை-தாதிகளுக்குச்சொல்-தரு.

இ-ம்-பைரவி-அடதாளம்.

நீர்மூடிகளென்று ... நிந்தைகளுரைக்கிறான்
நிட்சயமாகநான் ... ... அர்ச்சுனனென்கிறான்
சர்மத்திறல்தம்மைக் ... கண்டுமயங்கிறான்
காமங்கொண்டேபோகுச் சால்லவும்பொய்கிறான்

கட்டுங்கடியின்னம் திட்டுங்கடிதலைக் ... ... ...*
குட்டுங்கடிவாளால்வெட்டுங்கடிபடி... (ஆரடிநாதிகளே)

அர்ச்சுனன்சொல்- தரு-இ-ம்-தை,

அந்தணனென ... ... அறிகையஞ்சொல்லவோ
அர்ச்சுனனென்பது ... நிச்சயமல்லவோ
நிந்தனையாலென்னை ... நீங்களும்வெல்லவோ
நினைந்திருந்தது ... வனந்தனிற்கொல்லவோ
நீட்டுகிறீர்பூச்சிக் ... காட்டுகிறீர்கும்புக்
கூட்டுகிறீர்சண்டை ... .. மூட்டுகிறீர்பேச்சி
போங்களடிபெண்களாய் என்னைவெல்லப் *
போருமோவடியுங்களால் *

சித்திராங்கதைசொல்-தரு.

வெல்லப்போமோஎன்று விண்மலப்படிக்கிறான்
வெறியின்னமும் வின்ஞானம்படிக்கிறான்
கொல்லப்போமோவென்று கல்விநெறிபடிக்கிறான்
சோனையர்மேகாலைக் கொண்டுதடிக்கிறான்
குத்துங்கடிகம்மாய் மொத்துங்கடிவேடம் *
மூத்துங்கடியப்பால்ஒத்துங்கடியடி (ஆரடிநாதிகளே

அர்ச்சுனன்-சொல்-தரு,

குத்திக்கொழித்ததைக் ... கூழ்சொருக்குவீர்
கும்புகளாய்க்கூடிக் ... கொண்டுவிழுக்குவீர்
தத்தித்தலைமோய்த் ... நானென்விழுகிறீர்
சண்டைபைக்கன்னிறும் ... கண்டாலழுகிறீர்
சாதிப்பிசோமலம் பேதிப்பிசேர்கண்டு *
சோதிப்பிசொன்றிர்போய்த்திற்பிசேர்சேச்சு ... (போங்க)

சித்திராங்கதைசொல்-தரு.

எதிர்த்தமாட்டோமென் ... நின்றழுகிறான்
எக்கச்சக்கம்பேசி ... வெட்கங்கெடுக்கிறான்
மதியாமலேதேதோ ... வார்த்தையடிக்கிறான்
வாய்திறந்தால்நம்மை ... வந்துதடிக்கிறான்
வாட்டுங்கடிதொழு மாட்டுங்கடிவிலங்கு ...*
பூட்டுங்கடியப்பால் ஓட்டுங்கடியடி (ஆரடிநாதிகளே)

அர்ச்சுனன் சொல்-தரு,

தொழுவிலத்துபூட்டத் ... அஞ்சிக்கொழுக்கிறீர்
தொம்பரிச்சிகள்போல ... வம்புக்கிழுக்கிறீர்



கழுமரத்திலில்மாட்டக் ... கலவுகண்டுழைக்கிறீர்
கண்டபடிபேபேசிக் கொண்டுவாய்ப்புழுக்கிறீர்
கள்ளிகளேதடுக்குத் தள்ளிகளேசித்திரக் ... *
குள்ளிகளேவாய்க் கொள்ளிகளேசேச்சி ... (போங்களடி)

சித்திராங்கதைசொல்-தரு,

கள்ளிகளென்று ... ... கடோமாய்க்காச்சிறான்
காமங்கொண்டொருக்காலே கவிழ்ந்துதான்விளறான்
கொள்ளிகளென்றுசொற் ... கூழ்பங்கேசுறான்
கொண்டுவிட்டுப்போன பெண்டெனப்பேசுறான்
கூறுங்கடிமனம் தேறுங்கடிகோபம் ... *
ஆறுங்கடிமகிழ் மீறுங்கடியடி ... (ஆரடிநாதிகளே)

அர்ச்சுனன்சொல்-தரு.

சேதிகளெல்லாந் ... தெரியப்படிக்கிறேன்
சுணத்திற்கலியாணஞ் செய்துமுடிக்கிறேன்
நாதிகளைக்கூடத் ... தவடையிலடிக்கிறேன்
தையலேயுன்னையும் ... கையைப்பிடிக்கிறேன்
தள்ளவேண்டாம்மெத்த அள்ளவேண்டாம்பங்கம்
கொள்ளவேண்டாம் வாயால் வெல்லவேண்டாம்பேச்சி

முதல்தோழிசொல்-விருத்தம்,

கையையும்பிடித்துச்சித்திராங்கதையையுந்தனைக்கலியாணம்
செய்யவும்வந்தேனென்றசேதியையெண்ணிப்பார்த்தால் *
ஐவரிலொருவனான அர்ச்சுனனிவனேயம்மா ... ... *
வையவும்போமோஅம்மா மறையவனல்லவம்மா ... ...*

வசனம்,

கேளும் இராஜபரமேஸ்வரி இவனைநாம்திட்டி மிரட்டினத
ற்கு எவ்வளவும்பயப்படாமல் எதிரேநின்றுகொண்டுநம்மைநா
ளுவிதவித்தியாசமாய்ப்பேசினதுமல்லாமல் கையைப்பிடிக்கிறே
னென்றும்கட்டியணைகிறேனென்றும் கலியாணஞ்செய்கிறேனெ
ன்றும் இவன்சொல்லுகிறதை ஆலோசனை செய்துபார்த்தால் அ
ந்தஅர்ச்சுனமகாராசனென்பதற்கு யாதொருசந்தேகமுமில்லை இ
விநாம்திட்டிமிரட்டினால் மோசம்வரும்போலேகாணுதம்மணி.

இரண்டாவது-தோழிசொல்-விருத்தம்

ஆமிதுமெய்தானம்மா அந்தணனிவனேயானால் ... *
நாமிதுவரைக் குமுன்னோர் நவில்சரித்திரங்களென்றுஞ் *

சிய இன்பசுகமுற்கருகிறேன் நீயும் உனதுதாதிகளும் அறியப்பாரடிபெண்ணே.

பொது விருத்தம்.

அருமறைபவன்போல்வந்த அர்ச்சுனன் தற்சுரூபம் *
வருமுறையாதிமூல மந்திரமுச்சரித்து ... ... *
உருமறைந்திட்டபோது ஒண்டொடிமாரைக்கூவி- *
திருமகள்திகராய்வந்த சித்திராங்கதைசொல்வாளே - *

வசனம்.

இவ்விதமாக பிராமணசந்நியாசிவேஷங்கொண்டிருந்த அர்ச்சுனமகாராசன் தற்சுரூபம்வரும்படியாய் ஆதிமூல மந்திரத்தை த்தியானம்பண்ணி மாயசுரூபத்தைமறைத்தபோது எதிரேநின்றிருந்தசித்திராங்கதைமெத்தவும்பயப்பிராந்தியடைந்தவளாய் தன் தாதிகளுடனேசொல்லுகிறவிதங்காண்க

சித்திராங்கதைசொல்-தரு-இராகம் காம்போதி அடதாளம்.

ஆ ஆ ஆ இந்த ஆச்சரியங்காணேன் —— தாதியமாரே-காசி
அந்தணனவரெந்தவழிபோனார் தாதிமாரே

தாதிகள்சொல்-தரு-இ-ம்ஷை

ஓஓஓநாங்களொருவரும்அறியோம் சித்திராங்கதையே - எங்கே
ஓடிப்போனாரந்தான் தேடிப்பிடிப்போம்சித்திராங்கதையே
சித்திராங்கதை-சொல்லல்
தேடிப்பிடிக்கவுந்திருடனோகள்ளனோ —— தோழிமாரே-நல்ல
திருவுருவங்கொண்டுவருகிறேனென்றாரே தாதிமாரே
தாதிகள்-சொல்லல். [தையே-போன
வருகிறேனென்றுசொன்னவார்த்தையொன்றல்லால் சித்திராங்க
வழிதெரியாதிந்தவிழிஇருந்தென்னசித்திராங்கதையே
சித்திராங்கதை-சொல்லல்.
வழிதெரிந்தாலோடிமறித்துக்கொள்ளலாமடி தாதிமாரே-என்ன
வார்த்தைசொன்னீர்அபகீர்த்திக்காளானேனே-தாதிமாரே
தாதிகள்-சொல்லல். [கொண்ட
அபகீர்த்திக்காளாகிஅவரைத்திட்டினதால் - சித்திராங்கதையே-
ஆசையாலேசும்மாபேசலாமம்மா சித்திராங்கதையே
சித்திராங்கதை-சொல்லல்.
பேசலாமென்றுசொல்லபிராமணன்அவரல்ல தாதிமாரே-செய்த
பிழைபொறுத்தவரினியழைத்தாலும்வருவாரோ - தாதிமாரே



தாதிகள் சொல்லல். [யே-நம்மால்
அழைத்தாலும்வரமாட்டார் அர்ச்சுனனென்றால்சித்திராங்- கதை
அறியாமற்செய்தகுற்றம்அனந்தமுண்டம்மா - சித்திராங்கதை

சித்திராங்கதை தாதிகளுக்குச்சொல்-விருத்தம்.

தாதியர்கேளீரின்று தழைத்தபூஞ்சோலைதன்னில்... *
வேதியனுருவாய்வந்த விசயனென்பவனைக்காணேம்...... *
நீதிசேராதயங்கற்பும் நிலைகுலைந்தழிந்துபோச்சே..... *
ஆதியிற்றாதைசொன்ன அநுபோகமுடிந்ததம்மா - *

வசனம்.

கேளுங்கள் என்தாதிமார்களே இந்தகற்பகவனத்தில் பிராமணசந்நியாசிவேஷங்கொண்டுவந்து என்னுடன்வாதுசெய்தவற்கு நான் அர்ச்சுனமகாராசன இதோ தற்சுரூபங்காண்பிக்கிறேனென்று இருந்தவர்போனவழிதெரியவில்லை எனதுஇராச்சியபாரமும் பதிவிரதாதருமமும் நிலைகுலைந்து அழிந்துப்போச்சுது இதைபெண்ணிப்பார்க்குமளவில் ஆதியில் எனதுதந்தையாகிய பாண்டியமகாராஜன்சொன்ன அநுபோகம் இன்று சரியாய்முடிந்தது இனியென்னவிபரீதமுடியுமோ அறியமாட்டேன்தோழிகளே.

தோழிகள்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

என்னமுன்னுக்குவாரா தென்பதைக்கேட்டிருந்தும்... ... ... *
மன்னரசாட்சிசெய்ய மணவனில்லாமல்நாமே ... ... *
பெண்ணிளவரசுசெய்து பிடித்தவர்க்கெல்லாம்பெண்டாய் ... *
கண்ணினின்முன்கண்டோமிந்தக் காட்சியையென்னசெய்வோம் *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி எண்ணம் முன்னுக்குவாராதென்று உலகத்தில் சொல்வதைக்காதிலேகேட்டிருந்தும் இந்தப்பூலோகம் அரசாள ஒருபுருஷனையும் விவாகம்பண்ணிக்கொள்ளாமல் சிறுபிள்ளைவிளையாட்டாய்நாமே இராச்சியபாரம் பண்ணினபடியினாலேகண்டவர்க்கெல்லாம் பெண்டென்றுசொல்லுங் கண்காட்சியை இப்பொழுதே இஷ்டாத்திரமாய்க்கண்ணிற்கண்டோம் இனியென்னசெய்வோம் அம்மணி.

தோழிகள்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

காட்சியென்றனாக்கவேண்டாம் கவிபானை செய்துக்கோ
தாட்சியொன்றில்லையந்தத் தனஞ்சயன்றன்னைக்க[ண்டால்

கட்டுப்போலேயான அருமைமைந்தனையும்பெற்று ... *
குட்டியாய்மகுடஞ்சூட்டிச் சுகமனுபவிக்கலாமே ... ... *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி இப்பொழுதிந்தக் கஷ்டாட்டி லைபக்கமிட்டோமென்று விசாரப்படவேண்டியதில்லை இனிமேலாகிலும் அந்தஅர்ச்சுனமகாராஜனை விவாகம்பண்ணிக்கொண்டால் அதனால்ஒருநாட்சியும் வரப்போகிறதில்லை இந்தமனுரைப்பட்டணம் அரசாளும்படியாய் மக்களையும்பெற்று மகுடாபிஷேகமுஞ்சூட்டிவைத்து நாமும் திவ்விய சம்போகத்தை அனுபவித்திருக்கலாம்அம்மணி.

பொரு-அகவல்-இ-ம்-மத்தியமாவதி.

இவ்விதமாக என்னைநிகொண்டவளாய் ... ... *
செவ்வியிலிருந்த சித்திராங்கதைதன் ... ... *
தாதிகளுடனே தனதுத்தியவனத்தில் ... ... *
சேதிகள்பலவும் செப்பியங்கிருக்க ... ... *
மறையவன்வேஷ மாற்றியர்ச்சுனனும் ... ... *
முறையினால்இருந்தின மூர்த்தியைநினைந்து ... ... *
வேதவியாசர் விளம்பியமந்திரம் ... ... *
ஓதவும்முன்போல் உருவமதாகி ... ... *
செகதாமெச்சும் செவியிற்குண்டலமும் ... ... *
வானைசேர்செங்கனி வாயும்வெண்டரள ... ... *
பல்லுமொளிவும் பளபளவெனவே ... ... *
சொல்லுமைமாரன் சுவைவிழுந்தோளுக ... ... *
கலைமதிமுகமும் கமலநேத்திரமும் ... ... *
சிலைநுதற்புருவமும் திலமுகுமிழ்மூக்கும் ... ... *
பொற்பினில்பரந்த புயகிரிகளும் ... *
விருப்பங்கொளொளியும் விசவேமார்பில் ... *
மரகதவயிரம் மணிவடமசைய ... ... *
உரகாத்திரங்களும் ஒளியிகவிசை ... ... *
இடையினிற்கச்சை இறுக்கியகதக்கும் ... ... *
துடையிரண்டினிலும் சொருகிடவுடை ... ... *
மெய்மெய்யுறவிடை மேவியபீதாட ... ... *
கையினில்வில்லும் கமல்பொற்பாதமும் ... ... *
தண்டைவெண்டையமும் சதங்கையும்வீர ... ... *
கண்டாமணியும் கலகலவெனவே ... ... ... *
விரிதிரிலம் மெய்த்திருநெற்றி ... ... *



சரிகைவஸ்திரங்களும் தகதகவென ... *
வானைசேர்தனப மாலையுமசை ... ... ... *
ரேகையுமுகத்தில் திகழ்திகழென ... ... ... *
நாவினிலிலங்கும் நட்சத்திரமுடன்பூத் ... ... *
காவிலைவந்துதித்த சுந்திரவனென்ன ... ... *
அர்ச்சுனராஜன் அரிவையர்முன்னே ... *
தற்சொருபங்கொண்டு தானுதித்தனனே ... *

அர்ச்சுனன்-தற்சொருபங்கொண்டுவருகிற-தரு.

இ-ம்-கலியாணி அடதாளம்.

பல்லவி.

அர்ச்சுனமகாராஜன் தற்சொருபப்பிரகாசன் *
ஆகியேவந்தான் *

அநுபல்லவி,

சற்சனர்க்குகூலன் தரணிபுகழ் விசலாய்
ஆர்ச்சனர்க்குலகாலன் கார்பநியருள் பாலகீ
சுந்தரமிலகிய செந்திரு மலர
விந்தபதந்தனை அந்தியந்தினம் நினை
அதிபரவிய நல்ல மதியாபிஷ்சி றந்த
அதிபனுக்குமரு பதியன்னுடைக்ஷி றந்த(அர்ச்சுன)

சரணங்கள்,

சொத்திரம்பிறையிரண்டும் தரிந்தநுதிகொண்டையும்
செகதாமெச்ச மின்னவே-செந்
தினகரனுதயம்போல் கனமணிகுண்டலம்
செவிஇரண்டினுற் றன்னவே
பருத்தபுஜகிரிகள் திருந்தமுடன்மணி
தீபம்போற்பிரகாச மின்னவே-இந்த
பாரெங்குப்விஞ்சகொள்ளும் ஆரங்களுடன்மார்பில்
பதக்கம்பளப ளென்னவே-செஞ்
சாத்திரர்க்கருப்புவிர்பூஞ் சிலைகைக்கண்டவுருவம்
காமனும்அழகினைக் கண்டொளித்துவெருவ
வாத்திரலேவந்த தரித்தமங்கைப் பருவ
மாதுசித்திராங்கதையும் காதல்கொண்டு மருவ
மையல்மீறிமதியயங்கிஅரு கிருந்த
தையல்மாருந்துதி செய்துபின உருந்த
மங்கையர்தங்கள் அலங்கிருந குங்கும

செங்கையிரண்டும் நெருங்க புயங்களில்
மருமலர்மாலை வாட ஐந்
தருமலர்ச்சோலையிற் கூட-வெந்
திருநிகர்பெண்களுந் தேட-கந்
திருவம்மயிழினை நாட-வந்த
மருத்துவமென்னென்று பிருக்கருநிவர்சொல்ல
செகத்திலந்தவரும் அகற்றிவந்திடும் நல்ல (ஆர்ச)

பொது விருத்தம்.

அதிக்தனுடையமெல்ல அர்ச்சனன்றற்சுருபம் ... ... *
சோதிச்சித்திராங்கதைக்குத் தோற்றமெய்ம் மறந்துசோர்ந்து
வதித்தனைப்பிரகாசம் என்றவள் அருகிருந்து ... *
நாதிக்கூட்டங்களெல்லாந் தலைகுனிந்துரைசெய்வாரே ... *

வசனம்.

அசோதெப்படியென்றால் இவ்விதமாக சூரியபகவான்உதய மான துபோல்அர்ச்சுனமகாராசன் தற்சுருபங்கொண்டு நின்றசோ தியைச் சித்திராங்கதை தன்கண்ணினாற்கண்டு அதிகமையல்மீறி மெ ய்ம்மறந்து உயிர்ச்சோர்ந்து மூர்ச்சையடைந்தவளாய் பூமியில்வி ழுந்து அவள்பக்கத்திலேயிருந்த நாதிக்கூட்டங்கள் எல்லோரும் இந்தப்பிரகாசத்தின் எதிரில் கண்களைவிழிக்கமாட்டாமல் தலைய க்குனிந்துக்கொண்டு சொல்லுகிறவிதங்காண்க.

முதல்தோழி மற்றதோழிகளுக்குச்சொல்-விருத்தம்.

பெண்ணினல்லாரேஇந்தப் பேரொழிதன்னைக்காணக் ... ......*
கண்ணினைவேனுயசித்திராங் கதையுமெய்ம்மறந்துவாடி ... *
மண்ணினிற்சோர்ந்துவீழ்ந்த மாதினியெழுந்துபேச ... *
எண்ணிநம்மாலேயான எதுவைச்செய்வோம்வாரீர் ... *

வசனம்.

கேளுங்களடிபெண்களே இந்த அர்ச்சுனமகாராஜன் அதிரு பசவுந்தரியங்களைப்பார்க்க நமதுகண்கள்போதுமா போதாதே இன்னம் அனந்தங்கண்கள்வேணுமே அப்படியிருக்க இதோ சித் திராங்கதையம்மையும் இவர்அழகைப்பார்த்து அதிகமையல்கொ ண்டு மெய்ம்மறந்து பூமியிலேவிழுந்தாளே விழுந்தவள் பெசம் படியாய் நம்மாலானதுவைசெய்வோம் அம்மமாரே,

இரண்டாவதுதோழிசொல்-விருத்தம்.

எதினிநம்மாற்செய்யும் இனமொன்றுங்காணேமிந்த ... *
மாதினையெடுத்துமெல்ல மடியினுட்புறவைத்து ... ... *



மேதினிதனில்வளர்ந்த மெய்பெருங்கடைந்துவீசி ... *
காதினிற்சுக்குசேர்த்துக் கனதெளிந்திடச்செய்வோமே -*

வசனம்

கேளுங்களடி பெண்களே;இனி நம்மாற்செய்யும் எண்ணம் என்னஇருக்குது இந்தசித்திராங்கதையம்மனை மெள்ளவெடுத்துமா ர்போடணைத்து மடிமேல்உட்காரவைத்துக்கொண்டு அழைத்து ப்பார்ப்போம் அதினாலேயும் கனதெளிந்து பேசாம லிருந்தால் இந்தகற்பகவிருட்சத்தின் நிழலிலே சகந்த புஷ்பங்களைப்பரப்பி அதில்பேரில்வளர்ந்தி சீரமெங்கும்துடைத்து குளிர்ச்சி பொரு ந்திய விசிறிகளால்வீசி காதிலேசுக்குவைத்து வாயினால்ஊதினமா ல் இந்தக்காமக்களை தெளியுமடிபெண்களே.

பொது-விருத்தம்.

பாங்கிமாரவர்கள்செய்த பக்குவங்களினால்மூர்ச்சை ... *
நீங்கிசித்திராங்கதைக்கு நினைவுவந்தெழுந்துபொற்பின் ... *
வீங்குதோள்மார்பன்தன்னை வென்றஅர்ச்சுனனைப்பார்த்து ஏங்கியேவெட்கத்தோடுத் தரணியைப்பார்த்துச்சொல்வாள்

வசனம்.

இவ்விதமாகத் தோழிமார்கள்செய்த நானுவிதபக்குவத்தினா லே சித்திராங்கதை மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து அழகிலேய ன்மதனைவென்ற அர்ச்சுனமகாராஜனைப்பார்த்து வெட்கங்கொண் டு பூமியைப்பார்த்துச்சொல்லுகிறவிதங்காண்க.

சித்திராங்கதை தோழிகளுக்குச்சொல்-கலிப்பா.

காமனெனமலமலர்க் கண்ணைக்கலந்திறைந்த ... *
சோமனோயிந்திரனோ சுப்பிரமணியன்றானோ ... *
வீமனுக்கிளையதம்பி விஜயன்றான் அழகைப்பார்க்க - *
நாமனைவோரும்படைத்த நயனமின்னம்போதாதே *

வசனம்.

கேளுங்களடி தோழிமார்களே இதென்ன நமக்கெதிரேநிற் கின்றசோதிப்பிரகாசமானபுருஷன்மன்மதனோமகாவிஷ்ணுவோ சந்திரனோ அல்லது தேவேந்திரனோ - சுப்பிரமண்யசுவாமியோ- புசத்திலிருந்தவீமனுக்கு இளையதம்பியாகிய இந்த அர்ச்சுனம காராசன் அதிருபசவுந்தரியங்களைப்பார்க்க நமது கண்கள்போது மா இன்னம் அனேககண்களும்வேணுமே இவரழகைப்பார்க்க.

சித்திராங்கதை-தாதிகளுக்குச்சொல் தரு.

இ-ம்-ஸ்பாவி-ஆதிதாளம்.

பல்லவி.

காணஅனந்தங்கன் ... களே-வேணும்நமது
கண்கள்போதுமோபெண் ... களே

அநுபல்லவி.

ஆணழகிற்சொல்லும்பிரமனைமிகுந்த ... சம்பிர
அதிருபவர்ச்சுனமக ... ராசன்
எதிர்சேனைதத்திருக்கும்பிர ... காசன் (காணஅனந்)

சரணங்கள்.

கலைமதிமுகத் ... ... தொளிவை-அயிலைவென்ற
கமலக்கண்களி ... னொளிவை
சிலைநுதற்புருவத்தின்தீரெழிலம் ... புருவத்தை
செவிதங்கியமணிகுண்ட ... லங்களை
புவியெங்கணும்விலைகொண்ட ...கலங்களை (காணஅனந்)

மல்லாடுந்திடந்தோள் ... களை விளங்குமணி
மார்பைமலர்பொற்றாள் ... களை
வில்லெடுத்துச்செங்கையைவேளைப்பழித்த-மெய்யை
மிளிர்சங்குகள்மேவுமுன்றெ ... டையை
களிறெனவுலாவுநன்ன ... டையை (காணஅனந்)

கண்ணிமிழ்க்கண்டால்விழி ... வாரோ-மங்கையர்தங்கள்
கணவர்கள்கைக்குட்படு ... வாரோ
எண்ணிப்பார்த்தால்பெண்தோஷம்எங்கேறாத்தனைவேஷம்
எடுத்தெங்குந்திரிந்திருந்தமலர் ... வனம்
அடுத்திங்குவந்தவன்றருந்தரி ... சனம் (காணஅனந்)

சித்திராங்கதை-தோழிகளுக்குச்சொல்-விருத்தம்

ஐயன்மார்களைமயக்கும் தனஞ்செயன் அழகைக்கண்டு -*
மையல்மீறினதாற்றோழி மார்களேமதன் அம்பென்றன்...*
மெய்யலாந்துளைத்துக்கொங்கைமேலும்பட்டுருகுதென்னை
செய்யலாமிந்தக்காமந் தீரவோர்மருந்துசொல்வீர்... ...*



வசனம்.

கேளுங்களடி யெனதுதோழிமார்களே நல்ல பதிவிரதபத்தினிகள்முதல் மற்றப்பெண்கள் அனைவரையும் மயக்கச்செய்யும் இந்த அர்ச்சுனமகாராஜன் தற்றூபத்தைக்கண்டேன் எனக்கு அதிகமையல்மீறி சரீரமெல்லாம்மன்மதபாணம்பட்டுத் துளைப்பதும்அல்லாமல் ஸ்தனங்களியத்துக்குநூந்துவந்து உருகிப்போகுதே இதற்குஎன்னசெய்யலாம் காமவேதனைதீர ஒருமருந்து சொல்லுங்களடியம்மா எனதுமந்திரிகளான தாதிப்பெண்களே.

முதல்தோழி-சித்திராங்கதைக்குச்சொல் விருத்தம்.

ஊருபோய்மத்தளத்தோ டோலமிட்டறைதபேச்சாய்... *
விரகநோய்க்கொருமருந்து விளம்புமென் றுரைத்தீர்மாரன்
சரமதுலையத்துவாடி தலைகுனிந்துயிருஞ்சோர்ந்து... ...*
பாதவித்துனக்குநாங்கள் பயந்திருக்கின்றோமம்மா ...*

வசனம்.

கேளும்இராஜபரமேஸ்வரி ஊருபோய் மத்தளத்தோடே அறுததென்று உலகத்திலேசொல்லுவார்கள் அதற்குச் சரியாயிருக்குது எங்களை நீ விரகநோய்களுக்கு மருந்துகேட்கவந்தது நாங்கள் அந்தஅர்ச்சுனமகாராஜன் அழகைக்கண்டு அதிகமையல்கொண்டு உயிர்சோர்ந்து உனக்குப்பயப்பட்டு உலாவிக்கொண்டிருக்கிறோம்அம்மணி.

இரண்டாவது-தோழிசொல்-விருத்தம்

மருந்துறமுறாலாய்நின் மோகத்தைத்தீர்க்கவேறோர் -*
மருந்துகளிருக்குதென்று மனதினிலெண்ணவேண்டாம்-*
திருந்தசெங்கதிரவன்போல் செழித்தபுஞ்சோலைதன்னில் *
பொருந்தும்அர்ச்சுனன்பொற்பாதம் போற்றிசெய்திடுவோம் [வாரீர்

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்வரி உனது விரகதாபத்தைத்தீர்க்க வேறேமருந்து இருக்குதென் றெண்ணவேண்டாம் இந்தகற்பகவனத்திலே பாலசூரியன்போல் உதயஞ்செய்திருக்கின்ற அர்ச்சுனமகாராஜனேமருந்து ஆகையால் அவிடம்போய் அவர்பாதத்தைத் தரிசிப்போம்அம்மணி.

சித்திராங்கதைசொல்-வசனம்.

அப்படியேபோவோம்வாரும்தோழி.

சித்திராங்கதை அர்ச்சுனனுக்குச்சொல்-கண்ணிகள்.

இ-ம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

மாதவனென்றெண்ணியுன்மைவந்தேனே ... வைதேன்-உன்றன்
மகத்துவமறியாமலேநான் மிகுந்தப்பிழைசெய்தேன்
பாதகியாய்செய்தகுற்றம் பரிகரித்திடுவ ... னேரம்-இனி
பட்சமோடென்னடியாளைரட்சிப்பதுவே ... பாரம்
பெண்புத்திபின்புத்தியென்னும் பேதைமையினாலே-இந்த
பெரும்புவியையாளவிரும்பினேன்செய் கோலே
கண்பெற்றபேறெனவுமதாகமலமுகக்கண் ... டேன்-இனிக்
காசினியாள்வதைவிடுத்தவன்றன் ஆசையிகவுங்கொண்டேன்
எந்நாதவஞ்செய்ததனால்வந்ததுவவும் ... நலமே-நான்
இதுவரைக்குங்கொண்டிருந்தபதிவிரதம் - பலமே
சிந்தைமகிழ்ந்தருமைபாருளிச்செய்ததென்றன் கையில்-மெள்ளசி
க்கினதும்பக்குவந்தால்திருமென்றன் - மையல்
காசிதேசப்பிராமணசந்நியாசியைப்போல் - வந்தீர்-என்னைக்
கண்டுமையற்கொண்டிருந்தீர் சாட்சியிங்கே தந்தீர்
வாசம்வீசும்கற்பகப்பூங்காவனத்திலேனைச் சேரும்-இந்த
மதுரைநகர்ஆளஒருமகனைப்பெறக்கண் ... பாரும்

இதுவும்-சித்திராங்கதைசொல்-விருத்தம்.

அந்தணவேஷங்கொண்டென் அம்புசோதித்தாய்போற்றி*
சுந்தரவனத்திலென்றன் தனிசுரூபமெடுத்தாய்போற்றி...*
வந்தனைநீதிருந்தமேற்கொண்ட மையலைத்தீர்ப்பாய் போற்றி
என்றனையடிமைகொண்டருளும் இணையடிபோற்றிபோற்றி...*

வசனம்.

காசியாத்திரைபிராமணசந்நியாசிவேஷங்கொண்டு அடியாளை-மனஞ்சோதித்தவரேசரணம் மறுநாளதற்சுரூபம்தந்தவரே சரணம் நான்கொண்டகாமவிகாரம்திரும்படியாய் மருவியணைய வந்த உமதுதிருவடிக்கனந்தசரணம் என்னை யடிமைகொள்ளவே ணும்சுவாமிசரணம்சரணம்.



அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

இணையடியைப்பணிந்தேத்தும் எழில்சித்திராங்கதைமயிலே
பெய்யுமாரன் ... ... ... *
கணையடிபட்டும்மீறிக் காதலுடன்கற்பகப்பூங்
காவிற்கட்டி ... ... ... *
அணையடியென்றதற்குசற்றும் அஞ்சாமற்றிட்டிசரச
சர்க்கினைசெய்து ... ... ... *
துணையடிகளுக்குத்தொழுவிலங்கதனைமாட்டத்துணிந்
தவளேம்பாடி ... ... ... *

வசனம்.

கேளாயென்இரவுபோதத்தையும் அறிசெய்தறிந்த சித்திராங்கதையே நானிந்த கற்பகவனத்திலே உன்னைக்கண்டு மோகித்துக்காமசுகம்பெறுவதற்குப்பட்டு அனேகவிதத்திலும்யானுன்னைக்கூடிட்டணையடியென்றுசொன்னதற்குச் சற்றும்அஞ்சாமல்திட்டவும் சிரசாக்கினைசெய்யவும் தொழுவிலங்குபோடவும் நினைந்தனைநீ திருந்தவள் இப்போதனைவிதமாக உன்னைமருவியணைந்து மையலைத்தீர்க்கச்சொல்லுகிறாய்போடிபோடியென்பனே.

சித்திராங்கதைக்கும்-அர்ச்சுனனுக்கும்-வாதுரு.

இ-ம்-தோடி-அடதாளம்.

மறையவனென்னவேஷமாயவேஷங்கொண்ட மெய்யா-உம்மை
மட்டில்லாவார்த்தைநான்திட்டினபிழைபொறும்-ஐயா

அர்ச்சுனன்சொல்- தரு-இ-ம்-டை, [ஷம்

பிழைபொறுக்கஉன்றன்மேல் பேசப்போகாதினிமானே-சொல்
பேதைமையென்பதுமாதர்க்கியல்பல்ல தானே

சித்திராங்கதை-சொல்லல்.

பேதமையாற்செய்தபெரும்பிழைபொறுத்தருள் நீர் மையல்
பெருகுமென்றனைக்கூடிமருவியணையும்பிராண நாதா

அர்ச்சுனன்-சொல்லல்.

மருவியணைகுவோம்வாடியென்றீர்புலி பிடித்தே-உன்றன்
மடிபிடியாலென்றனை யிகட்சியாய்பேசினாய்மாதே,

சித்திராங்கதை-சொல்லல்.

இகட்சியுன்றனைச்செய்தவன்னிருல்பொறுக்குமோ பூமி-இந்த
யுலகியில்மேற்பிழைபியம்பவேண்டாம் சுவாமி

அர்ச்சுனன்-சொல்லல்.

இடம்பவேண்டாமென்றுதயம்பெறுமிச்சகம் — பாடி-மெள்ள
எத்தவந்தடன்றன்வித்தையபிவேனீ — ப்பாடி

சித்திராங்கதை-சொல்லல்.

வித்தையொன்றுமில்லைசித்தம்மகிழ்ந்திரு — வோரும் நல்ல
வேடிக்கையாயிக்கேகூடியணைகும்வாம் — வாரும்

அர்ச்சுனன்-சொல்லல்.

அணைகுவோம்வாருமென்றிணைபடிபணியவும் — ஆச்சே-கட்டி
அடிக்கிறேனென்றுணைமடிக்கிறேனென்றசொல்போச்சே

சித்திராங்கதைசொல்-சேபத்தியம் இ-ம்-காம்போதி.

ஐயனென்றறியாமல் வைதவையென்றன்மேல் ... *
அபசாரமிதுபொருத்தருளவேணும் ... *
செய்யனேநின்றலையக்கொய்புவேனென்றுநான் *
செப்பினதுமென்றன்மேல்தப்பிதந்தான் ... *
ஐயமலர்ப்பாதங்களைவிலங்கதபூட்ட ... *
சொன்னதுவும்யென்றன்மேல்அன்னிதந்தான் ... *
மெய்யனேயென்றனதுநாயபுத்தியிலுவிம் ... *
மேதினியையாளடயிலுமியவுமுண்டு ... *
குற்றமற்றவனையும்மனங்கொண்டிருந்த ... *
உத்தமனேயுமதுதிருவுருவைக்கண்டு ... *
மெத்தமயல்மீறிமென்மேனுங்காம ... *
பித்தந்தலைக்கேறுதென்பிராணநாதா .. *

வசனம்.

கேளுங்சுவாமி உம்மைநான்விசேஷவித்தியாசமாகத்திட்டிய அபசாரமும் உம்மைசிரசாக்கினைச் செய்துப்போடுவேனென்றுசொன்னதப்பிதமும் உமதுதிருவடிகளில்தொழுவில்மாட்டுவேனென்றுசொன்ன அநீதமும் எனது கொஞ்சபுத்தியினாலே இத்தமதுரையை இளவரசாட்சிசெய்திருக்கபிழையும் இன்னம் அநேகக்குற்றங்களையும் பொறுத்துக்கொண்டிருந்த உத்தமனே உமதுருபத்தைக்கண்டு அதிகமையல்மீறினேன் ஆதலால் அடியாளையருவி அணையும்பிராணநாதா.



அர்ச்சுனன்சொல் சேபத்தியம்-இ-ம்-புன்னாகவராளி.

தையலேநான்கொண்டமையலால்நீசெய்த ... *
தப்பிதமெல்லாம்எனக்கற்புதந்தான் ... *
செய்யவாய்த்திறந்துநீவைதவையென்னிரு ... *
செவிக்கின்பமாய்அனுபவிக்கலானேன் ... *
வெய்யவாள்கொண்டுதலைகொய்புவேனென்றுசொல்லை
விரும்பினேன்அபிர்தசெங்கரும்புபோல ... *
கையிலுற்பிடித்தென்றன்மெய்யின்மேலடிப்பதைக் *
கண்டனன்கமலமலர்ச்செண்டுபோலே ... *
ஆதலால்நீசெய்தஅன்னியத்தை ... ... *
பூதலத்தனின்மனம்பொறுத்திருந்தேன் ... *
காதலினாலணியிக்காலியாண்ட ... ... *
ஆதேலாம்நான்அறியச்சொல்லுவாயே ... *

வசனம்.

கேளாய்பெண்ணே சித்திராங்கதை நானுன்மேல்மோகித்தபடியினாலே நீசெய்ததப்பிதமெல்லாம் எனக்கற்புதமாயிருந்ததல்லாமற்செவிக்கின்பம் சிரசாக்கினைச்செய்துப்போடுவேனென்று நீசொன்னவார்த்தையே செங்கரும்பு உன்கையிலுற்பிடித்தென்னையடிப்பதே செந்தாமரைப்பூச்செண்டு ஆதலால் நீ செய்தகுற்றங்களெல்லாம் மனம்பொறுத்துக்கொண்டிருந்தேன் இப்பவும் நீ பூலோகவாழ்க்கைதப்பிப் பொன்னரசாட்சிசெய்ய சிரசிலேதங்கமகுடமும்கையிலேசெங்கோலும்பிடித்திருக்கவேண்டியதென்ன உனக்குச்சொல்லடிபெண்ணே.

சித்திராங்கதை தன்வரலாறு-அர்ச்சுனனுக்குச்சொல்-அகவல்.

இ-ம்-எதுகுலகாம்போதி.

ஐந்தருவனத்தில் அருமறையவன்போல் ... *
வந்திருந்தவுரு மாற்றியிவ்வுலகில் ... *
பருவமங்கையர்க்கோர் பஞ்சபாணனேநேர் ... *
உருவமுங்காட்டியென் னுளத்தைமயக்கும் ... *
மன்னவா நாளிம் மணிமுடிபூண்ட ... *
நின்னவர்பொன்ன இயம்புவேன்கேளும் ... *
[illegible]மானதியும் வாசசெங்கமல ... *
பொய்கைகளும்ஞரா புரியாசாளும் ... *
சித்திரவாசனென்னச் செப்பும்பாண்டியனும் ... *
புத்திரர்குழையிலல் புரிந்ததற்றவர்தாம் ... *

கன்னிகையைபணிந்த கடவுள்தன்னிடம்வாழ் ... *
அன்னையபூங்கன்னி அருளினாற்பிறந்தேன் ... *
ஆதலாலெந்தை யவர்பெயர்விளங்க ... *
காதல்கூர்சித்திராங் கதையெனவுரைத்தார் ... *
தினமொருமேனியாய்த் திங்களைப்போல்நான் ... *
மனமகிழ்வாக வளரெழுபதில் ... - *
கல்வியாஞ்சகல கலைகளுந்தேர்ந்து ... - *
செல்வியாய்த்தெருவிற் செண்டுகொடி ... *
எந்தைபோலவைக்கு யாதொருநாள்போய் - *
விந்தைசேருமக விசேஷங்கேட்பவள்போல் - *
விசயனென்றவன்றன் மெய்யெழில்கேட்டு - - *
திசையின்மற்றொருவரா இன்பமனல்ல - - *
பதிவிரதத்தினாற் பாராளவெண்ணி - - *
கதிதரும்அங்கயற் கண்ணிபொற்பாத - - *
பத்திசெய்திருண்டு பருவமுஞ்சென்று - - *
புத்தியறிந்தேலப் போதெனையீன்ற - - *
அப்பனவ்வார்த்தையை யறிந்தமைச்சர்களால் - *
கொப்பனஎன்னைக் கொண்டதென்னெனில் - *
எனையொருமன்னனுக் கீயவுமென்றன் - - *
நினையனைச்சிகாரந் தான்பெறவதவும் - *
மதுரைமாநகரம் மைந்தனுறுவதும் - - *
விதிகளாற்றேர்ந்திடும் மேதினியதிப - - *
யமராட்ட சம்மதித்தென்னை - *
நயமதாயழைத்து நாளையதினந்தீ - - *
திருக்கலியாணம் செய்துகொள்ளென - *
உருக்கியசெம்பை யூத்தினாற்போலென் *
செவியினிலுரைக்கத் திமொழிகேட்டு - - *
புவியினிலின்றோர் புருஷனைவேண்டேன் - - *
கற்பினுவிந்தக் காளிபாள்வேனென - *
சொற்படிமருடன் றூட்டுவீரென்ன - - *
பெண்ணரசாள்வது பிழையெனஎந்தை - - *
எண்ணிசொல்வார்த்தைக் கெதிர்மொழிநானும் - *
பேசினேனந்தப் பிழையையும்பொறுத்தா - - *
லோசனைசெய்து உபர்மணிமகுடம் - - *
தரித்தலரென்றன் றலையினிற்சுமையை - *
இருத்தினர்செங்கோல் ஈந்ததாலுலகிற் - - *
வளவுகட்கொலைபொய்க் கடுங்கோலிலாமல் - - *
இளவரசாள என்றன்பாங்கியரை - - - *
மதி மந்திரிமார்களாய் மருங்கினில்வைத்து - - *



அனாரிதவுபாய தந்திரங்களினால் - - - - *
அரியணைமீதில் அமர்ந்துலகெல்லாம் - ... *
ஒருகுடைநிழலின் உண்மையைச்செலுத்தி - - *
மல்லிகைமுல்லை மருவிருவாட்சி - - *
பலவகைவிதப்பூ பறித்தாராட்சி - - *
நிலைபிசகாமல் நிற்கயீராட்சி - - - *
மலரடிதுதிசெய வந்ததிலாட்சி *
கண்டனன்என்றன் கதையிதாய்மையல் - *
கொண்டவென்றனைநீர் கூடுவதல்லால் - - *
பொறைமிகுதருமபுத்ரனுதித்து - - *
மறையவனுமியும் மாநிலந்தன்னில் - - *
தீர்த்தயாத்திரைக்குச் சென்றதின்சேதி - - *
பார்த்திபாவெனக்குப் பகர்ந்தருளாய் - - *

வசனம்.

தேனும்என்சுவாமி தேவரீர் பொறுமையில்மிகுந்ததருமராசன்தம்பியாய் விளங்குகின்றவர் பிராமண க்ஷத்திரியாகியாய்த் தீர்த்தயாத்திரைச்செய்யவந்த விருத்தாந்தம் அடியாளுக்குத்தெரிவிக்கவேணும் என்பிராணநாதா.

அர்ச்சுனன்-தன்வரலாறு சித்திராங்கதைக்குச்சொல்-அகவல்

இராகம்-தோடி.

பொற்பினில்விரதி புகழுமற்புதமே ... *
கற்பிலருந்ததி ஒருதமிழ்கிளையே ... *
பற்பலர்களுக்கதி பாண்டியன்கிளையே ... *
ஐவர்களுடனே அவதரித்தனாய் ... - *
மைவருங்கண்ணார் மயல்கொளவேனாய் ... - *
பொய்யல்லயாத்திரை போந்ததின்றனாய் ... *
தையலேஎன்றன் சரிதையைக்கேளாய் - - *
இந்திரபிரஸ்தம் என்னுமாநகரில் - *
வந்தொருநாரத மாமுநிநல்ல - - - *
சந்தோஷவார்த்தை தருகுவனென்றால் - - *
சந்தேகபெந்தாளர்குலத்தநிதித்தோர் - - *
இருவருமூவரை எங்ஙனிசெய்தவத்தால் - *
ஒருவருந்திகரிலா உயர்வாம்பெற்று - - *
வருவருதிரௌபதை மையல்மாண்டார் - *
அரிவை திரௌபதையை ஐவரும்பெண்டாய் - *

வைத்திருப்பதுவும் வன்மையேதரும ... *
புத்திரனென்று புகழும்பெருமுனியை ... *
உத்திரங்கேட்க ஓராண்டுக்கொருவர் ... *
பற்றிமற்றேறில் பார்த்தவர்தீர்த்து ... *
யாத்திரைசெய்வீரென் றுரைத்தவர்போனார் ... *
மூத்தவன்றன்னிட முறையினிலங்கதார் ... *
சாஸ்திரக்குருக்கள் தன்மரபிட்ட ... *
அஸ்திரமெடுக்கும்போ தடியிணைக்கண்டு ... *
வேடுவர்களையும் வென்றாங்கேயில் ... *
மாடுகள்திருப்பி மறையவருடனே ... *
கூடிமவ்வேட்டம் கொண்டியாத்திரையாய் ... *
நாடுகள்திரிய நான்புறப்பட்டு ... *
காசியிற்சென்று கங்கையில்முழுகி ... *
வாசுகிபெற்ற மங்கையுலூபி ... *
தேசுகண்டங்கே திகைமயலாகி ... *
பேசியவள்பின் பிலவழியேகி ... *
பாதலமென்னும் பதியிலிற்சென்று ... *
காதலன்நாகக் கன்னியைமணந்தேன் ... *
ஆதலாலவளும் அரவானைப்பெற்றாள் ... *
பூதலந்தனிலுன் புகும்பிலவழியால் ... *
குன்றருவிகளும் குளங்களுந்தேடி ... *
நன்றிசெய்பலபல நதியினீராடி ... *
தென்றிசைமறையோர்சி லருடன்கூடி ... *
மன்றல்சேர்நாக மலையுங்கூடி ... *
திருக்காளத்திரியும் திருவொற்றியூரும் ... *
வருகழுக்குன்றமும் மயிலைமாநகரும் ... *
பெருகுகம்பாநதி பிரபலமாங்காஞ்சி ... *
பரமவங்கரமும் புனல்சூழ்விதமும் ... *
பிரமன்செய்யாகமும் பெருந்தவநிலையும் ... *
பரமன்வந்துமைக்கோர் பாகந்தந்ததுமா ... *
மாமதிம்மகிமையும் மகிழ்ந்துகொண்டாடி ... *
அண்ணாமலையின் அடியையும்போற்றி ... *
உண்ணாமுலையெனும் உமைபதம்பணிந்து ... *
பெண்ணையில்முழுகி பெருந்துறைபாடி ... *
வெண்ணெநல்லூரும் வீரட்டானமும் ... *
ஆவடுதுறையும் அணிதிருவாரூர் ... *
மாவடிகண்ணூர் மகிழ்வடமருதூர் ... *
நாவலூர்செந்தூர் நடம்பயிலம்பலம் ... *
நாவலராலும் நவிலவுயரிதாம் ... *



பரமென்குந்தெய்வ பதிபணிந்தப்பால் ... *
நீரெங்கும்பொங்கும் திகரிக்காவிரியும் ... *
சீரங்கம்வந்து சிலநாளிருந்து ... *
சாரங்கபாணிபொற் றாளிணைபணிந்து ... *
வண்டிசைபயில்வரு வைகையாற்றில் ... *
எண்டிசைபுகழு எழுதேடெதிரேற ... *
தண்கடலத்தையும் நான்மடிதனத்து ... *
மண்விட்டணந்த மானதிதோய்ந்து ... *
பங்கயவாவியும் பார்சொக்கநாதர் ... *
அங்கயற்கண்ணொ டமர்திருக்கோயிலும் ... *
மங்கையர்வாழ்நான் மாடகூடங்களும் ... *
நற்றீபமதுரைத் தலமதின்பெருமை ... *
காவிரியமுனை கங்கைசரஸ்வதி ... *
பூவிரிதாமரை புகழும்புஷ்கரணி ... *
கோவிலங்கன்னியா குமரியாதீர்த்தம் ... *
நாவியேவைகைத்தலிலும்நீராடி ... *
வந்தனனிந்த வாசலிருந்து ... *
நந்தவனத்தில் இரதியெனவந்த ... *
உன்றனைக்கண்டு உவமகிழ்ந்திருந்த ... *
என்றனைவாலா நீதழுவலைத்தநீ ... *
பாண்டியனின்னம் பண்ணுபசாரம் ... *
வேண்டியதுண்டு விளம்பவும்பெண்ணே *

சித்திராங்கதைசொல்-கந்தார்த்தம்-இ ம்-மத்தியமாவதி.

நின்மகிமையறியாமல் நான்மதியாதநான் ... *
சொற்பிழை யனந்தமும்பொறுத்து ... ... *
என்மனதின்படிக்கிசைந்து மங்கலமிதிசெய்ய ... *

வாருமென்சுவாமி மருவிமுத்தந் ... *
தாருமென் சுவாமி ... ... *
வாரும்அலைகட லிரும்போலவிரு ... *
வோருக்கலவியாற் சேருவோம்அருகினில் (வாருமென்)

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்-இ ம் தோடி-அடதாளம்.

சென்டார்முலையாய் நின்னருகினிற் ... ...
றொண்டாரவந்ததோழிக ளிருக்கிறாரவர்கள் ...
கண்டார்நகைப் பார்களிந்த ... ... ... *
வண்டார் மலர்வனத்தில் ... ... ... *

மறைவாகவாடி மருவுவோம் ... *
உறவாகக்கூடி ... ... ... *
நினைவாகமனதினில் நினைத்திருந்தபடி ... *
குறைவறுமலின்று கூடலாம்பூஞ்செடி (மறைவாகவாடி)

சித்திராங்கதைசொல்-கந்தார்த்தம்-இ-ம்-தோடி.

நாதிகலிந்தத் தழைத்தசோலையிற் ... ... ... *
போதலர்பூவணைப்போட்டப்புறம்போவார் ... *
ஆதலாலொருவரும் அறியாமல்இருவரும் ... ... *
மாதவிமாந்தருவினில் ... ... ... *

மருவுவோம்வாரும் களியித்தும் ... ... *
பருகுவோம்வாரும் ... ... *
திருவுநேமோனும் திகழிரதியும்தினை ... *
பொருவுமல்மதனும்போல் உருகொண்டஇருவரும்(மரு)

அர்ச்சுனன்சொல் - கந்தார்த்தம்.

அணியாரிங்கொருவருமில்லை ... ... *
தனியாய்நாமிருவரும் கூடிச்சம்போகமதாய் ... *
பணியார்பூவணையினிற் படுத்துக் ... ... *
கனிவாயிதழுறவுண்டு ... ... ... *

களிக்கலாம்பெண்ணே இன்பக்கடல் ... *
குளிக்கலாங்கண்ணே ... ... ... *
அளிக்குமலரும்பல்நளிர்ந்ததுபோலே ... * [களி
கிளிக்குப்பொற்கின்னப்பால்கிடைத்தாற்போலினிமேலே

பொது-விருத்தம்-இ-ம் தோடி.

கந்தனும்வள்ளியும்போற் காளையர்ச்சுனனுமங்கைப் - *
பந்தெனுமுலையாளென்னப் பகர்சித்திராங்கதையுங்கூடி - *
ஐந்தருவனத்திலின்பம் அனுபவித்தவர்களிப்பால் - *
வந்தொருவருக்கொருவர் வாய்மலர்ந்திருக்கின்றனர்; *

வசனம்.

இவ்விதமாக சுப்பிரமண்ணிய சுவாமியும் வள்ளியம்மனும் வனகத்திலே மருவியணைந்ததுபோல் அந்தகற்பகவனத்திலே அர்ச்சுனமகாராஜனும் சித்திராங்கதையும் காந்தருவ விவாகமாகச் சேர்ந்து அதிக இன்பசம்போகத்தை அடைந்தவராய் அந்த கு



க்கத்திமரத்தடியைவிட்டு இப்புறம்வந்தொருவருக்கொருவர் வனி வாய்மலர்ந்து கலந்துபேசுகின்றவிதங்காண்க.

சித்திராங்கதை அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்.

வேளைவெல்லெழில்மிகுந்த விஜயநாம்இந்திரவந்த - *
வேளைநல்லதுகாந்தர்வ விவாகமுமுடிந்ததிந்த ... *
நாளையதினம்நமக்கு நன்மணஞ்செய்வார்திடம்பிம் - *
நாளைகொண்டரண்மனைக்கு நடந்துவந்தருளுவீரே *

வசனம்

கேளும் அழகிற்மிகுந்த அர்ச்சுனமகாராஜனே நானிந்த நந்தவனத்திற்கு வந்தவேளைநல்லவேளை யானையால் உமதுஅரிவை முகங்கண்டு காந்தர்வவிவாகமும் முடிந்தது இனிமேல் நமதையனா கிய பாண்டியமகாராஜன் நாளையதினம்நிருக்கவிவாகஞ்செய்து ப்போடுவார் இவிநாமிருவருங்கூடிச்சேர்ந்துக்கொண்டு அரமனை க்குப்போக எழுந்தருளவேணும் சுவாமி.

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

திருவெனவுருவடைந்த சித்திராங்கதைபேதே - *
தருவனந்தனிலுனுன்றன் நந்தைசொற்படிக்கிருந்த - *
உருவமாற்றினதல்லாமல் உன்னையுங்கூடிஅங்கே - *
வருவதுநயந்தேபோய் வாழ்மனைசேருவாயே - *

வசனம்.

கேளாய் ஸ்ரீமகாலட்சுமியைப்போலும் அழகைப் படைத்த சித்திராங்கதையென்னும் கண்ணே நான்பிரமனை சத்தியசாயைப்போல்வந்து உன்தந்தையாகிய பாண்டியமகாராஜன்சொற்படிக்கிருந்த ரூபத்தைமாற்றி இராஜரூபமெடுத்து உன்னையுங் கூடி நான் உன்றன்முன்வருவது நன்றல்ல நீவாழும் அரமனைக்குப் போய்ச்சேரும்பெண்ணே.

சித்திராங்கதை-புலம்பல் தரு இ-ம்-ஆகிரி-அடதாளம்.

வாழும்அரண்மனை போவென்பவரோ
வந்துசேர - - வாமோ-கூட
வரமனதில்லாமல் வீரமாயிருந்து
வாயால்வழிவிட - லாமோ
வையகஞ்செய்யுமென் ஜோதிகள்வார்த்தை
புண்ணமயாச்சு - - தேநாய்

உன்றனைப்பிரியே னென்றுசொன்னபேச்
  சுடனேபோச்சு - - தே
பதிவிரதங்கொண்டபதியாயிப்
  பாரினில்வாழ்ந்தே - - னே-கல்வி
பல்வினைப்போலெல்லாம் சொல்லியின்றுகாடிப்
  பாவையில்வீழ்ந்தே - - னே
சதிசெய்யாமலென் மதிமயங்கிநின்றன்
  மையல் தீர்த்தே - - - னே-மனது
சற்றிலேமகிழ்ந்து நயிரிலமுரு
  முற்றிலும்பார்த்தே - னே
சக்களாயென்றும்வாய் நக்கிறவர்போலும்
  சம்மதிப்பட்டே - ... னே-செங்கோல்
சத்தியமும்தெய்வ பக்தியும்சற்பும்பெண்
  புத்தியாற்கெட்டே - - - னே]
அக்கனாதீர்ந்தயின் நிக்கிரகித்துமுன்போல்
  அந்தவனுக - - - வோ-இவள்
ஆசையினால்வந்தவேசியென்றுதீர்த்த
  யாத்திரைக்குப்போக - வோ
சித்தையிலெண்ணியென்றத்தைமுன்வராமல்
  திருடனவனைப்போ - - லே-மலர்
செழித்தவனத்தி லொளித்திருந்தாலென்
  செய்வேனினிமே - - - லே
எந்தையினாலொரு நிந்தைவருமென்
  றெண்ணவேண்டாம் - வாரும்-இந்த
ஏழையுடன்கூடி வாழும்படிமனம்
  இசைந்துகண்பா - - ரும்

இதுவும் -சித்திராங்கதைசொல்-விருத்தம்-இ-ம் - ஆனந்தபைரவி.

இலையினிற்பாலோடன்னம் இட்டதையுண்டுமுன்னம் *
தலையினை வெட்டுமென்ற தன்மைபோலுன்றனுதை - *
வலையினிற்பட்டஎன்னை மருவவாராமலிரின் - - *
நிலையினிலிருப்பதென்ன நீதியென்பிராணநாதா *

வசனம்.

கேளும் சுவாமி இலையிலே நல்லபாலோடு அன்னமிட்டதைத் உண்ணுகிறத்திற்கு முன்னே கழுத்தையறுத்த தன்மைபோல் உ



ன்றன் ஆசையில்அகப்பட்ட என்னை மருவியணைய மனைக்குவாராமல் நிரித்த நந்தவனத்தில் இருப்பதென்ன நீதி எழுந்திருந்து வாரும் என் பிராணநாதா.

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல் விருத்தம்.

இராகம்-ஆனந்தபைரவி.

வாருமென்றழைத்தாய்கண்மணிசித்திராங்கதையேயுன்னை *
சேரும்அக்கறையெனக்குத்தீர்ந்ததென்றெண்ணவேண்டாம் *
நாரும்பூவும்போற்கூட நம்மணஞ்செய்வேனிந்த ... *
பாரும்வானமுந்தான்சாட்சி பதியிற்போய்சேர்வாய்பெண்ணே

வசனம்.

கேளாய் சித்திராங்கதை யென்னுங் கண்மணியே! நானுன்னைச்சேர்த்தணையும் ஆசையும் அக்கறையும் எனக்குத்தீர்ந்துபோச்சுதென்று எண்ணவேண்டாம் இனி நாமிருவரும் நாரும்பூவும் போலமருவி யணைய நாளையதினம் வந்து உன்னைத் திருக்கலியாணஞ் செய்துக்கொள்ளுகிறேன் இந்தபூமி ஆகாசம் தான்சாக்ஷி வியசனப் படவேண்டாம் அரண்மனைக்குப் போய்ச் சேரும் பெண்ணே.

சித்திராங்கதை தாதிகளுக்குச்சொல்-விருத்தம்.

மருமலர்க்குழலீர்தோழி மார்களேயிவரென்கூட ... *
வரமனதிலாமற்பூமி வானுமறியநாளை ... *
திருமணஞ்செய்வேனென்று செப்பியமொழியைநம்பி *
அரண்மனைக்கேகலாமா அன்னவருரைசெய்வீரோ ... *

வசனம்.

கேளுங்கள் என்சகிகளே இந்த அர்ச்சுனமகாராஜன் நம்முடனேகூட மனைக்குவர மனதில்லாதவர் நாளையதினம்வந்து உன்னைத் திருக்கலியாணஞ் செய்துக் கொள்ளுகிறே னென்று பூமி ஆகாசம் அறியச்சொன்ன சத்தியவார்த்தையை நம்பி இவரையிங்கே விட்டு விட்டு நாம் அரண்மனைக்குப்போகலாமா நீங்களனைவரும் ஒரு ஆலோசனைச்சொல்லுங்களம்மா.

தோழிகள்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

வனாயிக்கேசவினோதராலும்இவ்வையகந்தனிலெனருத்தாம்
உரவிற்றுன்மயிலுமன்றும் ஓடிப்போகுமன்றனைக ... *

காலினைப்பிடித்துநல்ல விவாகஞ்செய்தனைபாரேன் ... *
வருகிறேனென்றுசொன்ன வாய்மையுந்தப்பாரம்மா ... *

வசனம்.

கேளும் இராஜபரமேஸ்பரி மயிலின்மேல் வீரேந்திரனும் உலகிலேதான் மகிபனேனும் எங்கேயும் ஓடிப்போகாது நாளைய தினம் உன் கைவிரலைப்பிடித்துத் திருக்கலியாணஞ்செய்து சேர்த்தனையிதோ வென்றுசொன்னவர் எந்தத்தப்பிலோடிப்போகமாட்டார் நாம் அரண்மனைக்குப்போய்ச் சேருவோம்வாரும் அம்மணி.

இதையும்-தோழிகள்சொல்-விருத்தம்.

உருவலைக்கண்டபின்னே யுரிமைத்தாயுவதுபோனீர் ... *
சரசசித்திரிப்பாவை தானிக்கணம்மேல்வசடிபித்து ... *
விசாலசெறிமலர்வனத்தை விட்டுவர்போகமாட்டார் ... *
வரிசையாநாமெல்லோரும் வாழ்மனைக்கேகுவோமே ... *

வசனம்.

கேளும் அம்மணிஉருவிகண்டபின்னே உரிமைத் தாயுவதுபோன உன்னை மருவியனை இந்தச்சம்போகத்தை வேண்டுவனாகிய இவர் இந்தநந்தவனத்தைவிட்டு அப்புறம்போகமாட்டார் நாம் வந்து வெகுநேரமாச்சுது அரண்மனைக்குப்போய்ச் சேருவோம்வாரும் அம்மாநீயே.

சித்திராங்கதை-தோழிகளுக்குச்சொல்-விருத்தம்.

சகிகளேநீங்கள்சொன்ன சாமர்த்தியவார்த்தைநல்ல ... *
விசித்திரானிவ்வனத்தில் விஜயனைவிட்டிடலெல்லோரும் ... *
கெரியிதுபாரியவாக்குச் சிக்கிமதாகச்சென்று ... *
மகிதலமதியநாளை மணமெனவுரைப்போம்வாரீர் ... *

வசனம்.

கேளுங்கள் என்சகிகளே நீங்கள்சொன்ன வார்த்தையே சரி இந்தச்சற்பகவனத்திலே அர்ச்சுனமகாராசனை விட்டு நாம் அனைவரும் அரண்மனைப்போய்ச்சேர்ந்து நாளையத்தினம் திருக்கலியாணமென்று புவிலோகமெங்கும் அறியச்செய்வோம் வாருங்கள் அம்மா.

தோழிகள்சொல்-வசனம்.

அப்படியே போவோம்வாரும் அம்மணி.



சித்திராங்கதைசொல்-தரு-இராகம் அசாவேரி அடதாளம்

பல்லவி.

அரமனைக்கேகுவோம்வாரீர்-நாம்
அனைவருமிந்த நந்தவனமதைவிட்டுச்சொந்த (அரம)

அநுபல்லவி.

பாமனைநினைந்துருகும் பண்ணைபூவையி குலே
பார்த்திபனிங்குவந்து வாய்த்தானே இனி மேலே (அரம)

சரணங்கள்.

கனமோகமயலின்னும் ... கொண்டுதே-வர
காமெஜாமதிலின்னே ... தன்றுதே-நல்ல
தினமாகநாமைக்கள் எல்லோரும் என்றனும்
இருமருங்குஞ்சூழ பெருமையபாசானும் (அரம)

நாதிகளேசருக்காய்ச் ... செல்லுவீர்-என்றன்
தந்தைக்கிவ்வார்த்தையைச் சொல்லுவீர்-மாட
வீதிகளெங்கும்விளங்கச் ... சிங்காரிக்க
விஜயன்றனக்குமணம் இசையவே பூரிக்க (அரமனைக்)

நாளையதினமாலைச் சூட்ட-மதனா
நகரெங்குமெங்கேசோலை காட்ட-அந்த
தூவியரிச்சனனை என் கமலக்கண்களி கூர
கண்டவுடனேமையல் கொண்டஇளைப்பு தீர (அரமனைக்)

பொது விருத்தம்-இம்மோடி.

ஐந்தருவனத்தி லர்ச்சுனன்தனைவிட்
டரிவைசித்திராங்கதை யயில்போல் ... *
வந்தரண்மனையிற் புகுந்தவள்பாலு ... *
மறைந்தபின் மதன்கணையாலும் ... * ...
சந்திரனாலும் சகிக்கமாட்டாமற் ... *
றனைவிடுமெழுசெனத்திரேகம் ... *
நைந்துருகிபனாம் இராத்திரிகாலம் ... *
நடந்தசேதிகளையும் உரைப்பாம் ... *

வசனம்.

இவ்விதமாகக் கற்பகவனத்தைவிட்டு தன்தோழிமார்களுடனே சித்திராங்கதை அரண்மனை வந்துசேர்ந்து குரியபவோனும்

அந்தமானம் அனபிஷ்ப விராசக்கினி சகிக்க மாட்டாதவளாய் தேகமெங்கும் மெழுகாயுருகி அவ்விராத்திரி காலமெல்லாந் துயரப்படுகின்ற விதங்காண்க.

சித்திராங்கதை சகிகளுக்குச்சொல் விருத்தம்- ஆகிரிராகம்.

வாழ்மனைக்கென்னைக்கொண்டு வந்ததோழிகளேயிந்த ※
பாழ்மனைதனிற்படுக்கும் பஞ்சணைகயவென்றன் ... ※
ஊழ்வினைப்பயனோவுன்று முறக்கமும்இழக்கவந்த ... ※
தாழ்வினையொழிக்கவந்த தனஞ்செயனெங்கேசொல்வீர் ※

வசனம்.

கேளுங்கள் என்தோழிகளே இந்த பாழ்மனையிற்படுத்துநித்திரைசெய்யும் பஞ்சணை நெருப்புப்போல் என்றேகத்தைச்சுட்டுப்போடுவது நான் பூர்வஞ்செய்தபாவமோ மேலும் அன்னமும் வேண்டியதில்லை நித்திரையும்வரயில்லை இனி யென்னசெய்வேன் இந்தத்துயரத்தைத் தீர்க்க அந்தத் தனஞ்செய னெங்கேயிருக்கிறார் சொல்லுங்களடி பெண்களே.

தாதிகள் நாயகிக்குச்சொல்விருத்தம்.

தனஞ்செயனெங்கேயென் றுநீ தாயேயுந்தனக்குநாளைத்※
தினஞ்செய்வோனுதிக்குமுன்னந் திருமணஞ்செய்துகூட
இனஞ்செய்வண்டியிர்பூங்காவில் இருந்தவர்வரவுங்காண்பாய்
மனஞ்சலியாமல்நித்திரை மலரணைதனிற்கொள்வாயே ...※

வசனம்.

கேளும் அம்மணி அந்த அர்ச்சுனமகாராஜன் நாளையதினம் சூரியஉதயத்திற்கு முன்னே உன்னைத் திருமணஞ்செய்து சேர்ந்து கவனத்தைவிட்டு வருவார் நீவியசனப் படவேண்டாம் அந்த ச்சணையை விட்டு இப்புறம்வந்து இந்தமலரணையிற் சற்றுநேரம் நித்திரைசெய்யும்அம்மாதாயே.

சித்திராங்கதை-மன்மதவேதைப்படுகிற-தரு

இ-ம்-தோடி-தாளம்மட்டயம்.

பல்லவி.

மலரணையிற்படுக்க-வசமல்லவேதோழிமார்களே ※

அநுபல்லவி.

அலர்க்கணையின் - - மேலே-எனை
அமர்த்திநீர் அந - ருலே (மலர)



சரணங்கள்.

பஞ்சணையாகா ... ... தோ-இந்த
படுத்தாலங்கம்வேகா ... தோ
நஞ்சண்டெபன்பதை நமன ... சொல்லு
நம்பலாமோமதன் அம்பல்லவோ இல்லு(மலரணை)

செந்தனற்குழம்பி ... தோ-நீங்கள்
செய்வதெல்லாமெந்த ... குடி
வந்தனைக்குழம்பிதெல்லு ... வாரி
தட்டுநீரென்னைச்சுடுகிறீர் ... மரு (மலரணை)

கைத்தமையஉன்னைத் ... தந்த-எழுந்
காலைவிஜயன் ... ... நந்த
வனத்திற்கேயிட்டணைந்து ... வழைத்து
வாங்களடிநீங்கள் போங்களடி ... ழுயிந்து (மலரணை)

சித்திராங்கதை-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்-இ-ம் முகாரி.

மலரணையென்னவோர்பேர் வைத்ததாதிகளேமாரன் ... ※
அலர்கணைத்தனைப்பரப்பி யதன்மீதிலென்னைவளர்த்தி ※
பலர்களுஞ்சுத்திசுத்திப் பார்த்திருப்பதுவும்போதும் ...※
சிலர்கள்போய்விஜயன்றன்னைச் சீக்ரமாயழைத்துவாரீர் ※

வசனம்.

கேளும் என்தோழிமார்களே புஷ்ப அணையென்ற பேரைமாத்திரம் வைத்து மன்மதனுடைய புஷ்பபாணங்களின் பேரில் என்னைப்படுக்கை நித்திரை செய்யச்சொல்லி நீங்களனைவரும் சுத்திசுத்திப் பார்த்துக்கொண்டிருப்பது போதும் சிலபேர்கள் அந்தநந்தவனத்திற்குப்போய் அர்ச்சுனமகாராஜனை இந்தட்சணம் அழைத்து வாருங்களடிபெண்களே.

தாதிகள்-நாயகிக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அழைத்துவாருங்களென்றால் அர்த்தராத்திரியில்நாங்கள் ※
தழைத்தபூவனத்திற்கேகத் தகுமோதிக்கருகில்இன்றுன் ※
பிழைத்ததுபோதுந்தாயே பெண்களாய்ப்பிறக்குமின்றுன்
இழைத்தநிவினையோவேயோ இனியென்னசெய்வோம்அம்மா

வசனம்.

கேளும் அம்மணி நீங்கள் உத்தரவுசெய்தஇராத்திரிவேளையில் இருண்டகற்பகவனத்திற்கு எங்களைப்போய் அவரையழைத்துவர

ரச்சொல்லத் தகுமோ மேலும் ஒருவருக்கு வழிபடு செய்யத் தகுதிப்பெண்களாய்ப் பிறக்க நாங்களென்ன தீவினை செய்தோ மோ ஐயையோ இனியென்னசெய்வோம் அம்மா.

சித்திராங்கதைசொல்-கந்தார்த்தம் இ-ம்-மத்தியமாவதி.

மன்றலமிருந்தநற்சந்தனமாமலைப்பொதியத் ... *
குன்றிலெழுந்திருந்தென்றல் மேற்கொடுங்கனல்வீசும் *
தென்றலெனுந்தேரேறி யெண்டிசைகளுமதிர ... *
வந்திரல்கொண்டதிவேமதனை (மாரன்) ... *

அதிக்குமால்குமாரன் ... ... *
கொதிக்குங்கோபக்காரன் ... ... *
எதிர்க்கும்மாவீரன்-இந்த ... ... *
பாரினிலெவர்களும் நேரிலையெனவரு ... *
போரினிற்றன்னெதிர் சரியாவாரவன் (மாரன்) *

இதுவுமது.

வாரிகளோரெழுவகையும் பலவாத்தியமென்றும் ... *
பேரிகைபார்ப்பரித்திரிபேய் படிபிறப்படும்பிரயாண ... *
பூரிகைதாரைபுள்ளாங்குழ லாகழுங்கொடியாக் ... *
காரிலையார்தடமாடக்குக்குயில் (காளம்) ... *

வண்டிசைகளும்புபாணம் ... ... *
எண்டிசைமுழங்குமேளம் ... ... *
தண்டுந்தேடையாளம்-மின்னுமண்ட ... *
கோளமுமபர்சக்ரவாளமதிருவரு ... *
கேளொதிருமனெதிர்தாங்கூடாதமேக (காளம்) *

இதுவுமது.

மகாசேனைமகசபதெண்மாருதமென்றும் ... *
இரசேர்பிறைசத்திரங்கள் வெண்குடையெனக்கவிய ... *
பகர்புகன்றிவிடரிகளார்ப்பரிக்காரிருளாம் ... *
புகர்முகக்களிறு புடைநெருங்கிடபடை(பொங்க) ... *

செயமிருதிவங்க ... ... ... *
மயல்கொண்டோர்கலங்க ... ... *
புயல்வண்ணர்தலங்க-வரும் ... ... *
அங்கசன்படையெனும்மங்கையரொடுசேர *
ரங்கபெலங்கள்திலங்கினிலெங்கனும்(பொங்க) *



இதுவுமது.

கரும்பெனும்வில்லைவளைத்தாகரோமதாக ... ... *
அரும்பெனும்நாணேறிட்டுனைத்தொனிசெய்து ... *
அரும்பலர்முல்லைபோடைங்கணைபூட்டிபரிச்சலை ... *
விருப்புமெய்நன்மேல்வீசும்அம்புகளென்றும்(வேகம்) *

திடுக்கிடுதென்றுகம் ... ... ... *
நடுக்கிடுதென்தேகம் ... ... *
தொடுக்கிறான்போகம்-மயில் ... ... *
சேரமாகஆவேசமன்மையரிகள் ... *
தோகையென்மீதிவில்லாரவைமன்மதன்விடு.(வேகந்)*

இதுவும்-சித்திராங்கதைசொல் சிசயத்தியம்-இ-ம்-புன்னாகவராளி.

தகிகளேயென்மீதில்பகைகொண்டுமன்மதன் *
சாடுறான்முல்லைபாநறலைபினக்க ... *
விதிரமாக்கரும்புவிற் பிடித்தசோகக்கனை ... *
விடுகிறான்கள்றன்றனர்விழுதெறிக்க ... *
தொகையிலாஅரவிந்தமுகைவெனும்பூங்கனை *
தொடுக்கிறான்பெண்மைதிரிக்கிட்டலற ... *
மதிலத்தலில்சோதைமாம்பூவெனும்பாணம் *
வாங்கிறான்கொங்கைமேற்றுங்கியுருக ... *
நிதம்பத்தின்மேல்விட்டநீலபாணம் ... *
அதம்பண்ணுதேயெவனேனிதக்குலைய ... *
தடம்பமுல்லைகண்ணினிப்பூங்கனைதனையும் ... *
மதமுற்றபாவிமன்மதனாவலவேன் ... *

இதுவும்-சித்திராங்கதைசொல்-அகவல்-இ-ம்-முகாரி.

மன்மதாநிறுநி மானமகனைகயால் ... *
உன்மதாமதமெத்த வுண்டடா துஷ்டா ... *
என்மீதினிற்பகை யேதடாபொல்லாதீ ... *
துன்மதியெனமுன் அட்டபுத்தியினுள் ... ... *
கன்னல்வில்லினிற்பூங் கணைகளைப்பூட்டி ... *
மின்னல்கள்சேனைமிகும் மேகம்போற்சின்ன *
பின்னலாய்ச்சரமாரி பெய்ததுபோலும் ... *
இன்னல்செய்பாணங்கள் இனிமேலாகிலும்நீ *
எடுக்கவேண்டாமடா எனையில்மேற்றனம் ... *
தொடுக்கவேண்டாம்பெண்தோஷிக்குதென்பி *
படுக்கும்பாயலில்நின் பாணம்போற்றுக *
அடுக்குமோஅடாவுன் றன்மைகளிப்ப *
கன்னுதல்மூர்த்திதன் கால்விழிபாலும் ... *

மண்ணிலிவெரிந்தநீ மாண்டதுமெய்யென் *
றெண்ணியிருந்தேன் சந்திரமைமாரன் ... *
பண்ணினபாவந்தின் பாவியாயிரு ... *
உன்றனை யெழுப்பி உளவுகள்சொல்லி ... *
என்றனைக்கொல்ல ஏவினன்பாவி ... *
மன்றல்சேர்பொதிய மாமலையிருக்கும் ... *
தென்றற்றேரதனைச் செலவருந்த ... *
பாவியம்பிளிகைப் பூனைகள்விழுங்க ... *
இரவியால்மதனி பிருங்கருமொருங்க ... *
பாவியந்தோரம் பலமெனும் அம்பும் ... *
அரவிந்தபாணமும் அசோகபுங்கனையும் *
முல்லையுங்குசுமும் முகைக்கரிந்துலர ... *
செவ்வல்லிமலைப்பூக் கருவாவிவந்த ... *
வில்லெனுங்கரும்பை வெடிக்கெனவொடித்து *
பல்லுடனாரிதிந்து பரிவிளையிய ... *
கொடியெனுங்காம் குளத்தினிலொளிக்க ... *
கடிமுரசமாயுங் கடலொலிபுறங்கப் ... *
படிமிசைநீவாக் பதிபொழிலாப்பூஞ் ... *
செடிவளர்த்திடவுஞ் சேதமுமாற ... *
திக்கெல்வெண்குடையுந் தெரிந்துதேய்ந்தழிய ... *
பெண்களைனும்படை பின்னைகள்பெற்று *
மக்களாகராம மனையிலில்லாமுத் ... *
சக்கரபாகமாய் கண்டதெப்போதடா *
பாவியையிலிப்பட்ட பாணமவிட்டெடுத்தன் *
ஆவியைவாங்காதே யப்புறம்போடா ... *

சித்திராங்கதைசொல்-கலி-இராகம்-நாட்டை.

ஆரடிபெண்களேயனைவரும் அனங்கனுக்குளவாய்ப் *
போரிடவேவனைப் புகழ்ந்திருக்கிறீர்நீங்கள் ... *
வீரிடவாளிருல் வீதியேயென்றனைக்கண்டால் ... *
ஓரடியாய்நத் துக்கிலொக்கச்சொல்லுவேனே ... *

வசனம்.

ஆரடியடி தாதிப்பெண்களே நீங்களனைவரும் மன்மதனுக் குளவாயிருந்து அவன் பெரும் படையைப்போல வெனைப்புடைசூழ்ந்து போர்செய்யத்துணிந்திருக்கலாமா நல்லதாகட்டும் உங்களை வாளினாலே வெட்டி வதையாக வதைத்துக் கொல்லுவேனேடீ பாருங்களடி வென்னாட்டிகளே.



தாதிகள்சொல்-விருத்தம்.

பனிமலரணையில்மீது படுத்துநித்திரைசெய்யாமல் *
முனிவுகொண்டெங்கள்பேரில் மோதியிங்கடிக்கவந்தால் *
இனியென்னசெய்குவோம்நல் லெழிலிலாமலையிலுறைந்த *
தனியாண்மனைக்குப்போவோம் தயவேநீயெழுந்துவாராய்

வசனம்.

கேளும் அம்மணி குளிர்ச்சி பொருந்திய புட்பவணையின் மேலிலும் படுத்து நித்திரைசெய்யாமல் எங்கள்பேரில் அதிககோபங்கொண்டடிக்கவந்தால் நாங்க ளென்னசெய்வோம் மிகுந்தசிறம் பாவிய சந்திரகாந்தக்கல்லினால் கட்டியிருக்கிற அரமனைக்குப்போய்ச் சற்றுநேரம் யிருந்துபார்ப்போம் மெள்ளவெழுந்துவாரும் அம்மணி.

சித்திராங்கதைசொல்-விருத்தம்-இராகம்-ஆஹிரி.

இந்துகாந்தக்கொன்றில் லிரவிமாமணியாற்றேகம் ... *
வெந்துகாந்தமனைக்கேன் மேவினேன்மலர்வனத்தில் .. *
வந்துகாந்தருவமென்னும் மணஞ்செய்துமருவியமால் *
நந்தவார்த்தையழுத்தித் தட்சணம்வருகுவீரே ... *

வசனம்.

கேளுங்களடி பெண்களே குளிர்ச்சிபொருந்திய சந்திரகாந்தமேடையென்றுசொன்ன உங்கள் வார்த்தையைநம்பி யதிக நிட்சணங்களை ஜொலிக்கும்சூரியகாந்த மெத்தையின் பேரில் வந்த மாத்திரத்தில் என்றுதேகம் எரியவெந்து காய்ந்து மரிக்கப்போகுதே அந்த அர்ச்சுனமகாராஜனை இத்தட்சணம் அழைத்து வந்திர்கவாரல். என்னுயிர் பிழைக்குமடி பெண்களே

இதுவும் சித்திராங்கதைசொல்-தரு-இராகம்-கலியாணி- திரிபுடைதா

பல்லவி.

மதியுமிப்படிகாய்வதென்னமோ ... மாயம்-பாவி
மதன்செய்யுமசிந்தினுமென்ன சாயம் (மதி)

அநுபல்லவி

பொதியவெற்பெனும்சர்ப்பவுயிர் ... பகை
போலேமோதுதலெயேலேயது ... கை (மதி)

சரணங்கள்.

காதியர்இதற்குத்தருமாலோசனை ... செய்யுங்கள்-நல்ல
தங்கப்படிமச்சுமாதவாசலில் ... வையுங்கள்-இந்த

சேதியறியாமல்வந்து ... புகுந்தவென்
னடிகளைப்பிடித்துப் பங்கஞ்செய்புங்கவன் (மதி)

கடல்வடவனலுடன்பிறந்தமை ... வெற்றி-நாகம்
கண்ணுதலினைவம்பண்ணவிருவித்தக் காந்தி-மேனும்
விடவரவதின்வாயினி ... ... இறைந்த
வெண்கலையோடாயிருந்தலை .... நிறைந்த (மதி)

அம்புலியென்றினி நம்பவொண்ணுதிலை மெய்யே வரும்
ஆயிரங்கதிரோன்காயுமெனவென்பதும்பொய்யே-சொல்லும்
வெம்புலியிதல்லால் வேறெங்கே ... புண்டு
வெங்கதிரோனுடன்தங்குமெனல் ... கொண்டு (மதி)

சித்திராங்கதைசொல்-கீர்த்தனம்-இ-ம்-மோகனம்.

எங்கள்தமிழ்க்குன்றிலே பொங்குமிளந்தென்றலே ... *
எங்கிருந்துமோதுவாய் என்றன்மேலே ... *
எங்கள்பூம்பொழிலிலே தங்குமாங்குயில்களே *
எங்கூவுகிறீர்களோ எமனைப்போலே ... *
எண்ணுழிபத்தோழிப் பெண்களேநீங்களே ... *
எதிரியானீர்களென் மதியிலே ... *
எங்கள்குலமென்னும் வெண்டிங்களேயிப்படி ... *
எங்காய்த்தருதியுவென்றனுடலை ... *
நாற்றிசையினின்றருட்டத்தைபண்டு ... *
சேர்த்திருந்தோரிபெனவேஞ்சியுண்டு *
பாத்திப்பனேக்காவடாபாவிபற்ற ... *
காத்திகையைச்சேர்த்த ... *
கடுங்கனலைக்கொண்டுகாயாதே ... *
வெம்புலியைப்போல்பாயாதே ... *
அம்புலியேநீமாயாதே ... ... *
பெண்பாவங்கொண்டுதேயாதே ... *

சந்திரதூஷணை-அகவல் இ-ம் நாட்டை.

சந்திரநீயென்றன்மேற் றணலெனக்காயும் ... *
உன்றிரணிபாலுன உதிக்குமுன்றனே ... *
அப்புறமுன்கதிர் அழிந்தொளிமழுங்கி ... *
கொப்பெனநாட்குநாள் குறைந்துபோகாதோ *
குறைந்தானும்நீநல்ல குளிர்மதிமுகிலின் *
மறைந்தானுமுன்றனல் மாறுதல்கண்டாய் ... *
சங்கரனுன்றழல் சகிக்கமாட்டாமல் ... *
கங்கையைச்சடையினிற் கலந்தல்லோதரித்தார் ... *



சூரியனுனைமெத்த துயிடவென்றறிந்து ... *
பாரிபதினைகம் பண்ணமல்விட்டான் ... *
குருவின்பெண்சாதியை கூச்சமில்லாமல் ... *
மருவினபாவிநீமகிழ்வுடன்பெற்ற ... *
மைந்தனுக்கையோ மதித்துவெங்கதிரோன் ... *
சுந்தரத்தேர்பரி சாரதியானுன் ... *
அரவுனைவிழுங்கி யாற்றமாட்டாமல் ... *
விரவுடனுமிழ்ந்து விட்டதேமுன்னாள் ... *
தேவர்கள்கடைந்த திரைகடலமுதை ... *
பாவருமுன்வழினை அகற்றிவிட்டனரே ... *
இருபதினெழுபெண் டெனும் அவரவரை *
வருபதினிசவடி மனையில்விட்டவன்றுப் ... *
இன்னிலமெங்கும் எழில்பெருமங்கம் ... *
கன்னிரோகனியாற் வளக்குமமாறும் ... *
சொல்லுதின்வெருப்பால் குளிர்ந்தகாந்தத் *
சங்கும்பெருந்தரும் கைத்குழம்பாறுல் ... *
என்றனைக்காயா திருப்பாயோபாவி ... *
உன்றனைநம்பவு மொண்ணுதேபோடா ... *

சித்திராங்கதைசொல்-சந்தவிருத்தம்.

மதியுமிளந்தென்றலும் வாரிதியுங்கூவு ... *
மாங்குயிலும்பூங்கிளியும் மதனும்வண்டும் *
அதியுயிருக்குயிரமென் றோழிமாரும் ... *
ஆயிரமும்பயில்வாழுத் அலங்கவாழும் ... *
பதியுமலர்ப்பாயலும் பஞ்சணையுமென்மேல் *
பகைவென்றுவிழிமழைக்கும்வகைவெல்வீங்கள் *
சதிருதிக்குமுன்விஜயன் றனையெங்கணாறி *
கட்டிவீர்மலரணையிற்கூட்டுவீரே ... *

வசனம்.

சந்திரன் - தென்றல் - சமுத்திரம் - குயில் - கிளி - மன்மதன் - வண்டுகள் - தோழிகள் - இராத்திரிகாலம் - அரமனை - புஷ்பஅணை - பஞ்சணை - இத்தனையும் என்மேற் பகையாகுல் இவ்விரகாக்கினையை நானெப்படி சகிப்பேன் இனியென்னுயிர் பிழைக்கும்படியாய் அந்த அர்ச்சுனமகாராஜனை அழைத்துவந்து பஞ்சியணையிற்கூட்டி வையுங்களடி பெண்களே.

தாதிகள் நாயகிக்குச்சொல்-விருத்தம்.

அன்னையேநாங்களிப்போ வதற்குருவனத்திற்கேகி *
தன்னயமாகவிங்கே நடந்தசேதியையுரைத்து ... *

மன்னிபவிடையனென்றும் மகாராஜன்றன்னையின்று ... ...*
கன்னிபெயுன்றன்கண்ணிற் காட்டுவோயிருந்திடாயே ...*

வசனம்.

கேளும் அம்மணி நாங்கள் அப்படியே கற்பக வனத்திற்குப்போய் அந்த அர்ச்சுனமகாராஜனை அழைத்துக்கொண்டுவந்து உனது கண்ணிற்காண்பிக்கிறோம் சற்றுநேரம் நித்திரை செய்யும் அம்மாதாயே.

பொது-விருத்தம் இ-ம்-தோடி.

வாய்மொழிதடுத்தால்மோசம் வருமெனவளர்த்தெடுத்த *
தாய்மனதெண்ணியின்ற தந்தையேயுமாக்கச்செய்தாள் *
தூய்மலரமளியின்மேல் துடிப்பவன்வவளென்றே *
காய்மதிகடற்புகுந்தான் கதிரவன்தானெழுந்தான் *

வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனமகாராஜனை அழைத்துவரச்சொன்ன சித்திராங்கதை வார்த்தையைத் தடுத்தால் மோசம்வருமென்று அவளை வளர்த்தெடுத்த தாய்மார்கள் பாண்டியமகாராஜனுடனே இந்தச் சேதியைச்சொல்வோமென்று அவர்கள்போனபின்பு இனி நாம் காய்ந்தோமானால் இவள் கெட்டுபோவாளென்று சந்திரன் அஸ்தமனமானான் சூரியபகவான் உதயமானான் மேல்நடந்தது காண்க.

தாதிகள்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

ஐயனேபோற்றி மலர்வனத்திற்காதி ... *
அந்தணன்போல்வந்திருந்த அர்ச்சுனன்றன் *
மெய்யழகைக்கண்டு சித்திராங்கதையுஞ்சோர்ந்து *
மேதினியில் மூர்ச்சையிறுவிழுந்து மிக்க *
மையல்கொண்டேகர்தருவ மனைத்தாற்கூடி ... *
மனைசேர்ந்துமதியாதும் மாரனாலும் ... *
தையல்மெழுகெனத்திரேக முருகியின்னந் ... *
தவிக்கின்றாள் அய்யாமனுபவிக்கின்றாளே *

வசனம்.

சரணஞ் சரணம் மகாராஜ ராஜபரமேஸ்வரா நமதுநந்தவனத்தில் காசிபாத்திரைப்பிராமண சந்நியாசியைப்போல் இருந்தவன் அர்ச்சுனமகாராஜனென்று தன்சுருபங்காண்பித்த படியினாலே நமது சித்திராங்கதையம்மாள் அவர்பேரில் அதிகமையல்கொண்டுமருவி அனைந்து மனைவந்துசேர்ந்தமுதல் இதுவரைக்கும்



சந்திரனாலும் மன்மதனாலும் தேகமெழுகாய் உருகிப்போனாளையா சுவாமி

பாண்டியன்-தாதிகளுக்குச்சொல்-விருத்தம்.

தோழிகள்நீங்கள்வந்து சொன்னநன்மொழியாலின்றே ... *
ஆழிசூழுலகமெல்லாம் அரசாளுமகனும்நல்ல ... *
வாழ்வுஞ்சம்பத்துமுத்தி மார்க்கமுமடைந்தும்பெற்றேன் *
தாழ்வொன்றுமில்லைதான்போய்த்தனுசெயன்றனைக்காண்
[பேனே

வசனம்.

கேளுங்கள் தோழிப்பெண்களே நீங்கள் சொன்ன வசனத்தோதிவார்த்தையால் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகமெங்கும் அரசாளும்பிள்ளையும் மிகுந்தவாழ்வும் சம்பத்தும் சாயுச்சியபதவிக்குவழியும் மனமகிழ்ச்சியும் அஷ்டஐசுவரியமும் இப்போபெற்றேன் இனியொருதாழ்விலில்லை அந்த அர்ச்சுனமகாராஜனைநானே போய்க்கண்டழைத்துக்கொண்டு வருகிறேனடிபெண்களே.

இதுவும்-பாண்டியன்-மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்.

அமைச்சரேகேளீர்முன்னே ராலோசனைக்காய்நீங்கள் - ... [ம்
சமைச்சமைந்திடும்போதல்லோ தோற்றுமென்றுரைத்தீர்தெய்வ
அமைச்சதந்தப்படிக்கே யர்ச்சுனன்றன்னைக்காண - ... *
இமைப்பொழுதினிற்பூங்காவுக் கேகுவோம்வருகுவீரே... - *

வசனம்.

கேளுங்கடா எம்மந்திரிகளே சித்திராங்கதை பூலோகமுழுதும் நானே யரசாளுகிறேனென்று சொன்னதற்குச் சமைசமைந்ததல்லவோதெரியுமென்று நீங்கள் சொன்ன ஆலோசனைப்படிக்கு தெய்வம் அர்ச்சுனமகாராஜனைக் கொண்டுவந்தமைச்சதுஇனிநாம்சும்மாயிருக்கப்போகாது கற்பகவனத்திற்குப்போய் அவனைக் கண்டு அழைத்துக்கொண்டுவருவோம் வாருங்கள்மந்திரிகளே.

மந்திரிகள்-ராஜனுக்குச்சொல்-கலி.

அப்பனேபோற்றி அர்ச்சுனன்றன்னை ... ... *
கொப்பெனக்கண்டு கொள்ளுவோம்வாரீர் ... *

வசனம்.

கேளும்இராசபரமேஸ்வரா அந்த அர்ச்சுனமகாராஜனைசீக்கிரமாகப்போய்க் காணலாம்வாருங்சுவாமி.

இதுவும்-மந்திரிகள்சொல்-கவி,

அரசனேபோற்றி அம்புவியாளும் ... ... *
அகாசிரோன்மணியே அணையடிபோற்றி ... *
வினாச்செறிவனத்தில் விஜயனைக்கண்டு ... *
வரிசையாயழைத்து வருகுவோம்வாரீர் - *

வசனம்.

சாணம்சாணம் மகாராஜராஜபரமேஸ்வரா சாணம் மிகுந்த வாசனைபொருந்திய கற்பகவனத்திலிருக்கும் அர்ச்சுனமகாராஜனைக்கண்டழைத்துக்கொண்டு வருவோம்வாரும்சுவாமி,

இராஜன்சொல்-தரு-இ-ம் ஆரபி-அடதாளம்.

பல்லவி.

வாருங்கள்மந்திரி யினங்களே-இன்னம் ... *
மணவாயில்வாழ்பத்துசெனங்களே - ... *

அநுபல்லவி.

சேருங்களிப்புடன் ... சேனைமந்திரிகள்விட்டு
தீர்த்தயாத்திரைசெய்ய-பார்த்திபன்பின்புறப்பட்டு (வாரு)

சரணங்கள்-

சாதிப்பிராமணனெனக் கண்டவர்மகிழ் ... ந்தவ
கற்பகவனத்தில்வந்து பொற்பினில்மன்மதன் ... தான
மாநிலாக்குருகுலமன்னவன்போற் - ... ரேனை
மங்கைசித்திராங்கதையை மருவினவனைக் காண(வாருங்க)

பஞ்சவரிலொருவன் பார்த்திபன்அவன் ... பெரும்
பரமன்பொற்பதந்துதி வரம்பெற்றவனைப் பாரும்
மஞ்செனுங்குழற்குந்த மாதேவிதாயா - ... ரும்
மகபதிதனக்கோர் மகனிவனேயோ ... ரும்(வாருங்க)

புத்திரவாஞ்சைபெண்ணும் புணர்ந்தி ... டைந்து
புலம்பும்பாவியென்றன் சஞ்சலம்போகவும் கடந்து
சித்திராங்கதைக்குத் தனஞ்செயனுக்குமே தொடர்ந்து
சபதினமதனிலேபெருமணஞ்செய்குவோம் நடந்து(வாருங்)

பொதுவிருத்தம்.

மனமகிழ்ந்திவ்வாறனைக்கும் மன்னன்றன்றா *
மாதுசித்திராங்கதையுடனே மருவுவந்த ... *
தனஞ்செயனைவிசயனைப்பூம்பொழிலிற்றுறந்து ... *
தன்னிருக்குமிடமதுதனிலவாடி - ... *
தனமபல்கொண்டுசெழுந்துபகாலத் - ... *
துடன்கழித்துப்பாண்டியனைக் காண்போமென்று *



எனமனதிலெண்ணிபெதிர்வந்தோன்றன்கு ... *
மினந்தந்தான்ரத்தினசிம்மாசனந்தந்தானே ... *

வசனம்.

இவ்விதமாக மனமகிழ்ச்சிகொண்டு நந்தவனத்திற்றுப்போக மந்திரிகளை அழைக்கும் பாண்டியமகாராஜன் புத்திரியாகிய சித்திராங்கதையைக்கண்டு அதிமையக்கங்கொண்ட அர்ச்சுனமகாராசனும் அன்றயதினம் இராத்திரிகாலமுழுதும் மன்மதவேதனையால் நித்திரையில்லாமல் ஒருக்ஷணமாய் அபரமனுபவித்துக்கொண்டு இருந்து சூரியஉதயகாலம் ஆனவுடனே சந்தியாவந்தனம் தேமதிபிட அனுஷ்டான முதலானவைகளும் முடித்து இன்றையதினம் பாண்டியமகாராஜனைப்பார்க்கக் காண்போமென் றெதிரேவருகிற அர்ச்சுனமகாராசனைக்கண் டதிசந்தோஷப்பட்டு பசத்தோடேபசம் அணைத்துக்கொண்டு இருக்க தன்ரத்தின சிம்மாசனத்தையும் கொடுத்தான் மேல்நடந்ததுகாண்க.

பாண்டியன்சொல்-விருத்தம்.

வேதியனெனவிருந்த விஜயனேவாரும்க்ஷத்திரிய ... *
சாதியிலெழுந்திருந்த தனஞ்செயாவாரும்யாத்திரை ... *
பாதியில்வந்துவந்த பார்த்திபவாருமென்றன் ... *
சுதினம்விளங்கவந்த அர்ச்சுனாவாரும்வாரும் ... ... *

வசனம்,

பிராமண வேஷங்கொண்டிருந்த வில்விஜயனேவாரும் மேலும் இராஜகுலங்களில் அழகில்மிகுந்த தனஞ்செயனே வாரும் தீர்த்தயாத்திரை நடுவில் மதுரைக்குவந்த பார்த்திபவாரும் என்றன்செங்கோலாதினம் விளங்க எம்மகளைத் திருமணஞ்செய்ய வந்த அர்ச்சுனமகாராஜனே வாரும் இந்த சிம்மாசனத்தில் உட்காரும்.

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

மன்னர்கள்மன்னராயிம் மாநிலமெங்குங்கீர்த்தி - - *
தின்னரிதன்னில்வந்து நீடுநாளிருந்தசந்த- - - *
அன்னமும்பெறுங்கவிந்த வைந்தருவனத்திலுனை - - *
இன்னமுமிதைவிட்டேகா திருக்கவேசொல்லுதையா - - *

வசனம்.

கேளும் மகாராஜராஜபரமேஸ்வராய்விளங்காநின்றபாண்டியமகாராஜனே நான்பூலோகமுழுதும் தீர்த்தயாத்திரைசெய்து மதுராபட்டணத்திற்றுவந்து நெடுநாளாயிருந்தும் நீர்கொடுத்த சாமக்கிரிகைகளை மைத்துண்டு நித்தியம் செய்ய குறுகிய நியம

க்கொடுக்கும் கற்பகவனத்தின் ஆசைஇல்லைமும்இதைவிட்டப்புற
ம்போகாதிருக்கச் சொல்லுதே ஆதலால் சில பிராமணர்களும்நா
னும் இருவருக்கும் இவ்விடத்தி லிருந்தனம் பாண்டிய மகார
ஜனே.

பாண்டியன்-அர்ச்சுனனுக்குச் சொல்-விருத்தம்.

இருக்கவெமென்றசொல்லை எனதுயிர்செய்தபாக்கியம்... *
மருத்தேனுமொழியாளென்றன் மகளைநீர்மகிழ்ந்து கூடி *
பெருந்தவமெய்யைப்பெற்றப் பிள்ளையைச்சிகாரமாக... *
அருந்தனநீரெயிந்தத் தானியையாளித்திடுமே - - - -*

வசனம்

கேளும் அர்ச்சுனமகாராஜனே நீரிதுவரைக்கும் இங்கிருந்த
து நான்செய்தபாக்கியம் இனிமேல்குமாரத்தியாகிய சித்திராங்க
தையை விவாகம்பண்ணிக்கொண்டு அவள்வயிற்றிலேபிறந்த பிள்
ளையைஇந்த மதுரைப்பட்டணம் இளவரசாகும்படியாய் எனக்
குபுத்திரசிகாரம் அளித்திடவேணும் அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்,

அளித்திடுமென்றசொன்ன அரசனேயுமதுசிந்தை - - -*
களித்திடும்படிநானுன்றன் கன்னியைமணந்துதீர்ந்தேன் *
அளித்திடுமொழியாள்பெற்ற சுதனைநீர்மஞ்சநீராய்- - *
குளித்திடுஞ்சிகாரமென்றே கொடுத்தனன்மன்னர்கோவே*

வசனம்.

கேளும்பாண்டியமகாராஜனே அப்படியேயுமது மனமகி
ழ்ச்சியடையும்படியாய் உன்குமாரத்தியை நான்விவாகம்பண்ணி
க்கொண்டு அவள்வயிற்றிற்பிறந்தபிள்ளையை இந்தமதுரை இளவர
சாகும்படியாய் உமக்குப் புத்திரசிகாரம் இன்றையத்தின
மேகொடுத்தேன் இனிவிசனப்படவேண்டாம் மகாராஜனே.

பாண்டியன் மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்.

மனுவிக்கியானங்கள்தேர்ந்தமந்திரிகாள்நமதுபுண்ணியத்
தனுவிஜயனையுமக்கையில் தந்தனனென்றன்புத்திரி - - -*
எதுக்குஞ்சித்திராங்கதையைமாலையிடுவதற்குவல்லின்மன்னர் - *
அதுவருமறியஇங்கே அதிர்முரசறையச்செய்வீர் - - *

வசனம்.

கேளுங்கள் என்மந்திரிமார்களே நாம்செய்த புண்ணியத்தி
னாலே இந்த அர்ச்சுனமகாராஜனுக்கும் சித்திராங்கதைக்கும் திரு



கலியாணமென்று இந்தத்தேசமெங்கும் அறிய பேரிகைஅடிக்கச்
சொல்லுங்கள் மந்திரிமார்களே,

மந்திரிகள்-கட்டியனுக்குச்சொல்-கவி.

அடிபரவிபலக நடிகொள்கட்டியனே- - - *
படியாசர்கள்வர கடிமுரசறைவீர்- - - - *

வசனம்,

ஆரடா வாசற்கட்டியக்காரனே நமதாண்டவனுக்காரப்படிக்
குத் திருக்கலியாணமென்று சகலமெங்கும் அறியும்படியாய்
ப் பேரிகைஅடிக்கச்சொல்லும்பிள்ளாய்,

கட்டியன்சொல் கவி,

காரிகைசித்திராங் கதைகலியாணப் - - -*
பேரிகையறையும் பேசொலிகேட்டு - - - *
வாரிகளுழிய வையகத்தரசர் ... - - - *
சாரியாயித்த கணைவருவீரே- - - *

பொது-விருத்தம்,

கன்னிசித்திராங்கதைக்கும் காளையர்ச்சுனன்றனக்கும் ... *
இன்னிலத்தவிற்கல்யாணம் இசைத்துபேரிகையினோசை - *
சென்னியென்றனைக்குஞ்சோழன் சேரனோடேமென்றேசை
யன்னருந்தெவியிற்கேட்டு மதுரைக்குவருகின்றார் ... *

வசனம்.

இவ்விதமாக சித்திராங்கதைக்கும் அர்ச்சுனமகாராஜனுக்கும்
திருக்கலியாணமென்று அறையும்பேரிகைசப்தம் ஐம்பத்தாறுதே
சத்துராஜாக்களும் காதிற்கேட்டு மதுராபுரிபட்டணத்திற்கு வரு
கின்ற விதங்காண்க,

இராஜாக்களெல்லாரும்-பாண்டியதேசத்துக்கு வருகிற-தரு.

இராகம்-சங்கராபரணம்-அடதாளம்,

பல்லவி,

சோழனுஞ்சேரனும்பாரிலெல்லோரும் ... ... *
தேசாதிபர்களும்வந்தார் இன்னமதுர-ராஜாதிபதிகள்வந்தார் *

அநுபல்லவி,

மாரனுமிரதியும் தேரில்லாமல் ... நான
மணஞ்செய்சித்திராங்கதையைதனக்கு செபனுடன்கான
மண்டலத்தனில் பண்டருந் ... ... தமிழ்
கொண்டரும்வயர் அண்டரும் ... ஏமம்

புண்டரீகனும் விண்டுவும் ... ... கறைக்
கண்டனும்மகிழ் கொண்டமதுரை ... யிற்(சேர)

சரணங்கள்,

சிகரபொன்முடிகளும் மகரகுண்டலங்க ... ளும்
தினகரனென ... ... - ... வதிக்க-நல்ல
தென்சந்திரன்போல் மீதலமெங்கணும் ... *
திகழ்வெண்குடைகள் ... ... பதிக்க
பகர்நவமணிதகதகெனும்புயகீர்த்திகள் ... - *
பகலெங்கும்விலை ... - - - -மதிக்க தமிழ்
பாவலர்செயங்கூற வலமெச்சரிக்கைப் ... *
பண்ணையவர்கள் - - ... அதிக்க-இன்னம்
புகர்முகவேழங்கள் புரவிகள்தேர்க ... ளும்
புடைசூழ்ந்துவருகின்ற படைமந்திரிமார்க ... -ளும்
நிகரில்லதில்மதுரை நகர்முகதூர்க - - ளும்
நிறைந்தவகெங்கணும் பார்த்தவோர்க - ளும்
நீடுகடலெனபொங்கபே - - ரிகை
யோடுபேடாமுழங்கது - - - ரிகை
சாமுக்கிடுகுடமாரமு - - - வகை
நமுக்கிமிதெடல்நதிரகா - - - ரிகை
நிர்த்தஞ்செய்திமெத்தளத் - - -தொனி
மெத்தமுழங்கவும் இத்தலத் - தனில் (சேர)

பாண்டியன்-வந்தராஜர்களுக்குச்சொல் விருத்தம்,

முரசறைந்ததினால்இன்றே முகூர்த்தமென்றறிந்துவந்த - *
அரசரேவாரீர்நீங்க ளனைவரும்மதுரைத்தேடி ... *
வாசிதியேன்முன்செய்த மாதவப்பயன்றான்கண்டீர் ... *
வரிசையாய்ச்சிம்மாசனத்தில் மகிழ்ந்திருந்தருளுவீரே - *

வசனம்,

வாருஞ்சேரமகாராசனே சோழமகாராசனே, ஐம்பத்தாறு தேசாதிபதிகளே வாருங்கள் நீங்களனைவரும் இந்த ஏழைகலியா ணநிமித்தம் மதுராபுரிபட்டணத்திற்குவந்தது நான் முன்செய் தபாக்கியம் அவரவர் அலங்காரஆசனத்தி லெழுந்தருளுங்கள் மண்டலாதிபதிகளே இருந்தருள்வீர்கள்.

இராஜாதிபதிகள்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

இருந்தருள்வீர்களென்றும் ஏழையேனென்றும்செய் - *
அருந்தவப்பயனால்நீங்க ளனைவரும்வந்தீரென்றும் ... *



வருந்தவும்வேண்டாமிந்த மதுரையாம்சொக்கநாதர் ... *
திருத்தரிசனம்போலுன்றன் றன்புருக்காணவந்தோம் - *

வசனம்.

கேளும்பாண்டியமகாராஜனே இந்த ஆசனத்திலிருந்தருள் வீர்களென்றும் ஏழையேன்செய்ததவப்பயனால் நீங்களனைவரும்வ ந்தீர்களென்றும் நீர்மெத்தவும் எங்களைபுகழவும்வேண்டா ம் இந்த மதுரைசொக்கநாதசுவாமியார் தரிசனம்போல் உம்முடை ய உமது திருருபதரிசனம்காணக் கிடைத்தது எங்கள்பாக்கியந் தான்மகாராஜனே

பாண்டியன்சொல்-விருத்தம்,

மகாராஜனென்றுசொன்ன மன்னரே கேளீரிந்த - ... *
செகராஜர்தம்பிறந்தோர் கேளிலாப்பாவியாயின் - - *
நகராளப்பெண்ணைபெற்று நங்கைமூன்றிருக்குமென்னை - *
திகராருமில்லையென்று நீங்கள்கொண்டாடலாமா - - - *

வசனம்.

கேளுங்கள் என்னைமகாராஜனென்று புகழும் மண்டலாதிப திகளே இந்தபூலோகம் அரசாளும்பிள்ளையில்லாத பாவியாய் நா னொரு பெண்ணைமாத்திரம் பெற்றிருந்தே மிகவும் மனதாகுலங் கொண் டிருப்பதுங்கண்டு உமக்குறிதாமென்று நீங்கள்கொண் டாடத்தகுமோ மன்னர்களே.

இராஜாதிபதிகள்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்,

தருமமோவென்றுரைத்தவேட்டியன் நாரணிபார்புரந்த - - *
இருமானதரதுன்மர்க்க விசத்திருந்தியிற்றென்ன - - *
வசயமானதேடிப்பெண்ணை மணஞ்செய்துகொடுக்கப்போ
தோமெயாகவங்களுக்குச் சொல்லுவீர்அரசர்கோவே [வீர்

வசனம்.

கேளும் வேப்பமாலையணிந்த பாண்டியமகாராஜனே உம திருப்பில் இந்தவயசையாளும் பிள்ளையில்லையென்கிற மனதா லெப்படி நிச்சிப்பாயோ மேலும் அந்தகன்னிகையானவளை தேடி அந்தப்பெண்ணை ஒருவருக்கு விவாகம்பண்ணிக் கொடுத் தீர் அதனையெங்களுக்குந்தெரிய அருளிச்செய்யும்மகாராஜனே,

பாண்டியன்-இராஜாதிபதிகளுக்குச்சொல்-விருத்தம்,

சேரனேசோழனேயென் றுலகயின்மன்னவரேகேளீர் - *
பாரின்மீதிலேசயனுக்கும் மக்களெத்திராங்கதைக்கும் - *

பாரினிற்றிருக்கல்யாணம் பண்ணவும்அவர்கள்தந்த- - *
பேரனைச்சிங்காரமாநான் பெற்றிடவெண்ணினேனே... - *

வசனம்,

கேளும் சேரமகாராஜனே சோழமகாராஜனே ஐம்பத்தாறுதேசாதிபதிகளே கேளுங்கள் அழகில் மன்மதனுக்கு நிகராகிய அர்ச்சுனமகாராஜனுக்கு என்பெண்ணைவிவாகம்பண்ணிக்கொடுத்து அவள்வயற்றிற்பிறந்தபிள்ளை யெனக்குப்பேரனுகையால் அவனைப்புத்திரசிங்காரம்பெற்று இளவரசபட்டங்கட்டிவைக்கலாமென்றெண்ணங்கொண்டிருக்கிறேன்மன்னர்களே,

இராஜாதிபதிகள்-பாண்டியனுக்குச்சொல் விருத்தம்,

எண்ணினவெண்ணம்நன்றே யிதைவிடவேறொன்றில்லை - *
பெண்ணின்மைந்தனைச்சிங்காரம் பெற்றரசாளச்செய்வோர்
மண்ணிலனந்தமுண்டும் மகனுக்கும்விசையனுக்கும் *
கண்ணின்முன்மணஞ்செய்வித்துக் கடிநகர்க்கேகுவோமே

வசனம்,

கேளும்பாண்டியமகாராஜனே ஆ ஆ நல்லஆலோசனைப்பண்ணினீர் பிள்ளையில்லாமற்போனால் பெண்ணின்வயற்றிற் பிறந்தபிள்ளையைச்சிங்காரம்பெறுவது இந்தபூலோகத்தில் அனேகமுண்டு அதற்கொருதீங்கில்லை இனிநடக்கவேண்டியகாரியம்நமது கண்ணின்முன் இருவருக்குந்திருக்கலியாணஞ்செய்து முடிக்கவேணும்பாண்டியமகாராஜனே,

பாண்டியன்-மந்திரிகளுக்குச்சொல்-விருத்தம்,

மன்னவருரைத்தவார்த்தை மதிமந்திரிநீமுன்னெண்ணி - *
சொன்னசொற்படிவேறில்லைத் தோழிகடம்மைக்கூவி - *
பொன்னணியாவும்பூட்டி பூம்புனலாட்டிவைத்துக் - [கோ
கன்னிகையையழைத்துக்கொண்டோர் கணத்தினில்வரச்சொல்வீர்

வசனம்,

கேளாய்மதிமந்திரி வெண்ணெயைவைத்துக்கொண்டுநெய்க்கழவேண்டியதென்னவென்று நீசொன்ன ஆலோசனைப்படிக்குச்சேரன்சோழன்முதலாகிய ஐம்பத்தாறுதேசத்துராஜாதிபதிகளும் அப்படியேசெய்விக்கலாமென் றதிகசந்தோஷப் பட்டார்கள் இனிநடக்கவேண்டியகாரியம்பார்க்கவேண்டும் தோழிகளையழைத்துசித்திராங்கதையை இச்சபைக்குஅழைத்துவரச்சொல்வாய் மந்திரி,



மந்திரி பாண்டியனுக்குச் சொல்-கலி.

ஆண்டவாவுன்றன் அடியிணைபோற்றி ... - *
பூண்டவாபரணம் பொருந்துநிர்மலனே - - *
வேண்டவர்கொண்ட விஜயன்முன்னையழைத்து -*
நீண்டவார்குழலார் நிமிஷத்திலவருவார் - - *

வசனம்.

கேளும் என்னுடையவனே உன்மகளாகிய சித்திராங்கதையம்மையை வேண்டிய ஆசைகொண்டிருந்த இச்சபையிலிருக்கும் அர்ச்சுனமகாராஜன்முன்னே தோழிகள் ஒருநிமிஷத்திலே அழைத்துக்கொண்டுவருவார்கள் ஐயனே.

மந்திரி தோழிகளுக்குச்சொல்-விருத்தம்.

தோழிகள்கேளீர் துலங்குத்திரவோர் ... *
நாழிகைமுகூர்த்தம் நலமுடன்செய்ய ... *
ஆழிசூழுலக மரசர்கள்சபைக்கு ... ... *
வாழியையழைத்து வந்திடுவீரே ... *

வசனம்.

கேளுங்கள் தோழிகளே நமதுஆண்டவன் உத்திரவுபடிக்கு ஒருநாழிகைக்குள்ளே சித்திராங்கதை யம்மையை இச்சபைக்குஅழைத்துக்கொண்டு வாருங்கள் பெண்களே.

தோழிகள்-சித்திராங்கதைக்குச்சொல்கலி.

அங்கயற்கண்ணி யருளினாற்பிறந்த ... *
மங்கையர்க்கரசே மணமதுகொள்ள ... *
சங்கையில்முழுகி காவரியாடி ... *
சங்கையில்லாமற்றால்வருவாயே ... *

வசனம்.

கேளும்அம்மணி உன்மனதின்படிக்கு இனி அந்த அர்ச்சுன மகாராஜனுக்கு மணமாலை சூட்ட புண்ணியதீர்த்தங்களாடி வஸ்திராபரணமுதலாகிய புஷ்பாதிகளும் தரித்துக்கொண்டு மகாராசர் சபைக்குப் போகவேணும் எழுந்திருளும்அம்மணி.

சித்திராங்கதைசொல்-வசனம்.

அப்படியே போகலாஞ்சகிகளே.

பொது-விருத்தம்.

நீடியமயலாலங்க நிலைகுலைந்தழிந்துசோர்ந்து ... ... *
வாடியேமனதுமெத்த மகிழ்ச்சிகொண்டெழுந்திருந்தம்

ஸெ

ஆடியபற்புதமிகுந்த ஆபரணங்கள்பூண்டு ... ... *
சேடியருடனேகூடி சித்திராங்கதைவந்தாளே ... ... *

வசனம்.

இவ்விதமாக விரகதாபத்தினாலே துயரம்அனுபவித்துக்கொண்டிருந்த சித்திராங்கதையம்மை தனக்குக்கல்யாணமென்கிறதையும்பேரிகைசப்தங்காதிற்கேட்டதுமன்றியில் தோழிகள்வந்தழைக்குஞ் சந்தோஷவார்த்தையினாலே மனமகிழ்ச்சிகொண்டு பெருத்த புண்ணியதீர்த்தங்களாடி வஸ்திராபரணமுதலாகிய புட்பசாதிகளுந் தரித்துக்கொண்டு இராஜசபைக்கு வருகிற விதங்காண்க,

சித்திராங்கதை-வருகிற-தரு- இ ம்-பயிரவி-ஆதிதாளம்,

பல்லவி-

கன்னிசித்திராங்கதைவந் ... தாள்-வந்தாளிதைந்தி
மன்னர்சபையிற்புகுந் ... ... தாள்

அநுபல்லவி

சென்னிவணங்கிமனஞ் செய்துக்கொண்டினி ... வாழ
அன்னமென்னடைநடந் தரிவையர்புடை ... [சூழ (கன்)

சரணங்கள்.

தங்கமேருடம் ... ... வாங்கி- அதினால்வரும்
தங்கமிகவுந் ... தாங்கி-தன்
அங்கமெங்கும்மின்கொண்ட ஆசையினாற்கன்னி
மங்களவிஜயனை மாலிகுட்டவு ... மென்னி (கன்)

நண்ணியபூம்புன ... ... லாடிகருங்குழலி
நறுமலர்களைச் ... ... சூடி-முன்
எண்ணியஎல்லாங்களில் எண்ணினதுவுங் கண்டு
பண்ணியபூசையுஞ் செய் புண்ணியமென்றெண்ணிக்கொண்டு (கன்னி)

முழுமதிமுகத் ... அலங்க-மார்பினிலொளி
கொழுமதியா ... ... மிலங்க-நல்ல
செழுமதிமார்பினில் சிறந்தநகையைக் கண்டு
தொழுமதிகைபசந்தோஷித்தையைக்கொண்டு. (கன்னிசித்தி)

சித்திராங்கதை-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

எந்தையேபோற்றிமன்னர் வெற்றிக்கொடிகள்போற்றி *
சிந்தைசிம்மாசனத்தில் வீற்றிருப்பவனேபோற்றி ... *
சிந்தையினினைத்தவெல்லாம் சீக்கிரமாய்முடித்தாய்போற்றி
தந்தையேபோற்றியுந்தன் தாமரைப்பாதம்போற்றி ... *



வசனம்.

சரணம் சரணம் என்னையீன்ற தந்தையே சரணம்,

பாண்டியன்-சித்திராங்கதைக்குச்சொல்- விருத்தம்.

அளவறுபெண்களிற் அழகியாதியேவாழி *
வளருந்துதிக்குமேலாய் வருங்கற்புடையாய்வாழி ... ... *
இளவரசானச்செங்கோல் ஏந்துமாமதியேவாழி *
களவறுத்துலகாள்சித்திராங் கதைசெல்வவதியேவாழி ... *

இராஜன்-மந்திரிகளுக்குச்சொல்-கவி

மந்திரிகேளாய் சுந்தரபஞ்சாங்க ... *
அந்தணனிங்கே வந்திடச்செய்வாய் ... *

வசனம்.

வாராய் மந்திரி இதோ சித்திராங்கதையும் வந்தாள் இனிதிருக்கலியாணஞ்செய்யவேணும்-பஞ்சாங்கபுரோகிதனை அழைத்துவரச் சொல்வாய் மந்திரி.

மந்திரி கட்டியனுக்குச்சொல்-கவி.

வாசல்கட்டியனே மாசில்பஞ்சாங்க ... *
பூசுரர்வரமஹா ராஜனுத்தரவே ... ... *

வசனம்.

அடாவாசற்கட்டியக்காரா நமது இராஜன் உத்தரவுபடிக்குப் பஞ்சாங்கபுரோகிதனை அனைப்போதினில் அழைத்து வாரும்கின்றாய்.

கட்டியன்சொல்-வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேன் சுவாமி,

கட்டியன்புரோகிதருக்குச்சொல் கவி

மேதினிதனிலே-சாதியிலுயர்ந்த ... *
நீதிபஞ்சாங்க-வேதியாவாராய் ... *

வசனம்.

தெண்டன் சுவாமி வாரும்புரோகிதரே உம்மை எங்களாண்டவராகிய பாண்டியமகாராஜா அழைத்துவரச்சொன்னார் வாரும் [சுவாமி

பொருநீ-விருத்தம்.

சீரருந்தனமுயிட்டுக் கினர்மதிமுகத்திலேவெள் ... *
நீரும்சுட்சதையும்சாத்தி நிகரிலாவரமார்பில் ... *
விரமுக்குண்டலங்காவி வேஷ்டியுமிலங்கநன்றாய் ... *
சேரும்பஞ்சாங்கக்கொண்டு தெய்வபுரோகிதர்வந்தாரே *

புரோகிதர் சபைக்குவருகிற-தரு-இ-ம்-தோடி ஆதிதாளம்.

பல்லவி

பஞ்சாங்கபுரோகிதனானே-உதகிற்சொல்லும் ... *
பட்சதிதிமுதல்வார நட்சத்திரயோககரண (பஞ்சா)

அநுபல்லவி.

சருதாம்பொருளைக்கண்ணிற்காட்ட ... வெனக்கு
பெரிதல்லவித்தமண்ணிலில் ... யார்க்கும்-நானே
வருதாப்பமிதந்து வாழ்வுமதிந்து சொல்ல *
சரிவதகிரியைபோகனாவதற்சாஸ்திரங்களும் வல்ல (பஞ்)

சரணங்கள்,

மணத்திற்கேற்றன் ... மிராச இவ்வளவென்னும்
பணத்தொரு ... கால - குறைந்தாலதை
கணத்தில்வாங்குவேனிந்த ஜெகதலத்தில் ... மிகுந்த
கலைத்தநூல்களனைத்துங் கண்டுஞ்சாதித்து வருத்த (பஞ்)

சோபனக்கலியாணஞ்செய்விப் ... பேன்-நல்லமுகூர்த்த
நிபமனந்தமெத்திவைப் ... பேன்-சர்வ
பாபநிக்கிரகமாகும்படிசெபதபங் கொள்ள
சாபானுக்கிரகமென்னும் சாமர்த்தியமிகவுள்ள (பஞ்சா)

பாண்டியன்வேதியர்க்குச்சொல்-கவி

தெண்டமெங்ஙஸாமி தேவரீர்வந்து ... ... *
பண்டுஙாசெய்தபாலனேயெங்கண்ணில் ... ... *
கண்டனன்சித்திராங் கதைக்கும் அர்ச்சுனர்க்கும் ... *
மண்டலம்புகழ மணஞ்செய்துவைப்பீர் ... *

வசனம்-

தெண்டம் தெண்டம் ஸ்வாமி தேவரீர்வந்து கண்டுஙாசெய்தபலனே யெங்கண்ணிற்கண்டனன் வாரு மிந்தஆசனத்தி லுட்காரும் தேவரீ சித்திராங்கதை பட்டமும் முட்ட-நிதகமாட்டா தென்று முன்சொன்ன பஞ்சாங்கபலனைத் திருஷ்டாந்தமாகக்கண்ணிற்கண்டேன் இனி சித்திராங்கதைக்குப் அர்ச்சுனமகாராசனுக்கும் திருக்கலியாணஞ் செய்விக்கவேணும் ஸ்வாமி.

புரோகிதர்-பாண்டியனுக்குச்சொல்-கவி.

ஆசீர்வாதம் ஆரசனேயின்னம் ... ... *
மாசிரமைபிம்மை மகிழ்வுமுண்டாக *
தேசாதிபதிகள் நிறைந்திருஞ்சபையில் ... *
தேசாருந்திருமணஞ் செய்துவைப்பேனே ... *



வசனம்.

ஆசீர்வாதம் பாண்டிய மகாராஜனே அஷ்ட ஐஸ்வரியமும் உண்டாகவேணும் அப்படியே திருமணஞ்செய்து முடிக்கிறேன் மகாராஜனே. [தம்.

புரோகிதன்-அர்ச்சுனனுக்கும்-சித்திராங்கதைக்கும்சொல்- விருத்

குந்தயாதேவிமைந்தா குருகுலமன்னவாசீர் ... *
கந்தமார்குழலாள்சித்திராங் கதையெனுமயிலேநீயும் ... *
அந்தமார்மண்டபத்தோ ராசனந்தனிலிருந்து ... *
வந்தமாதவராப்போற்றி வாழ்மணஞ்செய்துகொள்வீர் *

வசனம்.

ஆசீர்வாதம் குருகுலசிகாமணியாகிய அர்ச்சுனமகாராசனே நீரும் சித்திராங்கதையும் இருவரும் இந்த அலங்கார மண்டபத்தில் ஓராசனத்திலிருந்து தேவப்பிராமண தரிசனஞ்செய்து மனமாலைசூட்டிக்கொள்ளுங்கள் அர்ச்சுனமகாராஜனே-

சபையோர்கள்சொல்-தரு-இ-ம்-கலியாணி-ஆடதாளம்.

பல்லவி.

கல்யாணமண்டபஞ்சேர்ந்தார்சித்திராங் ... *
கதையும்விஜயனும் இரதிபுமதனுமென (கல்யா)

அநுபல்லவி.

நல்லியார்க்குழலினும் நவரசமொழி ... யெனும்
அல்லியாசாணியும் அர்ச்சுனமகாராஜ னும்
அந்நாளுந்துமி இந்திரமிதயி ... யென
வந்திருவருமால் செந்திருவுருவம் ... போல (கல்யா)

சரணங்கள்.

வச்சிரமணித்தூண் ... ... கூட்டி இள
வாழைகமுகொடுநற் காழகிற்சந்தன
மரங்களெங்கணும் ... நாட்டி-மிக
விச்சித்திரமாகவும் மேல்விட்டங்கள் தரித்து
பச்சைமரகதத்தாற் பந்தலலங் ... கரித்து
பவளமணிகொடுங்கைப்பதித்துச்சத்திர கிரண
நிவனொளிதரும்பட்டைநிருத்துஞ்சுந்தர பூரண (கல்யா)

ஆசாணிக்காற்செறு ... ... வார்-எழில்
அற்புதவலம்புரு-சந்புடைமஸ்ஸைபர்
ஆயிரம்பேர்தலங்கி ... ... வார்-நல்ல

அனாசாவிமார்கள்வந்து ஆயம்புனை கட்ட
வினாசாருமணிமேடை மேனிற்றமாலை சூட்ட
வேதியர்களுமறை யோகியர்களும் பொறை
ஆதியர்களுமனு நீதியர்களும் ... நிறை(கல்யா)

பாலிகைகளுமேரமைத் ... தார்-வானிற்
பரந்தெழுந்தொளிர்நட்சத்-திரங்களெனவனந்தம்
பலவிளக்குகளமைத் ... தார்-தங்க
சால்கரகமுங்குசும்பமுடன்பூச் ... செண்டு
மாலைகள்மாற்றி மனமகிழ்ந்திருந்ததி ... கண்டு
மங்களகரசோப னங்களைப் ... பாடி
பெண்களுடனெல்லோருங்களிகூரவிருக் (கல்யா)

பொது விருத்தம்,

மாலையுஞ்சூட்டிக்கொண்டு மகிழ்ந்திருந்ததியும்பார்த்து *
ஆலயங்களைச்சேவித்து அரசாணிவலமாய்வந்து ... *
காலையம்மியின்மேல்வைத்துக் கணைபாழி மாற்றிவஸ்திர ... *
சேலையமுடிந்துகோலந் தெருவெங்கும்வந்துசேர்ந்தார்.

வசனம்.

இவ்விதமாக அர்ச்சுன மகாராஜனும் சித்திராங்கதை யம்மையும் ஒருவர்க்கொருவர் மணமாலைசூட்டிக்கொண்டு அருந்ததியையும்பார்த்து ஆலயதரிசனமுஞ் செய்து அரசாணி வலமாக வந்து அம்மியின்மேலேகாலைவைத்துக் கணைபாழிமாற்றி இருவர் வஸ்திர முந்தானியை ஒன்றாய்முடிந்து தெருவீதிக ளெங்குந் திருக்கோலம் வந்து மறுபடியும் கல்யாண மண்டபம் சேர்ந் திருந்தார்கள்.

மங்களந்-தரு-இ-ம்-ஜசாவேரி-ஆடதாளம்.

பல்லவி.

ஜெயமங்களம்நித்திய-சுபமங்களம் ... *

அநுபல்லவி,

ஜெயமங்களம்வில்விஜயற்கும்-நயசித்திராங்கதைக்கும் ...(ஜெய)

சரணங்கள்.

யாத்திரைசெய்தபுண்ணியனு-ரர்ச்சுனராஜ ... னுக்கும்
கீர்த்திமேவுபாண்டியன்பெற்ற கிளிமொழிசித்திராங்கதைக்கும்()

மஞ்சவாகனனென்னு மகபதிகுமார ... னுக்கும்
மந்திரிகட்குகந்துழல்-மாதுசித்திராங்மணி ... க்கும்(ஜெ)



பஞ்சவனெனும்பாண்டியன்-பயின்றசித்திராங்கதை க்கும்
பஞ்சவர்களுடன்பிறந்த-பார்த்திபன்றன ... க்கும்(ஜெ)

பாண்டியன்-மந்திரிகளுக்குச்சொல் விருத்தம்.

கீர்த்திகொண்டிருந்தபுண்ணிய தீர்த்தயாத்திரைசெய்திருந்த ... *
மூர்த்தியின்மதுரையென்னும் நகரிலென்மகளைக்கண்டு ... *
கோலத்திருமணஞ்செய்துகொண்டஅர்ச்சுனன்றனக்கு *
ஞாலத்திலேயொத்தும்பெண்கட் கலிகலமளிப்பாய்மந்திரி ... *

வசனம்,

கேளாய் மந்திரி பூலோகமுழுதும் புண்ணியதீர்த்த யாத்திரைக்குப்போய் இந்த மதுரைப்பட்டணம் வந்து சேர்ந்து என் மகளாகிய சித்திராங்கதையை விவாகம் பண்ணிக்கொண் டிருந்த அர்ச்சுனமகாராஜனுக்கெதிரே ஆவத்தியெடுக்கும் பெண்களுக்கு ஆடை ஆபரணங் கொடுத்தனுப்பிவைக்கச் சொல்லுவாய்மந்திரி.

அர்ச்சுனன்-பெரியோர்களுக்குச்சொல்-வணக்க-விருத்தம்.

சோமனுரணிந்தவேணி சொக்கேசர்பாதம்போற்றி ... *
ஸ்ரீமன்நாராயணன்றன் திருவடிபோற்றிதேவப் ... *
பிரமனுட்கனத்தவெண்டம்பெல்லைபெற்றனைக்களித்த *
மாமனுமென்றனாம்பாண்டியன் மலரடிபோற்றிபோற்றி ... *

வசனம்.

மூன்றும்பிறைச்சந்திரனையும் கங்காபவானியையும் தரித்த சடாபாரத்தோடுங் கூடிய மதுரை சொக்கநாதசுவாமி பாதமே போற்றி ஸ்ரீமந்நாராயணன் திருவடியேபோற்றி. தேவப்பிரமனு க்கு அடியிணைக்கு அனந்தநமஸ்காரம் உன்றன்பெண்ணை யெனக் குத்திருக்கலியாணஞ் செய்துக்கொடுத்த என்மாமனாகிய பாண் டியமகாராஜனே சரணம்.

பாண்டியன்-அர்ச்சுனனுக்குச்சொல்-ஆசீர்வாதவிருத்தம்.

குருமரபரசர் கோவேவாழி ... *
தருமபுத்திரன் றம்பியாவாழி ... *
திருமான்மைத்துனன் சிநேகாவாழி ... *
மருமகனேநீ மால்போல்வாழி ... *

சித்திராங்கதை-பெரியோர்களுக்கு- வணங்குகிற- விருத்தம்.

அங்கைப்புநீண்ணியாக அடியிணைக்கனந்தம்போற்றி *
மங்கைலட்சுமியைமார்பில் வைத்தமாலடிகள்போற்றி ... *

செங்கையாசீர்வதிக்குந் தேவப்பிராமணரேபோற்றி ... *
எங்களைத்திருக்குமென்றன் றந்தையேபோற்றிபோற்றி *

வசனம்.

மதனாமீனாட்சியம்மன் சமேதராய் விளங்காநின்ற சொக்கநாதசுவாமியேசரணம் ஸ்ரீமகாலட்சுமியையார்பிலேதரித்திராநின்ற அரிநாராயணனேசரணம் என்றனக்கு ஆசிர்வாதந்தந்திராநின்ற தேவப்பிராமணோத்தமசரணம் தங்களுடையமனதில் சந்தைபிராமற்படிக்கு அர்ச்சுனமகாராஜனுக்கு என்னைக் கொடுத்துத் திருக்கலியாணஞ் செய்துவைத்த எந்தந்தையே சரணஞ் சரணம்.

பாண்டியன்-சித்திராங்கதைக்குச் சொல் விருத்தம்.

அங்கடல்தவிழுதித்த அமுதேபெண்ணரசேவாழி ... *
திலகொள்கற்பினுக்கெந்நாளும் நிகரொத்தியேவாழி ... *
சிலைகொள்பார்த்திபன்றன்மார்பில் சேர்நவமணியேவாழி *
கலைகளுந்தேர்ந்தசித்திராங் கதையேபெண்ணரசேவாழி *

வந்த-அரசர்கள்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னவாமதுரையாளும் மகிபாண்டியனேகேளாய் ... *
நின்னவாவின்படிக்கு நிலைமணம்முடித்ததுதந்த ... *
அன்னவர்களைவிதித்தால் ஆராலும்விலக்கொணாது *
தென்னவாவெங்களுக்குச் செலவுந்தந்தனுப்புவீரே ... *

வசனம்.

கேளும் பாண்டியமகாராஜனே உமது மகளை யிஷ்டப்படிக்கே அர்ச்சுனமகாராஜனுக்குஞ்சித்திராங்கதைக்கும் திருக்கலியாணமுடித்ததுஇனிஎங்களுக்குச் செலவுதரவேணும்மகாராஜனே.

பாண்டியன்-வேதியர்முதலாகிய-அரசருக்குச்சொல் - விருத்தம்.

தேவப்பிராமணருக்கெல்லாந் தெண்டம்இவ்வுலகின்மன்னர்
யாவத்திராளுமென்மே லனுக்கிரகமிருக்கவேணும் ... *
பாவைசித்திராங்கதைக்கும் பார்த்திபன்றனக்குமேவும் ... *
ஆவல்புத்திரபாக்கியம் அருள்புரிந்தேகுவீரே ... *

வசனம்.

வாரும்பிராமணரே சேரசோழமகாராஜர்களே ஐம்பத்தாறு தேசாதிபதிகளே நீங்களெல்லாம்வந்து திருக்கலியாணஞ் செய்துவைத்து அர்ச்சுனமகாராஜனுக்கும் சித்திராங்கதைக்கும் புத்தி



ரபாக்கியமும் விருத்தவாழ்வும் வரும்படியாய் அனுக்கிரகம்பண்ணிஅவரவர்கள்பட்டணத்திற்குப்போய்ச்சேருங்கள்மன்னர்களே

அர்ச்சுனன்-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்.

கார்பெறுகுழலாய்சித்திராங் கதையெனுங்கன்னிவாசத்*
தார்பெறுமணஞ்செய்வித்ததனிமுதலெனுஞ்சொக்கேசர்*
பேர்பெறுமதுரையாளப் பிள்ளையுமருள்வார்நல்ல ... *
சீர்பெறுமனையில்நாம்போய்ச் சேருவோம்வாராய்பெண்ணே

வசனம்.

கேளாய் எனது பிராணநாயகியாகிய சித்திராங்கதை யென்னுங்கன்னிகையே நமக்குமணமாலைசூட்டிவைத்த சொக்கநாதசுவாமி இந்தமதுரையாளசாட்சிசெய்யப்பிள்ளையையும் அருளிச் செய்வார் இனிநாம் அரண்மனையைப்போய்ச்சேருவோம்வாராய் பெண்ணே,

சித்திராங்கதை-அர்ச்சுனனுக்குச்சொல்-கலிப்பா

இ-ம்-புன்னாகவராளி.

நஞ்சடையுங்கண்டமுந்தலை நதிமதியுங்கொன்றையுஞ்சேர்
செஞ்சடையுந்திகழ்பரமன் றேவிமீனாட்சியம்மன் ... *
மஞ்சடையும்பூம்பொழில்சூழ் மதுரைநகராசாள *
மஞ்சனையும்அருள்வார்நாம் வாழ்மனைபோய்ச்சேருவமே*

வசனம்,

கேளும் எம்பிராணநாதா சொக்கநாதசுவாமியென்னும் பரமசிவனுந்தேவியாகியமீனாட்சியம்மனும் மதுரையினரசாளும் பிள்ளையை எப்படியும் அருளிச்செய்வார் இனிநாம் அரண்மனையா[illegible]பள்ளியறைக்குப்போய்ச்சேருவோம்வாருஞ்சுவாமி,

அர்ச்சுனன்சொல்-தரு இ-ம் தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சித்தைமகிழ்ந்தந்தப்புரஞ்சேருவோம் ...வாரும்-அதி
செயசயலட்சண-நயவிலட்சணகுண
சித்திராங்கதையே ... ... வாரும்

அநுபல்லவி,

வித்தைமிகுமன்மதனுஞ்-சந்தமலர்மாலை சூடி
வந்ததிருவிழாமுதற் சந்திரியுண்டாகக் ... கூடி
மருவசமயமினம் பருவமமையுங் ... கன
உருவமிகுந்திடுஞ்செந் திருவுமாது ... மென (சித்)

சரணங்கள்,

சுப்பிரமணியரும் வள்ளியுங்கூடிர்ந்தது ... போலே-நல்ல
பொற்புடனிருவரு புணர்ந்திடு ... மேலே-இனி
யென

ஸப்பிரமஞ்சத்திருப்பீடு சாசனம் ... ... கானலாம்
இப்பிரபஞ்சத்தில் வாழ்க்கை யென்றாயிற்றம் பூணலாம்
இதைவிட வென்ன சௌபாக்கியமென்று ... *
முதன் முதனின் சொன்னவாக்கியமின்றில் ... ... *
இசைந்த வெல்லீதினிற் றசந்தெரிந்தெப்பின்ற ... *
வசந்தனோங்களைக்கூறும் அசந்துரைநந்து ... *
மங்கைப்பருவமென்றும் கொங்கைக்குடந்தைக் ... கண்டு
சங்கையில்லாமலினி செங்கைப்பிடித்துக் ... கொண்டு (சித்)

பொது-கொச்சகம்.

செந்திருமாதுமென திவ்வியமலாமணியின்மேல் *
வந்திருவர்களுங்குவி வாழ்ந்திருக்கும் அந்நாளில் *
சந்தச்சித்திராங்கதைக்குச் சொக்கேசர் தன்னருளால் *
வந்து கெர்ப்பந்தரித்துப் பத்துமாதமும் நிறைந்ததுவே

வசனம்.

இவ்விதமாகச் சித்திராங்கதையும் அர்ச்சுனமகாராஜனும் அந்தப்புரத்தினில் வந்துசேர்ந்து அதிதிவ்விய பரிமளமான புஷ்பமெத்தையின்பேரில் அநேக லீலா விநோதத்துடனே மருவி வாழ்ந்திருக்கின்ற நாளில் சொக்கநாதருடைய கிருபையினாலே சித்திராங்கதை வயிற்றில் கெர்ப்பந்தரித்து பத்துமாதமும் நிறைந்து கெர்ப்பவேதனைப்படுகின்றவிதங்காண்க.

சித்திராங்கதை தோழிகளுக்குச் சொல்-விருத்தம்.

தோகையேயின்றைக்கேதோ தொடையிரண்டுங் கோல்லையு
தேகமும் நோக்குதாகத் திகைக்குதிப்பிப் புன்னிட்டுப் [ம்
போகுதென்னடி வயிற்றிற் புடைபுடைத் திருகுதும் ... *
தோகுதுகிலவிழவேனெ ரொடியும் நான் பொறுத்திடேனே *

வசனம்.

கேளுங்கள் என் சகிகளே இன்றையத்தினம் என்னமோ தொடை காலுகள் சரீரமெல்லாம் அசதிகண்டு விடவிட்டது நடுக்குதே இடுப்பும் விட்டுப்போகுது அடிவயிறும் புடைபுடைத் துடிக்குதே [illegible] சொக்கநாதசுவாமி கிருபைசெய்த வாதனைப நானொரு நொடிப்பொழுதும் பொறுத்திருக்கமாட்டேன் இனியென்ன செய்வேன் தெய்வமே.

தோழிகள் சித்திராங்கதைக்குச் சொல்-விருத்தம்.

ஆட்சிபாய் சொக்கநாதர் அருகினிலமர்ந்து வாழ்மீ ... *
குட்சியைமனதிலெண்ணி நல்லதைப்புகுந்தாலேசு ... *
மாட்சிகண்பார்ப்பவந்தும் மனத்துயிரியம்விடாதே ... *
காட்சிபொன்திங்கலியுந்தன் நாதனைப்போலேசெய்வோமே.



வசனம்.

கேளும் அம்மணி இந்த வேதனை மிகுந்ததினாலே [illegible] அறையுருத்து இருப்பவளே யாருக்கும் [illegible] பார்ப்பார் உனக்கொருசாட்சியு மில்லை மனத்துயரத்தை விடாமல் இரும்மா நாங்க ளுக்குள் [illegible] பாண்டிய மஹாராஜனுடனே சொல்லி மருத்துவச்சியை அழைப்பிக்கிறோம் அம்மணி.

தோழிகள் பாண்டியனுக்குச் சொல்-விருத்தம்.

பற்பலர்மன்னர் போற்றும் பாண்டியராஜனே கேளும் *
தற்பரனருளால் வந்த தையல் சித்திராங்கதைக்கு ... *
கற்பவேதனையிப்போது காணுதாகையினால் நல்ல *
விற்பனமருத்துவச்சி விரைவுடன் வரச்செய்வீரே ... *

வசனம்.

கேளும் பாண்டியமஹாராஜனே நமதம்மாள் சித்திராங்கதை கர்ப்பவேதனையால் மிகவுந்தவிக்கிறுதாகையால் மருத்துவச்சியை வெகுசீக்கிரத்தில் அழைத்துவரச்சொல்லவேணும் ஐயனே.

இராஜன் சொல்-கவி.

மதிமந்திரிகேள்-மருத்துவச்சியையிங் ... *
கதிசீக்கிரமதாய் அழைத்துவரச்சொல் ... *

வசனம்.

கேளாய் மதிமந்திரி நமதம்மாள் சித்திராங்கதை கர்ப்பவேதனைப்படுகிறபடியால் அதற்குத்தக்க மருத்துவச்சியை அதிசீக்கிரமாய் அழைத்துவரச்சொல் மந்திரி-

மந்திரி கட்டியனுக்குச் சொல்-கவி.

கட்டியக்காரா கைதேர்ந்தவரில் ... *
கெட்டிக்காரியென்கிற கிழவியாய்ப்பார்த்து *
மட்டில்லாதினையார் மருத்துவமாதை ... *
அட்டியில்லாமல் அழைத்தோடிவாராய் ... *

வசனம்.

வாராய் கட்டியக்காரா நமதம்மாள் சித்திராங்கதை கர்ப்பவேதனைப்படுகிறபடியினாலே முன்பின் கைதேர்ந்த கெட்டிக்காரியாய் இருந்தபோதிலும் அனந்தம் பெண்களுக்குக் கர்ப்பவேதனையையொழித்த கிழவியாய்ப்பார்த்து மதுரைப்பட்டணத்தில் வசிக்கும் மருத்துவச்சியை நொடிப்பொழுதில் அழைத்து வாரும் பிள்ளாய்.

கட்டியன் சொல் வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் சுவாமி.

கட்டியக்காரன் மருத்துவச்சிக்குச்சொல்-விருத்தம்,

மருத்துவமாதே மன்னவன்மகளை ... *
வருத்துங்கருப்ப வாதையையொழிக்க ... *
திருத்தமுள்ளவளைத் தேர்ந்தவளாக ... *
ஒருத்தியிங்கெழுந்து வோடியேவருவாய் ... *

வசனம்,

இந்தமதுரைப்பட்டணத்தில் வாழும் மருத்துவமாதே-மே ன்மஹாராஜகுமாரத்தியாகிய சித்திராங்கதையம்மாளுக்குவந்தக ருப்பவேதனையைத்தீர்க்க முன்பின் கைதேர்ந்த இழவிபா யொரு த்தி எழுந்து அதிசீக்கிரமாய் ஓடிவாடி மருத்துவமாதே,

மருத்துவச்சி-வருகிற-பொதுவிருத்தம்,

நரைத்தலையசையக்கூனு நடிக்குங்கைக்கோலுமுனி *
கரைக்கனிபோலேகொங்கை தொட்டசைப்படவும்வாயில்
நுரைத்துச்சொன்சொற்களெல்ப நேரொழித்திடுவேனென்
மருத்துவச்சிழவிவந்து மாதுமுன்னேரின்றிருனே ... [அ

கட்டியன்சொல்-வசனம்.

அதோதெப்படியென்றால் நரைத்தலையும் கனாக்காயைப் போன்ற கொங்கையும் வாயில்வெட்டித்த சொன்னுமாக மருத்துவ ச்சிழவி சித்திராங்கதையினிடம் வருகிறவிதங்காண்க,

மருத்துவச்சி-வருகிற-தரு-இ-ம் - பந்துவராளி ஆதிதாளம்,

பல்லவி,

வந்தாள்மருத்துவச்சிழவி-கை ... *
மருத்துவங்களிற்புகழ் மிகுத்தசதுரி ... (வந்)

அநுபல்லவி,

வந்தாள்மாதர்க்குமயிர் நந்தாவெங்குந் திருந்,
செந்தாமரைமலர் முகம் ... ... வேர்க்க
நொந்தாள்கருவேதனையைத் ... தீர்க்க (வந்)

சரணங்கள்,

நாரைப்பூவதுபோனரைத் ... தலையும்-நிரையத்தினை
காணலாமெனும்விழியுந் ... சிலையும்-ஒட்டகமும்போல்
கோணலாய்வளைந்த ... கூனலையும் கனாக்காய்த்தலைக்
காணியைப்போற்றொங்கும் இருமுலையும் நடிக்குங்கையில்
ஊன்றியகோலுடனே ஒருமுன்றுக்காலும்-இவளுமின் ... ... *
தோன்றியபின்பொருகுறைவிலையென்றதிறமும் மற்றோர்களுரா
விணியைப்போலிவள்போறவளல்லவேமேலும்தொழிலென்போற்
பாரணியிற்பிள்ளைபெறுதிலமன்மகள்போலும்பெறுவார்முன்பினே



பழக்கமுள்ளேனபலரும் ... ... கொண்டாட
வழக்கமாகநீவரவெனத் ... ... தேட
பிழைக்குநன்மகப்பேறினை ... நாட
அழைக்கவந்தவாளுடன் ... கூட (வந்தாள்ம)

மருத்துவச்சி சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்,

அம்மையேயஞ்சவேண்டாம் அங்கத்தின்குறிகளெல்லாம் ... *
செம்மையாயிருக்குதின்னம்க்ஷணனேரம்பொறுத்திருந்தால் *
செம்மையெம்முலையாய்நீயாண் குழந்தையைப்பெறுவதாக *
நம்மையாள்மதுரைசொக்க நாதரும்அருள்செய்வாரே ... *

வசனம்.

அம்மாநீயஞ்சவேண்டாம் உனதுதேககுறிப்புக ளெல்லாம் செம்மையாய்த்தானிருக்குது இன்னம்க்ஷணநேரம் இவ்வேதனை யைப் பொறுத்துக்கொண் டிருந்தையானால் நல்ல ஆண்பிள்ளை யைப்பெறும்படியாய் இந்த மதுரைசொக்கநாதசுவாமி அருளிச் செய்வார் நீ பயப்படாதே,

சித்திராங்கதை கருப்பவேதனையால்-பிரலாபிக்கிற தரு-

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அம்மாஎப்படிசகிப்பேன்-எவ்விதத்தாலிவ் ... *
வாதைதனைசகிப்பேன் ... ... *

அநுபல்லவி.

இம்மாநிலத்தனிலயானிப்பெணிச் ... ஞான
பெம்மானருளிய பிள்ளைப்பேற்றினும் ... வாதை(அம்)

சரணங்கள்-

பக்கமிரண்டுநோ ... குது-முதுகுத்தண்டு
திக்குமுக்காடிப்போ ... குது சற்றே
உட்கார்ந்திருப்பமென்றால்வடம்பெருகும்உளைக்குது
நிற்கப்போனாலென்திரேகம்நிமிர்த்திழுக்குது (அம்மா)

அடிவயிற்றினில்முட் ... டுது-உடம்பெங்கும்
ஓடியப்பஞ்சுபோற்கொட் ... டுது - என்றன்
அடியிடையுமென்னமோ அலைப்போலப்பெருக்குது
இடிஇடியென்றிடித்து என்றனைவருத் ... துது(அம்)

தண்ணீர்தாகமெடுக் ... ... குதே-என்னுடைய
பெண்ணோதேயுமுடிக் ... குதே-அங்கம்

குன்னிஅம்போதாமல் குலமாப்புமுடைபுது
புன்னைஅடிந்தூடை புடைபுடைத்திடியுது (அம்)

இதுவும்-சித்திராங்கதைசொல்-விருத்தம்.

எடுக்குதேஇடுப்புநோவும் இன்னமுமெத்தமெத்த ... *
முடுக்குதென்னடிவயிற்றில் மூட்டுதேவென்றவி ... *
இடிக்கிதேதலைவிருக்கிடம் செம்மமும்பொல்லாதைபோ *
நடுக்குதேதிரேகமெங்கும் நானென்ன செய்வேனம்மா... *

வசனம்.

அம்மா சொக்கநாதசுவாமி மீனாட்சித்தாயே இன்னமும் இடுப்பு நோய் எடுத்து வரவர மெத்தவுமுடுக்குதே என்னுயிர் இடுக்கிட்டுப் போகுதே பூலோகத்திலே பெண்ஜென்மம் பொல்லாதென்று சொல்லுவதுசரியே திரேகமெங்கும் நடுக்குதே நானென்ன செய்வேனம்மா,

மருத்துவச்சி-சித்திராங்கதைக்குச்சொல்-விருத்தம்,

தலைச்சனையென்றுவந்தைத் தாங்கிக்கொண்டிருக்கலாமித்*
தலைச்சன்பேறதுவாய்ச்சொல்லோர்தாகமுமெடுக்குமேலும்
அலைச்சலைச்சிடுப்புநோகும் அடிவயிறுளைக்குஞ்சற்றே ... *
அலைச்சலைக்கொடுக்குங்கண்டாய் அஞ்சவும்வேண்டாமம்மா

வசனம்.

கேளும் அம்மணி தலைச்சனையென்றால் அதை ஒருவருக்கொருவர் சற்றேதாங்கிக்கொள்ளலாம் அதுவுமல்லாமல் பிள்ளைப்பேறுகளில் தலைச்சன்பேறென்பது வாய்ச்சொல்லல்ல தாகமுமெடுக்கும் மேலும் வெகு அலைச்சலைக்கொடுக்கும் சற்றேயினம் பொறுத்தால் இந்த கருவுவலியைப்பற்றி நீபஞ்சவேண்டாமென்னம்மா,

சித்திராங்கதை-பிரசவவேதனைப்படுகிற-தரு-ஆசிரி-அடதாளம்,

பல்லவி.

என்னசெய்குவேன் அம்மாஐயோ-இதுநான் ... *
ஏதுசெய்குவேன் ... ... ... *

அநுபல்லவி.

என்னசெய்வேனம்மா-இருக்கனடி. அம்மா
இனைக்குதென் றுடல்-களைக்குதடிவயி ... *
அனைக்குதிடுப்பையும்-துனைக்குதே ... ஐயோ(என்ன)

சரணங்கள்.

தையலே புகலால் மெய்வெந்து ... முறியுதே
ஐயையோஎன்னுச்சந்-தைமாகந் ... அறியுதே



அடிவயிறிடுப்பை ... ... பிடியடி
உடம்பைத்துடையடி-யப்பா ... விடையடி (என்)

மருத்துவச்சி-சித்திராங்கதைக்குச்சொல்-வசனம்.

என்னம்மா பயப்படாதே பயப்படாதே சாகமேறினகோம்பு அசையாது கைப்பட்டகண்ணுருவாகா அதற்காகத்தான் கையவைத்தால் தீருமோ பத்தெட்டுப் பெற்றவனெல்லாம் என்னமோ ஏதோவென்று சக்கமுறிப்பிடிவிழுந்து இடைக்கச்சே தலைச்சன் பிள்ளைக்காரிக்குத் தயிரிய மிருக்குமா, இதோ குழந்தை வெளிப்பட்டுப் போச்சுது இனிசுகமாயிரு மம்மணி.

பொது-விருத்தம்,

புவனமேழும்போற்றிப் புகழ்திருமதுரையாளும் ... *
சிவனருளாலுதித்த சித்திராங்கதைவயிற்றில் .. *
எவனமோர்உருவுகொண்ட தென்னமன்மதனுமேங்க ... *
மவுனமுற்றொளிக்கதலவ் லமத்தல்வந்துதித்தானன்றே ... *

கட்டியன்சொல்-வசனம்,

இவ்விதமாக ஈரேழுபதினாலு லோகமும் போற்றிக்கொண்டாடாநின்ற மதுரை சொக்கநாதசுவாமி கிருபா கடாட்சத்தினாலேசித்திராங்கதை வயிற்றில் அழகெல்லாம் ஒருருபமெடுத்தது போல்மன்மதனும் வெட்கிப்போகும்படியாய்த் திவ்யபுத்திரன் பிறந்தான் மேல்நடந்த தகாவ்கை.

தோழிகள்-பாண்டியனுக்கும்-அர்ச்சுனனுக்கும்சொல்-விருத்தம்.

வேம்பணிமார்பாபோற்றி விஜயனேபோற்றிபோற்றி ... *
தாம்பணிமதுரைசொக்க நாதர்தன்னருளினாலே ... *
காம்பணிதோளிசித்திராங் கதைதிருவயற்றினின்று - *
பாம்பணைபவன்மகன்போல் பாலன்வந்துதித்தானையா *

வசனம்.

கேளும் வேப்பமாலையணிந்த பாண்டியமகாராஜனே சரணம்சரணம் அர்ச்சுனமகாராஜனே சரணம் மதுரை சொக்கநாதசுவாமி கிருபாகடாட்சத்தினாலே சித்திராங்கதையம்மாள் வயற்றிலே மன்மதவிக்கிரகம்போலே ஒருபிள்ளைபிறந்ததையாசுவாமி.

பாண்டியன்-அர்ச்சுனன்முதலானவர்களுக்குச்சொல்விருத்தம்

மருமகளேநின்பாக்கிய மந்திரிகாள்நமதுபுண்யம் *
திருமகளெனவுதித்த சித்திராங்கதைவயிற்றில் ... *
ஒருமகன்பிறந்தானென்றிங் குலாத்தமாதர்களேநீங்கள் - *
தருவதிந்வார்த்தைக்கென்றன் தரணியைக்கொடுக்கலாமே *

வசனம்.

கேளும்என்மருமகனாகிய அர்ச்சுனமகாராஜனே உமது

ண்ணியமே புண்ணியம் மந்திரிகளே நமதுபாக்கியமேபாக்கியம் சித்திராங்கதையயிற்றிலே ஒருபிள்ளை பிறந்த தென்றேடி வந்து சொன்னதோழிப்பெண்களே உங்களுக்கிந்த உலகத்தைக்கொடுக்கிறேன்வாங்கிக்கொள்ளுங்களடிபெண்களே,

தோழிகள்சொல்வசனம்-அப்படியேமகாபாக்கியஞ்சுவாமி

அர்ச்சனன்தோழிகளுக்குச்சொல்-விருத்தம்,

மஞ்செனுங்குழலீர்தோழி மார்களேமைந்தனுக்கு ... *
மஞ்சனமாட்டிவைத்து மண்பொட்டுமிட்டுப்பின்னும் - *
அஞ்சனப்பொட்டுமிட்டு அணிமணியணிகள்பூட்டி ... ... *
மஞ்சணத்தொட்டிலேற்றி மகிழ்ந்துதாலாட்டுவீரே ... *

வசனம்,

கேளுங்களடி தோழிப்பெண்களே குழந்தைக்கு ஸ்நானம் பண்ணிவைத்து மண்பொட்டு மைப்பொட்டுமிட்டு நவரத்தினங்களைப் பூட்டி தங்கத்தொட்டிலில் வளர்த்தி தாலாட்டுங்களடிபெண்களே,

தோழிகள்சொல்-வசனம்,

மகாபாக்கியம் மகாபாக்கியம்,

தோழிப்பெண்கள்- பப்புருவாகனனை-தாலாட்டுதல்,





சித்திராங்கதையுந் தோழியுந்-தாலாட்டுகிற-தரு-இ-ம் - நீலாம்புரி

பல்லவி,

ஆராரோ ஆரரோ ... ... *
ஆராரோ ஆரரோ ... ... *

அநுபல்லவி,

சீராமணாலூர்வாழ் சித்திரவாகனபாண்டியன் ......*
பேராந்தனஞ்சயன்றன் பிள்ளையேகண்வளராய் ... ஆராரோ

சரணங்கள்,

பார்புகழும்மஞ்சலில் பார்த்திபன்தனைமருளும் ... ... *
கார்குழலாள்சித்திராங் கதைமகனேகண்வளராய் ஆராரோ

சன்னியாசிபோல்வேஷம் தான்கொண்டுதாரணியில் *
கன்னியாதீர்த்தமெல்லாம் கண்டுவந்தோன்கண்மணியே ஆரா

மறையவனைப்போலிருந்து மலரெடுக்கவந்தவென்னை ... *
முறையறிந்துகண்டவுடன்மோகங்கொண்டோன்கண்மணியே ( )

ஐந்தருவனந்தனில்தன் அதிரூபங்காட்டிபெலக் ... *
சுந்தருவமணமதினால் கலந்தவர்தன்கண்மணியே - ஆராரோ

சித்திரவாகனபாண்டியன் செல்வமனத்தனிலிருந்த ... *
புத்திரவாஞ்சையையொழித்த புண்ணியனேகண்வளராய் ஆரா

அர்ச்சனன் பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

சித்திராங்கதையையீன்ற தென்னவாகேளுமிந்த - ... *
புத்திரன்பெயர்தானின்று பூர்வமாயுங்களுக்கு ... ... *
வித்தையாரம்பஞ்செய்து வில்லனார்பூட்டியெய்யும் - *
அஸ்திரப்பரிட்சையெல்லாம் அறிவிப்பதார்சொல்வீரே- *

வசனம்.

கேளும்பாண்டியமகாராஜனே இந்தக் குழந்தைபெயரென்ன வித்தியாரம்பம் வில்வித்தை அஸ்திரப்பரிட்சை முதலாகியதும் கற்பிக்குங்குலகுரு ஆர் எனக்குத் தெரியச்சொல்லவேணும் என் மாமாவே.,

பாண்டியன் அர்ச்சனனுக்குச்சொல்-விருத்தம்,

குருகுலமன்றுமெங்கள் குலக்கொருசொக்கநாதர் - *
வருகிலமுறையிற்பப்புரு வாகனனிந்தப்பிள்ளை - - -*
தருகலைக்கியானத்தோடு தனுவஸ்திரப்பரிட்சையெல்லாம் -
ஒருகுறைவில்லாமே குருபதேசமருளுவாரே - : : -*

மஅ

வசனம்.

கேளும்என்மருமகனுகிய அர்ச்சனமகாராஜனே எங்கள்குலக்குருசொக்கநாதசுவாமிதான் இந்தப்பிள்ளையின்பெயர் பப்புருவாகன பாண்டியனென்றுசொல்லலாம் மேலும் அறுபத்துநான்குகலைக்கியானமும் வில்வித்தை அஸ்திரப்பரிட்சையெல்லாம் பரமசிவன் அனுக்கிரகம்பண்ணுவார் அதற்கொருகுறைவுமில்லை மருமகனே.

அர்ச்சனன்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

நாற்றிசைபுகழுஞ்சொக்க நாதர்தன்னருளிருந்தால் - - *
வேற்றொருவர்களால்நம்மை வெல்லவும்போமோவுன்றன் -
கோத்திரம்விளங்கவென்றன் குழந்தையையீந்தேன்மற்ற *
யாத்திரைநான்போய்வாறேன் அன்புடனனுப்புவீரே ... *

வசனம்.

கேளும்பாண்டியமகாராஜனே இந்த மதுரை சொக்கநாதசுவாமி கிருபாகடாட்சமிருந்தால் நம்மையொருவராலேயும்வெல்லப்போகாது இப்பவும்நான்பெற்றகுழந்தையை உமது கோத்திரம் விளங்கும்படியாய்ப் புத்திரசிகாரங்கொடுத்துவிட்டேன் இனிமற்றதீர்த்தயாத்திரையும்போய்வருகிறேன் சீக்கிரத் தனுப்பிவைக்கவேணும் என்மாமாவே.

பாண்டியன்-அர்ச்சனனுக்குச்சொல் விருத்தம்.

மருகனேநீர்வந்தென்றன் மகளையுமணந்ததல்ல ... - *
முருகனேர்சுதன்றிகார முகமலர்ந்தளித்ததாலே - ... *
பெருகுமென்குலம்விளங்கப் பெற்றனன்யாத்திரைபோகத்
திருகுசொல்வதுமொன்றுண்டோ சென்றுநீர்வருகுவீரே *

வசனம்.

கேளும்என்மருமகனுகிய அர்ச்சனமகாராஜனே நீர் தீர்த்தயாத்திரைக்குவந்தவிடத்திலேஎன்மகளைவிவாகம்பண்ணிக்கொண்டு அவள்வயிற்றிற்பிறந்த பிள்ளையை எனக்குப் புத்திரசிகாரமுங்கொடுத்து இந்த பாண்டியகுலம் விளங்கும்படிச்செய்த உமக்கு ஒருதிருகுசொல்லலாமா மகாராஜனுய்ப் புண்ணியதீர்த்தயாத்திரைப்போய்வாரும் என்மருமகனே.

அர்ச்சனன்-மனையாளுக்குச்சொல்-விருத்தம்,

மாதருக்கரசேயென்கண் மணிசித்திராங்கதையேசொக்க- *
நாதருக்கன்புசெய்தின் னகாரசாளும்பிள்ளை - - - *
ஆதரவாகப்பெற்றாய் அகமகிழ்ந்தினிநானிந்த - - *
பூதலமுழுதும்யாத்திரை போய்வரச்சிலவுதாராய் - - *



வசனம்.

கேளாயென்பிராணநாயகியாகிய சித்திராங்கதையென்னுங்கண்மணியே நீஇந்தமதுரைசொக்கநாதசுவாமியையும் மீனாட்சியம்மனையும் பதிவிரதாநிலையிலிருந்து பூசைபண்ணபடியினாலே பூலோகமுழுதும் அரசாளும் பிள்ளையைப்பெற்றாய் இனி யுனக்கொருதாழ்வில்லை நான்தீர்த்தயாத்திரைப்போய்வருகிறேன் சிலவுதாராய்பெண்ணே.

சித்திராங்கதை தன்நாயகனுக்குச்சொல்-விருத்தம்.

புண்ணியதீர்த்தமாடப் போவதேகருமமின்றிப் - - - *
கெண்ணிநீருரைத்தவார்த்தைக் கெதிர்மொழிபேசமாட்டேன்
கண்மணிவிழிபெப்போதுங் காண்பேனெம்பிராணநாத
மண்ணினில்யாத்திரைசென்று வந்தெனையாட்சிப்பீரே ... *

வசனம்,

கேளும்என்பிராணநாதா உமது திருவுளத்தில் தீர்த்தயாத்திரைக்குப்போகவேணுமென்று எண்ணமிருந்தால்அடியாள்தற்கொரு திருகுசொல்லப்போமோ இனிஎந்தக்காலம்உமதுதிருவுருவைக்காண்பேனே சுகமாய்ப்போய்வந்து அடியாளை இரட்சியும் என்சுவாமி.

அர்ச்சனன்-தனதுகுமாரனுக்குச்சொல்-விருத்தம்.

அப்பனேயிங்குவாடா அன்னைலேவாடாசொல்லும்......*
பப்புருவாகனனேவாடா பாண்டியாவாடாஇங்கே - - *
எப்படியுன்னைநான்விட் டேகுவேன்தீர்த்தயாத்திரை - - *
செப்பெனப்போகவேணுங் கொஞ்சியோர் முத்தந்தாடா

வசனம்,

அப்பாமகனே பப்புருவாகனா இங்கேவாடாஎப்படியுன்னை நான்பிரிந்திருப்பேன் மகனே சீக்கிரமாய்த் தீர்த்தயாத்திரைப்போய்வருகிறேன்ஒருமுத்தங்கொடடாமகனே.

பொது-விருத்தம்.

இந்தவிதமகளையெடுத் தணைத்துக்கொஞ்சி - - *
பேர்திறைசித்திராங்கதைசெங் கையிலீந்து ... *
அந்தணன்போல்வேஷங்கொண் டர்ச்சனனும்போனான்
ஆதிசிவன்றன்னருளால் வயதோரைந்தில் ... ... *
சந்ததியுஞ்சகலகலைக் கியானந்தேர்ந்து - - - *
தனுப்பரிட்சைகளுமறிந்து தனஞ்செயன்போல் *
வித்தைபெயர்ப்பப்புருவா கனனென்றுங்க - - *
வெளிவந்தான் அனைவருக்கும் விதந்தனே - *

வசனம்,

இவ்விதமாக மகனைப்பெற்றெடுத்துக்கொடுத்துக் குலவிழுந்தமிட்டு சித்திராங்கதைகையில் கொடுத்துவிட்டு பிராமணவேஷங்கொண்டு அர்ச்சுனமகாராஜன் யாத்திரைப்போனபின்பு சொக்கநாதசுவாமிதிருவடியினாலே பப்புருவாகன் ஐந்துவயதிலே சகலகலையும்வில்வித்தையும் அஸ்திரப்பரிட்சையும் கற்றுக்கொண்டு வில்விஜயனைப்போலே சபைக்குவருகிறவிதங்காண்க,

பப்புருவாகனன்-சபைக்குவருகிற- தரு-இ ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி,

தாம்தாம்தகஜெம்தரிகிடதக-திம்தாதில்லானாஜெம்தரி … *
தகணகஜெம்தரிததிமிதகிடதக … … - *
தகஜெணுதகதிமிதகதிங்கணத்தோம் … … *
பப்புருவாகனன்வந்தான் இளம்பருவ(பப்புருவாகனன்வந்தான்)

அநுபல்லவி,

தற்பரனருளினால்-சகலகலை - - - - படித்து
வெற்பெனமலர்க்கையில்-விளக்குஞ்சிலை… பிடித்து(பப்)

சரணங்கள்,

உச்சிக்கொண்டையுந் … துலங்க-அதில்வெண்முத்து
குச்சம்அண்டையில் … விலங்க நல்ல
விச்சித்திரமாகச்சந்திரவிம்பவதனமின்ன
வச்சிரமணியாரங்கள் மார்பில்திகழ்ந்தொளிர்ன. (பப்புரு)
சித்திராங்கதைகண் … - களிக்க-இவனழகை
சித்தஜனுங்கண் … … டொளிக்க நவ
ரத்தினகுண்டலங்களும் நட்சத்திரம்போ … லதிக்க
இத்தலத்திலிவனுக்கீ … டில்லையென்றெங்கும் துதிக்க(பப்)
தண்டைச்சதங்கைகள் - … கஞ்ச-மலர்ப்பதத்தில்
வெண்டயங்களும் … - கொஞ்ச-தனச்சிகாரம்
கொண்டமதுராப்பாண்டியன் குலமுமென் மேலும்வாழ
அண்டையில்மந்திரிகுமாரர் அனைவரும்புடைசூழ (பப்)

பப்புருவாகனன்சொல் போற்றிவிருத்தம்,

நாட்டைமூன்றுடையசொக்க நாதனேபோற்றிநற்செங் *
கூட்டநவமணியின்மீது குயிலெனமொழியேபோற்றி - - - *
கோட்டமார்மதுரையாளுங் குரிசிலேபோற்றியென்றன் *
பாட்டனேபோற்றிபோற்றிப் பாண்டியபூபதியேபோற்றி,

வசனம்.

சொக்கநாததிருநாமியாய் விளங்காநின்ற சொக்கநாதசுவாமியே சரணம்-ஸ்ரீ…கினைப்பொருந்திய ஆதிசேஷன்மேற் பள்ளிகொ



ள்ளும்ஸ்ரீமந்நாராயணமூர்த்தியேசரணம்- நாட்டுவளமைமிகுந்தமதுரைப்பட்டணத்தையரசாளும், என் பாட்டனாகிய பாண்டியமகாராசனேசரணம்,

இராஜன்பப்புருவாகனனுக்குச்சொல்-வாழி-விருத்தம்

கப்பிரமன் ஐயனைப்போலக் கருணைவெடுத்தோய்வாழி *
இப்பிரபுஞ்சத்தையாள இசைந்தசந்ததியேவாழி- - … *
கற்புருமாதுசித்திராங் கதையின்கண்மணியேவாழி… - *
பப்புருவாகனனேவாழி பார்த்திபன்மகனேவாழி…… *

பப்புருவாகனன்-பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்,

பார்த்திபன்மகனியென்றும் பாட்டனேயெனதுதந்தை *
கீர்த்திப்பிரதாபமென்ன செறிபெறும்அவர்தானமிதே - *
நாற்றிசையாகசெய்ய நான்பாண்டியனுனதென்ன… - *
போற்றிசெப்படியேன்கேழ்க்கப் புகலுவீர்புகலுவீரே - *

வசனம்

கேளும் என்னைப்பார்த்திபன் மகனென்றுசொன்ன பாட்டனேயெனதந்தை கீர்த்திப்பிரதாபமென்ன அவரெங்கேபோனார் மேலும்இவ்வுலகையாள நான் பப்புருவாகன் பாண்டியனுனதென்ன அடியேனுக்குத்தெரியச்சொல்லவேணும்- ஐயா-

இராஜன் பப்புருவாகனனுக்குச்சொல்-அகவல் இ-ம்-தோடி

ஒப்பொருவர்களை புகாக்கொண்டுவெழில்சேர் - *
பப்புருவாகனனே பகருவேன்கேளாய் - … *
இந்திரப்பிரஸ்தத்தில் இருக்குமைவர்களில் … *
இந்திரன்மகனென வியம்பும்அர்ச்சுனனும் … *
அந்தணவேஷங்கொண் டியாத்திரையாய்மதுரை … *
வந்தவனென்றன் மகளைவிருந்து - … *
சித்திராங்கதையைத் திருமணஞ்செய்து - *
புத்திரசிகாரம் புரிந்தவர்மற்ற - … *
யாத்திரைசெய்ய வவர்போனாரென்றன் - *
கோத்திரம்விளங்கக் குழந்தைநீயப்பா - *

பப்புருவாகனன்சொல்-விருத்தம்.

புத்திரசிகாரம்-புரிந்தவென்றந்தை - *
உத்திரவின்படியில் - வுலகையான்வேனோ- *

இராஜன்-பப்புருவாகனனுக்குச்சொல்விருத்தம்

ஆறுவேலெனச்ற வப்பனேவாட - … *
வேறுகொண்ட விஜயன்கண்மணியே - *

நீருலகோர்குடை நீழலிற்செல்வ … *
நாளும்மனுநாதனாயவேயே - *

பப்புருவாகனன் பாண்டியனுக்குச்சொல்-விருத்தம்.

தருகுவீரென்றன் றட்சணைம்நானே … *
திருகுசொல்லாமல் செங்கோலுமுடியும் … *
அருகுவீற்றிருக்கும் அரசரும்படையும் … … *
ஒருகுறையில்லாமல் உமக்களித்தேனே … … *

பட்டாபிஷேகத்தருணம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி,

மகுடாபிஷேகங்கொண்டான்-பப்புருவாகனன் … *
மகுடாபிஷேகங்கொண்டான் … *

அநுபல்லவி.

மகுடாபிஷேகங்கொண் … டான்
மாநிலம்புகழ்விசய … பின்
மகிபதியெனவே … தன்
மதுரையாளப்புகழ் … பொன்(மகு)

சரணங்கள்.

விஜயன்றன்குமர்முதல் மேளவாத்திய - முழங்க
விஜயன்மைந்தனென்ற திசையெங்கணும் - முழங்க(மகு)
வேதியர்களும்ஆசி விளம்பப்புத்தி - தகழக்க
நீதிமந்திரிகுமாரர் நெருங்காத்தினமி ழைத்த(மகு)
சூரர்களுமைந்தருவும் மருமலர்மழை - பெய்ய
நகருமடியிணைப் பாவியேநதி - செய்ய(மகு)

பப்புருவாகனன் கடவுளைப்போற்றி-விருத்தம்,

திங்கள்மும்மாரிபெய்ய தேசங்கள்செழிக்கவேணும் … *
திங்கள்தன்மாபிலேதன் செங்கோலும்வாழவேணும் - *
திங்கள்வெண்குடையினீழற் சென்றாசாளவேணும் - *
திங்கள்செஞ்சடையாவுன்றன் திருவடிபோற்றிபோற்றி … *

வாழிவிருத்தம்.

தேர்மதியரசர்வாழி கங்கையைத்தரித்தோர்வாழி … … *
பதியரசர்களும்வாழி பாவலர்நாளும்வாழி … … *
துதிசெயும்பப்புருவாகன் தொன்மரபோரும்வாழி … … *
நிதமிதைப்படித்தோர்கேட்டோர் நீடூழிவாழிமாதோ … *

---

# சித்திராங்கதைவிலாசம்,

முற்றிற்று.